

வாழ்வை மீட்கும் குரல்

பாராளுமன்ற உரைகள் 1995-1998

முருகேசு சந்திரகுமார் (பா.உ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வை மீட்கும் குரல்

பாராளுமன்ற உரைகள் 1995 - 1998

முருகேசு சந்திரகுமார் பா.உ.
பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வை மீட்கும் குரல்

பாராளுமன்ற உரைகள் 1995 - 1998

முருகேசு சந்திரகுமார் பா.உ.
பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்-14

Vazhvai Meedkum Kural
Parliment Speach 1995 - 1998
© Murugesu Chandrakumar
First Edition : May, 2015
Published by : MAHIZH
754, Kanagarasa Road
Thirunagar North, Kilinochchi
Sri lanka
Cover art : Mullaikkonesh
Layout : tg
Printed by : AJ Prints
Price - 200.00

வாழ்வை மீட்கும் குரல்
பாராளுமன்ற உரைகள் 1995 - 1998
© முருகேசு சந்திரகுமார்
முதற்பதிப்பு : மே 2015
வெளியீடு : மகிழ்,
754, கனகராசா வீதி,
திருநகர் வடக்கு,
கிளிநொச்சி, இலங்கை.
முகப்போவியம் : முல்லைக்கோணேஸ்
நூல்வடிவம் : ரீஜி
அச்சாக்கம் : ஏஜே பிறின்ட்ஸ்
விலை : ரூ. 200/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரிலும் போராட்டத்திலும் இறந்தோருக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசு சந்திரகுமார் பா.உ.
பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

முருகேசு சந்திரகுமாரின் பாராளுமன்ற உரைகளை பாராளுமன்றப் பதிவேட்டுக்கு (Parliament hansards) அப்பால் மக்களிடம் எடுத்துச் செல்வதற்கான முயற்சியே இந்த நூல். 1995 - 1998 காலப்பகுதியில் ஈழத்தமிழர்கள் மிக நெருக்கடியான காலகட்டத்தில் வாழவேண்டி யிருந்தது. சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சி நடந்த அந்தக் கால கட்டத்தில் விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்காக என்றபேரில் தமிழ்ப் பிரதேசங்களின் மீது மிகக் கடுமையான இராணுவ நடவடிக்கைகளை சந்திரிகா அரசாங்கம் தொடர்ச்சியாக மேற்கொண்டது. யாழ்ப் பாணம் மீதான படையெடுப்பு (றிவிரஸ நடவடிக்கை), அதைத்தொடர்ந்த யாழ்ப்பாண இடப்பெயர்வு, யாழ்ப்பாணத்தைப் படையினர் கைப் பற்றிய பின்னர் அங்கே ஏற்பட்ட விளைவுகள் - செம்மணிப் புதைகுழி விவகாரம், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் தொடர்ந்து நிகழ்ந்த கிளிநொச்சி மற்றும் வன்னி மீதான படைநடவடிக்கைகள் (சத்ஜெய, ஜெயசிக்குறு) எனத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தினால்தமிழ்மக்களின்வாழ்க்கைமிகப்பெரியநெருக்கடிகளையும் இழப்புகளையும் சந்தித்தது. இந்த நிலையில் பாராளுமன்றத்தில் தமிழ்மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதி என்றவகையில் ஒலித்தவையே முருகேசு சந்திரகுமாரின் இந்த உரைகள். இவற்றுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவமும் அடையாளமும் உண்டு. எனவேதான் இவை இன்று நூலுருவாக்கம் பெறவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தின.

ஏற்கனவே 'உரிமைக்கும் உயர்வுக்கும்' என்ற தலைப்பில் முருகேசு சந்திரகுமாரின் பாராளுமன்ற உரைகள் அடங்கிய ஒரு நூலினை கடந்த ஆண்டு வெளியிட்டிருந்தோம். இது அவருடைய இரண்டாவது நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் பல்வேறு துறைசார்ந்த சிந்தனைகளையும் குரல்களையும் உரையாடற் பரப்பிற்குக் கொண்டு வருவது அவசியம். அப்பொழுது தான் பன்முகத்தன்மைக்கும் ஜனநாயகத்தன்மைக்கும் இடமளிக்கும் ஒரு பண்புச் சூழல் உருவாகும். இது தமிழுக்கு மிக மிக அவசியமானது. இன்று எமக்கு வெளிச்சக்திகளே ஜனநாயகம், பன்மைத்துவம், நல்லிணக்கம், சமஸ்டி, பிரச்சினைகளுக்கான தீர்வுமுறைகள் போன்ற வற்றைப் போதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்த அளவிற்தான் இலங்கையின் அனைத்துச் சமூகங்களும் உள்ளன. தமக்குள் இருக்கும் அதிகாரப் போட்டியில் காட்டும் அக்கறையின் அளவிற்கு தம்மை உலக அரங்கிலும் உள்நாட்டிலும் வளப்படுத்தி, வலுப்படுத்திக்கொள்ளும் அக்கறை பெரும்பான்மையானவர்களிடம் இல்லை. படிப்பறிவில் கூடுதற் சுட்டியைக் கொண்டவர்கள் இலங்கையர் என்று சொல்லப் படுகிறதே தவிர, கற்றறிந்த சமூகமாக, சிந்தனையில் உயர்ந்த மக்களாக இலங்கையர்கள் இல்லை என்ற நிலையே உள்ளது.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பிந்திய காலமான சமகாலத்திற்கூட அக நெருக்கடியும் முரண்களுமே அதிகரித்துக்காணப்படுகின்றன. இனமுரண்களும் சமூக முரண்களும் அதிகமதிகம் உள்ள நாடாக இலங்கை உள்ளது. இந்தப் போக்கினால் சிறுசமூகங்கள், சிறுபான்மைச் சமூகங்கள், சிறுபான்மைத் தேசிய இனங்கள் என்பவை மட்டுமல்ல, பெரும்பான்மைச் சமூகங்களும் ஆதிக்கத்தரப்பினரும் கூடப் பாதிக்கப் பட்டுள்ளனர். உள்நாட்டுக் கிளர்ச்சிகளாலும் போரினாலும் லட்சக் கணக்கான மக்கள் அனைத்துச் சமூகங்களிலும் பலியாகியுள்ளனர். எனினும் இன்னும் அனுபவ அறிவு யாருக்கும் சித்தித்ததாக இல்லை. இனரீதியாகவே ஒவ்வொருவரும் சிந்திக்கின்றனர். ஒவ்வொரு தரப்பும் இனத்துவ அடிப்படையிலேயே செயற்படுகின்றன.

இந்த நிலையில்தான் நாம் பன்முகத்தன்மையுடன் தொடர்ச்சியாக உரையாட வேண்டியுள்ளது. அதற்கான முயற்சியாக பல்துறைசார்ந்த நூல்களையும் மகிழ் பதிப்பகம் வெளியிட்டு வருகிறது. இதைப்போல வேறு நிலைப்பட்ட அரசியற் சிந்தனைகளையும் நாம் வரவேற்கிறோம். ஒருஉரையாடற்தொடர்ச்சிக்குஅனைத்துக்குரல்களும்முக்கியமானவை. அதுவே நமக்குள் வெளிச்சத்தை அதிகம் உள்ளொளியாகப் பாய்ச்சும்.

நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

01 வடக்கு மீதான பொருளாதார தடை நீக்கம் வர்த்தமானி அறிவித்தலாக மட்டும் இருக்க கூடாது. 1

02 உயர் கல்வியில் தமிழ் மாணவர்கள் அநீதிக்கு உள்ளாக்கப்படுவது தொடர் கதையாகவே உள்ளது 9

03. அதிகளவு பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு வடக்கு - கிழக்கு மக்களின் உயிர், உடமைகளை அழிவுக்குள்ளாக்கியே வருகிறது 19

04. பொலீஸாரும், படையினரும் தமிழர்கள் அனைவரையும் சந்தேகத்திற்குரியவர்களாக நோக்குகின்றனர் 25

05. மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு மீண்டும் அபகரிக்கும் வகையில் செயற்படுவது வருத்தத்துக்குரியது 35

06. தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் 43

07. வடக்கு - கிழக்கு கல்வித்துறையில் நிலவும் ஆளணி பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படவேண்டும் 53

08. வடக்கில் சிவில் அதிகாரிகளாக, இராணுவ அதிகாரிகளை நியமிக்க எடுக்கும் முயற்சி, சிவில் நிர்வாகத்தைச் சிதைப்பதாக அமைந்துவிடும் 61

09. வடக்கு - கிழக்கு கல்வியில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் 67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் 77

11. செம்மணிப் புதைகுழி விவகாரம் பற்றிச் சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை அமைப்புக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அரசு அலட்சியம் செய்கிறது 87

12. தமிழர்களின் தாயக பூமியில் பறிபோகும் பிரதேசமாக திருகோணமலை காணப்படுகிறது 94

13. தமிழ்ப் பத்திரிகையாளர்கள் காரணமின்றிக் கைது செய்யப்படுவது தடுத்து வைக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் 106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மீதான பொருளாதார தடை நீக்கம் வர்த்தமானி அறிவித்தலாக மட்டும் இருக்க கூடாது

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

இந்த வரவு செலவுத் திட்டம் மீதான விவகாரத்திலே எனது கட்சியின் சார்பில் இந்த உயர் சபையிலே எனது கன்னிப் பேச்சை நடத்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். நீண்டகாலமாக நடைபெற்று வந்த கொடிய யுத்தம் தற்போது ஓய்ந்திருக்கின்றது. இந்த நிலை தொடர்ந்தும் நீடிக்க வேண்டும், நிரந்தர அமைதி தோன்ற வேண்டும் என்பதுதான் முழு நாட்டு மக்களின் விருப்பார்வமாகும். அரசாங்கமும் அந்த விருப் பத்தைக் கொண்டிருக்கின்றது என்றே கூறிவருகின்றது. ஆனாலும், இந்த வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனங்களுக்காக நிதியொதுக்கீடு அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. யுத்தம் இல்லாத சூழலில் கூட, பாதுகாப்புச் செலவீனங்களுக்காக ஒரு குறிப்பிட்ட தொகை நிதி ஒதுக்கப்பட்டேயாகவேண்டும் என்பதை நாமறிவோம். ஆனால், தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் பாதுகாப்பு நிதி தேசிய அபிவிருத்தியை மிகவும் மோசமாகப் பாதிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது என்பதை வேதனையோடு நோக்க வேண்டியிருக்கின்றது. இதேவேளையில், பாதுகாப்புச் செலவீனங் களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பது யுத்தம் மீண்டும் தனது அசுர முகத்தைக் காட்டப்போகிறதோ என்கின்ற சந்தேகத்தையும் பரவலாக ஏற்படுத்தியிருக்கின்றது.

புலிகளோடு அரசாங்கம் நடாத்துகின்ற பேச்சுவார்த்தையின் முடிவுகள் நல்ல விதமாக அமைய வேண்டுமென்பதுதான் எமது கட்சியின் விருப்பார்வமாகும். ஆனால், புலிகள் மனந்திறந்த போக்கோடு நடந்து கொள்வார்களா, என்ற சந்தேகம் எமக்கிருக்கிறது. போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்ப்பு நேரத்திலும் ஏனைய தமிழ் அமைப்புகளை நோக்கி ஜனநாயக விரோதமான கருத்துக்களைப் புலிகள் தெரிவித்துள்ளார்கள். சமாதானத்திற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் இந்த அரசாங்கத்திற்கு, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஆதரவு வழங்கும் தமிழ் அமைப்புக்கூட தேசவிரோதமானவை என்று யாழ்ப்பாணத்திலே 26.01.1995 அன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஏனைய தமிழ் அமைப்புகளையோ, தமது நோக்கங்களுக்குச் சவாலாக அமையக்கூடிய ஏனைய அரசியல் சக்திகளையோ சகித்துக்கொள்ள முடியாத மனோநிலையில்தான் புலிகள் இருக்கின்றார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, அரசியல் ஜனநாயக உரிமைகளை உத்தர வாதப்படுத்தக்கூடிய சுதந்திரமான ஜனநாயக சூழல் ஒன்றுக்குப் புலிகள் எவ்வளவு தூரம் முன்வருவார்கள் என்பதும் சந்தேகத்துக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது. அதேசமயம், போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் மீண்டும் ஒரு போருக்கு தயாராகக்கூடிய நிதி சேகரிப்பு, மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபட்டிருப்பதையும் வடக்கு - கிழக்கில் உள்ள மக்கள் அறிந்திருக்கின்றார்கள். ஆகவே, "யுத்தத்தை நிறுத்த வேண்டும், யுத்த சுமைகளை மக்கள் மீது திணிக் கக்கூடாது" என்கின்ற கருத்தைப் புலிகளும் ஏற்றுக்கொள்ளும் போதுதான் ஒரு ஆரோக்கியமான சூழல் உருவாக முடியும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, பொருளாதாரத் தடை தளர்வு போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டதை நாம் வரவேற்கின்றோம். சமாதானத் தீர்விற்காக அரசின் முன்முயற்சியாக இவற்றை நாம் நோக்குகின்றோம். ஆனால், பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டாலும்கூட, புலிகளின் கட்டுப்பாடுள்ள பகுதிகளில் பொருட்களின் விலையைத் தீர்மானிப்பது புலிகளின் முடிவைப் பொறுத்த விடயமாகவே இருக்கின்றது. அத்தியாவசியப் பொருட் களின் விலைகள் அதிகரிக்கக் கூடாது என்பது முதல், சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொள்ளுகின்ற எந்தவொரு நடவடிக்கையும் வடக்கே மக்களைச் சென்றடைய முடியாத நிலை காணப்படுகின்றது.

வடக்கே மக்கள் புலிகளின் தனித்த நிர்வாகத்திற்குள் இருக்கக்கூடிய நிலையில் அரசாங்கம் மேற்கொள்ளும் எந்தவொரு நிவாரண நடவடிக் கையும் அந்த மக்களை நேரடியாகச் சென்றடைய முடியாது. இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை மாற்ற வேண்டுமானால் அரசாங்கம் புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தையில் பொருள் விநியோகம், நிர்வாகம் குறித்த முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். தற்போது அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களை வடக்கே அனுப்பி வைத்தாலும் அவற்றை எவ்வாறு விநியோகிப்பது என்கின்ற முடிவை புலிகள்தான் மேற்கொள்கின்றார்கள். எவ்வளவு பெறுமதியான பொருள்கள் வடக்கே அனுப்பி வைக்கப் படுகின்றன என்ற புள்ளிவிபரங்கள்தான் அரசாங்கத்திடம் இருக் கின்றன. அந்தப் பொருட்கள் எங்கே சென்றடைகின்றன என்ற விபரத்தை அரசாங்கம் அறிந்து கொள்ளக்கூடிய நிலையில்லை.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, பொருள் விநியோகம் மற்றும் வடக்கே அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நீக்கு தல் போன்ற நடவடிக்கைகளில் படையினரின் ஒத்துழைப்பு முக்கிய மானதாகும். தடை நீக்கம் செய்யப்பட்ட பொருட்களை வடக்கே கொண்டுசெல்வதில் தடை முகாம்களில் இருக்கக்கூடிய தடங்கல்கள், கால தாமதங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். பொருளாதாரத் தடை தளர்வு என்பது வெறும் வர்த்தமானிப் பிரகடனம் மட்டுமல்ல, வர்த்தமானியின் மூலம் தடை நீக்கப்பட அனைத்துப் பொருட்களும் வடக்கே மக்களிடம் எவ்வித தடங்கலுமின்றிச் சென்றடையக்கூடிய சாதாரண நிலைமை தோற்றுவிக்கப்படுதலே, பொருளாதாரத் தடை நீக்கத்தின் பயனை மக்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமையும். இல்லையெனில், அது வெறும் பிரகடனங்களுடன் மட்டுமே நின்றுவிடும். தடை முகாம்களில் செய்யப்படும் காலதாமதங்கள் சிரமத்தை ஏற்படுத்துகின்ற சோதனை நடவடிக்கைகளும் அத்தியா வசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் காரணி களாக அமைகின்றன.

இன்னுமொரு காரணி, போக்குவரத்தில் ஏற்படும் சிரமமாகும், யாழ் குடாநாட்டுக்கான தரைப் போக்குவரத்து என்பது விரைவில் சரிவரக்கூடிய ஒன்றாக எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால், தரைப் போக்குவரத்துப் பாதை திறக்கப்படுமானால், நாம் நிச்சயமாக மகிழ்ச்சியடைவோம். எனவே, தரைப்போக்குவரத்துப் பாதை திறக்கப்படும்வரை யாழ். குடாநாட்டு மக்களின் போக்குவரத்திற் கான மாற்று ஒழுங்கை அரசாங்கம் முன்வந்து செய்து கொடுக்க வேண்டும். தற்போது கிளாலிக் கடலேரியூடாகப் போக்குவரத்து நடைபெறுகின்றது. ஆனாலும், போதிய படகு வசதிகள் அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. சேறும், சகதியும், கடல்நீரும் உடைகளையும், உடல் களையும் கொண்டுசெல்லும் பொருட்களையும் தெப்பமாக நனைத்து விடுகின்றன. இந்தக் கிளாலிக் கடலேரிப் போக்குவரத்தை அரசாங்கம் அங்கீகரிக்கவில்லையே தவிர, அதனை அறிந்தேயிருக்கின்றது. எனவே, கிளாலிப் போக்குவரத்தில் பயணிகளுக்கு இருக்கக்கூடிய சிரமங் களைப் போக்குவதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, வடக்கிலே உள்ள விவசாயிகள் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் தமது வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்துள்ள நிலையில் விவசாயிகளும், தமது படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் இழந்த நிலையில் மீனவர்களுக்கும் தமது நாளாந்த வாழ்க்கையில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அங்கு விவசாயத்தில் ஈடு பட்டுள்ள மக்கள், தமது உற்பத்திப் பொருட்களை வடபகுதிக்கு வெளியே சந்தைப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றனர். யுத்த சூழ்நிலைக்கு முன்பு வடக்கிலிருந்தே பெருமளவு விவசாய உற்பத்திப் பொருட்கள் தென்னிலங்கையை நோக்கி வந்தன. வெங்காயம், மரக்கறி, புகையிலை, பழவகைகள் என்பன இலங்கையின் அநேக மக்களின் நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்ததை நாம் யாவரும் அறிவோம். இதனால், எமது தேசிய உற்பத்தி வருமானம் அதிகரித்திருந்த நிலை காணப்பட்டது. ஆனால், இன்று யுத்த நிலைமையினால், தேசிய உற்பத்தி வீழ்ச்சியும், வடக்கிலுள்ள உற்பத்தியாளர்களின் வருமான வீழ்ச்சியும் ஏற்பட்டு மக்களின் வாழ்க்கைத் தரமும் பாதிப்படைந்துள்ளன. எனவே, சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்று அக்கறை கொண்டுள்ள அரசாங்கம், வடக்கு - கிழக்கு விவசாயிகள், மீனவர்கள் ஆகியோரது துயர் தீர்க்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

இனப்பிரச்சினைத் தீர்விற்காக அனைவரும் அக்கறையோடு செயற் படுகின்ற இந்த நேரத்திலே, அந்தச் சூழலை நெருக்கடிக்குள்ளாக் கக்கூடிய சில நடவடிக்கைகளும் மற்றொரு புறத்தில் நடந்து கொண்டிருப்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக் கின்றோம். உதாரணமாக கிழக்கு மாகாணத்திலே தமிழ் பேசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்குச் சொந்தமான காணிகளில் அத்துமீறிய குடியேற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளிலும் சட்ட விரோதமான குடியேற்றங்கள் நடந்து வருகின்றன. அவற்றிற்கு எதிராக நீதிமன்ற உத்தரவுகள் பெறப்பட்டாலும் கூட, அவற்றை நிறைவேற்ற முடியாத நிலைமை அங்கு காணப்படுகின்றது. நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றும் பொறுப்பில் உள்ளவர்கள், உரிய கவனம் செலுத்த மறுக்கின்றனர். அதனால், அத்துமீறிய குடியேற்றங்களுக்கு அவர்கள் துணையாக இருக்கிறார்கள் என்றே பாதிக்கப்படும் மக்கள் கருத வேண்டியிருக்கின்றது.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டிலே மாகாண சபை முறையானது, தமிழ் பேசும் மக்களுக்கான ஆகக்குறைந்த அரசியல் அதிகாரமுள்ள அலகாகவே இன்று இருக்கின்றது. தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரப் பகிர்விற்கு முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதேநேரத்தில், மறுபக்கத்தில் கிடைத்த சிறிதளவு அதிகாரங்களும் கைமாறிப் போகுமாயின், அதை எமது மக்கள் சந்தேகக் கண்கொண்டே பார்க்க முற்படுவர். அது சமாதானத்தை வெகுதொலைவிற்கு இழுத்துச் சென்றுவிடும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் தற்போதைய நிலைபற்றி நாம் சிறிது கூறவேண்டும். 1989 ஆம் ஆண்டு பதினொரு அமைச்சுக்களுடன் இந்த வடக்கு - கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இன்று நான்கே நான்கு அமைச்சுக்களுடன், அதாவது கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, காணி - விவசாய அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு போன்ற அமைச்சுக்களுடன் இன்று எதுவித அதிகாரங்களுமின்றி அது இயங்கிக் கொண்டிருக்கின்றது. பதின்மூன்றாவது அரசியல் திருத்தச் சட்டத்தின் படி, ஏற்புடைய அதிகாரங்கள் இம் மாகாண சபைக்கு வழங்குவதில் என்ன தடை இருக்கின்றது எமக்குப் புரியவில்லை.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு அபிவிருத்தி, தொடர்ந்தும் திட்டமிட்டு ஒதுக்கப்படுகின்றது என்றும், இருந்த சிறிதளவு அதிகாரங்களும் பறிக்கப்படுகின்றது என்றும் தமிழ் பேசும் மக்கள் கருதுவார்களேயானால், சமாதானம் பற்றிப் பேசுவது பயனில்லாமல் போய்விடும். கடந்த ஐந்து ஆண்டுகளாக மத்திய அரசினால் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிபற்றிய விபரத்தினை சிறு குறிப்பாக இங்கு தருகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக "Medium Term Investment Programme" அதாவது மத்திய கால முதலீட்டுத் திட்டத்தின் கீழ் மாகாண சபையால் கோரப்பட்ட நிதித் தொகையிலும் பார்க்கத் திறைசேரியால் வழங்கப்பட்ட தொகை மிகவும் சொற்பமானதே.

1992 ஆம் ஆண்டு கோரப்பட்ட தொகை 232 மில்லியன் ரூபாவாக இருந்தும் திறைசேரியால் வழங்கப்பட்ட தொகை 141 மில்லியன் ரூபாவாகும். இதுபோன்றே 1993 ஆம் ஆண்டு கோரப்பட்ட தொகை 426 மில்லியன் ரூபாவாக இருந்தும் திறைசேரியால் வழங்கப்பட்ட தொகை 165 மில்லியன் ரூபாவாகும். 1994ஆம் ஆண்டில் கோரப் பட்ட தொகை 383 மில்லியன் ரூபாவாக இருந்தும் திறைசேரியால் வழங்கப்பட்ட தொகை 166 மில்லியன் ரூபாவாகவும் இருந்தது. 1995 ஆம் ஆண்டிற்கான கோரப்பட்ட தொகை 485 மில்லியன் ரூபாவாக இருந்தும் 191 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டது. கோரப்பட்ட தொகையில் 40 சதவீதத்திற்கு குறைவான தொகையே திறைசேரியி னால் வழங்கப்பட்டுள்ளது என்பதை இப் புள்ளிவிபரங்கள் வெளிப் படுத்துகின்றன.

அடுத்து புனர்வாழ்வுக்கென ஒதுக்கப்பட்ட நிதி அளவைப் பார்ப் போம். 1991 ஆம் ஆண்டு புனர்வாழ்வுக்கெனத் திறைசேரியினால் வழங்கப்பட்ட தொகை 1342 மில்லியன் ரூபாவாகும். 1992ஆம் ஆண்டு கோரப்பட்ட தொகை 838 மில்லியன் ரூபாவாக இருந்தும், வழங்கப்பட்ட தொகை 469 மில்லியன் ரூபாவாகும். 1993 ஆம் ஆண்டு கோரப்பட்ட தொகை 500 மில்லியன் ரூபாவாக இருந்தும் வழங்கப்பட்ட தொகை 253 மில்லியன் ரூபா மட்டுமே. 1994ம் ஆண்டு கோரப்பட்ட தொகை 500 மில்லியன் ரூபாவாக இருந்தும் வழங்கப்பட்ட தொகை 209 மில்லியன் ரூபா மட்டுமே. நடப்பு ஆண்டில் கோரப்பட்ட தொகை 421 மில்லியன் ரூபாவாக இருந்தும் வழங்கப்பட்ட தொகை 100 மில்லியன் ரூபாவாகக் குறுகியுள்ளது. 1991இல் 1342 மில்லியனாக இருந்த தொகை 1995இல் 100 மில்லியன் ரூபாவாகக் குறுகியதற்குரிய காரணத்தை "அதிகாரப் பறிப்பு" என்றே கருத இடமுண்டு. 1991 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாணங் களில் மேற்கொள்ளப்பட்ட அநேக புனர்வாழ்வு வேலைகளைத் தற்போது மத்திய அரசாங்கம் தன்னகத்தே தன்னிச்சையாக எடுத்துக் கொண்டதனையே முன்கூறப்பட்ட குறிப்பு விளக்குகின்றது. இதனையே நாம் "அதிகாரப் பறிப்பு" என்று கூறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து பிரமாண அடிப்படையிலான மூலதனத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி விபரத்தினைப் பார்ப்போம். 1992ஆம் ஆண்டு கோரப்பட்ட தொகை 530 மில்லியன் ரூபாவாகவும், 1993ஆம் ஆண்டு கோரப்பட்ட தொகை 494 மில்லியன் ரூபாவாகவும், 1994ஆம் ஆண்டு கோரப்பட்ட தொகை 260 மில்லியன் ரூபாவாகவும், 1995ஆம் ஆண்டு கோரப்பட்ட தொகை 327 மில்லியன் ரூபாவாகவும் இருந்தது. ஆனால், 1991ஆம் ஆண்டு திறைசேரியால் வழங்கப்பட்ட தொகையான 146 மில்லியன் ரூபாவே, பின் வந்த ஆண்டுகளிலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. இதனையும் ஓர் அலட்சியப் போக்காகவே கருத வேண்டியுள்ளது. அரச நிதியாணைக் குழுவே மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளைச் செய்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

இது நாள்வரை மாகாண அரசின்கீழ் செயற்பட்டுவந்த பிரதேச செயலகங்கள், விவசாய சேவை நிலையங்கள், வவுனியாவில் இயங்கி வரும் விவசாயத் திணைக்களங்களுக்குச் சொந்தமான விவசாயப் பயிற்சி நிலையம், பிரதான பாடசாலைகள் ஆகியவையும், கிராம சேவகர்களின் நிர்வாகமும் மத்திய அரசின்கீழ் செயற்படத் தொடங் கியுள்ளன. இந்நிலையானது தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படல் என்ற உறுதிமொழியின் மீது சந்தேகம் கொள்ள வைக்கின்றது.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

தேசிய அபிவிருத்தியை, முன்னோக்கிய பாதையில் கொண்டு செல்ல வேண்டும் எனும் அக்கறை எம் அனைவருக்கும் இருக்கின்றது. நாட்டின் தேசிய அபிவிருத்தியிலே முக்கிய பங்கு வகிக்கக்கூடிய வடக்கு - கிழக்கிலே தேசிய அபிவிருத்திக்கான பாதை மூடப்பட்டுக் கிடக்கின்றது. யுத்தத்தை மட்டுமே இதற்கான காரணம் என்று கூறி விட முடியாது. ஏனென்றால், வடக்கு - கிழக்கில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் கூட தொழிற்றுறை முன்னேற்றங்கள் இன்னும் ஏற்படவில்லை. இந்த நாட்டிலே யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னரே தொழில் வளர்ச்சிக்கான தொழிற்சாலைகளை உருவாக்கு வதில் வடக்கு - கிழக்கு புறக்கணிக்கப்பட்ட நிலையே நிலவியது. ஆனால், யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதனைக் காரணமாக வைத்தே வடக்கு - கிழக்கில் இயங்கிவந்த தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா நடத்தப்பட்டன. இதனால், வடக்கு - கிழக்கிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களுக்கு இருந்த குறைந்தபட்ச மான வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது.

மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாகவும் வடக்கு - கிழக்கில் தொழில்களை ஆரம்பிப்பதற்கு, குறிப்பாக அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாகவும் வடக்கு - கிழக்கில் உள்ள இளைஞர் - யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். நன்றி வணக்கம்.

17 பெப்ரவரி 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் கல்வியில் தமிழ் மாணவர்கள் அநீதிக்கு உள்ளாக்கப்படுவது தொடர் கதையாகவே உள்ளது

ஆம், கௌரவ தவிசாளர் அவர்களே,

தமிழ் பேசும் மக்களின் கல்வி தொடர்பாகவும் இன்றைய நிலையிலுள்ள பிரதான பிரச்சினைகள் குறித்தும் சில கருத்துக்களைத் தங்களுடைய ஆழ்ந்த கவனத்திற்கும் இச் சபைக்கும் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

வரலாற்றுக் காலகட்டங்களில் இருந்து தமிழ் பேசும் மக்கள் தங்களுக்கென்று தனித்துவமான கல்விப் பாரம்பரியத்தை கொண்டுள்ளார்கள். கல்வியே தங்களின் வாழ்வின் உயிர்மூச்சாகக் கொண்டுள்ள இம்மக்கள், கல்வி சார்ந்த துறைகளில் இன்று மிகுந்த புறக்கணிப்பிற்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

இரண்டு தசாப்தங்களாக, இந்த நாட்டில் நடைபெற்று வந்த யுத்தம் காரணமாக இந்த நாடு அனைத்துத் துறைகளிலும் பாரிய பின்னடைவையே சந்தித்து வந்துள்ளது. பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், மனித விழுமியங்கள், ஆக்கமுயற்சிகள், கலாசாரச் சீரழிவுகள் என்பனவற்றில் அதிக இழப்புக்களை இந்த நாடு சந்தித்துள்ளது. இவ் இழப்பானது ஒரு தேசத்தின் நல்வாழ்வின் மீதான இழப்பாக இருந்தபோதிலும், யுத்தம் கொடூரமாக நடைபெற்று வந்த வடக்கு - கிழக்கிலேயும் அப்பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்வின் மீதேயும் தான் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தியதை அனைவரும் அறிவர். நவீன உலகில் எந்தவொரு சமூகமும் முன்னேற வேண்டுமானால் அது கல்வியையே தனது அத்திவாரமாகக் கொள்ளவேண்டும் என்ற ஐதார்த்தத்திற்கு, இன்று வடக்கு - கிழக்கில் நிலவும் கல்வி மீதான நெருக்கடிகள் முற்றிலும் முரணானதாகவே காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேச மன்னர் காலங்களில் தென்னிலங்கையில் சிங்கள அரசுக்களில் பௌத்தத்துடன் இணைந்த வகையில் "பிரிவென" க்களிலும் பௌத்த மடாலயங்களிலும் கல்விப் போதனை இருந்துள்ளது. இது போலவே யாழ்ப்பாண இராச்சியத்திலும் வன்னி இராச்சியத்திலும் சைவ சமயத்துடன் இணைந்த திண்ணைக் கல்வி முறை வளர்ந்து வந்துள்ளது. அந்நியர் வருகையின் பின்னர், குறிப்பாக பிரித்தானியர் வருகையின் பின்னர், இலங்கை முழுவதும் பரவலாகக் கல்லூரிகள் அமைக்கப்பட்டன. நிர்வாக சேவையில் சுதேச மக்களைப் பயிற்றுவிப்பதற்காக ஆங்கிலக் கல்வி முறை ஊக்குவிக்கப்பட்டது. குறிப்பாக, கரையோரப் பிராந்தியத்திலே ஆங்கிலக் கல்வி வளர்ச்சியுற்றது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, காலி, கொழும்பு, போன்ற பிரதேசங்களிலும் ஏராளமான பாடசாலைகள் அமைக்கப் பட்டன. ஆனாலும், ஒப்பீட்டளவில் ஏனைய பிரதேச மக்களை விட யாழ்ப்பாணம் போன்ற பிரதேச மக்களே கல்வியில் வேகமான வளர்ச்சியை எய்தினர். இதற்கான பிரதான காரணம், ஏனைய பிரதேசங்களைவிட இயற்கை வளம் குன்றியதும் வரண்ட பிரதேச முமாக இப் பிரதேசங்கள் காணப்பட்டதே. இதனால்தான் இவர்கள் கல்விக்கு மிக முன்னுரிமை வழங்கினார்கள். சுதந்திரத்துக்கு பின்னர் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கவினால் சுதேச மொழிக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்படும் வரையில், கல்வியில் மிகவும் முன்னணியில் இருந்தவர்கள் இவர்கள்தான். வடக்கு மக்கள் கல்விக்கு வழங்கும் முன்னுரிமை இன்றுவரை குறைவடையவேயில்லை. மிக மோசமான யுத்த சூழ்நிலை நிலவிய காலங்களில்கூட பாடசாலைகளும் பல்கலைக்கழகமும் இயங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

முன்னணியில் இருந்து வந்த தமிழர்களது கல்வியினைப் பின்னடையச் செய்வதில் கடந்த காலங்களில் திட்டமிட்ட, மிக மோசமான செயற் பாடுகள் பல மேற்கொள்ளப்பட்டிருந்தது அனைவரும் அறிந்ததே. ஏனைய பிரச்சினைகளுடன், கல்வியில் காட்டப்பட்ட பாரபட்சமும் நெருக்குதலுந்தான் ஆயுதப் போராட்டத்திற்கு காரணமாக அமைந்தன என்பதும் அனைவரும் அறிந்ததே. இன்று யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்து சகல மக்களிற்கும் சுபீட்சமான வாழ்வு வழங்க, சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் இந்த அரசாங்கம், வடக்கு - கிழக்கின் கல்விக்கும் அதற்கேற்பட்டுள்ள பின்னடைவுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து மீளக்கட்டியெழுப்புவதற்கும் உரிய ஆக்கபூர்வமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே. வடக்கு - கிழக்கில் யுத்தம் ஆரம்பித்த பின்னர், ஏராளமான மாணவர்கள் ஆயுதப் போராட்டத்தை நோக்கி திசைதிருப்பப்பட்டனர். ஆயிரக்கணக்கான மாணவர்களும், புத்திஜீவி களும், கல்விமான்களும் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லீம் மாணவர்கள் உள்நாட்டிலும் தென்னிந்தியாவிலும் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். சமூகப் பற்றும் ஆற்றலும் மிக்க இளம் சந்ததி ஒன்று யுத்தம் காரணமாக நாளாந்தம் இறந்து கொண்டிருக்கின்றது. இதேவேளை, வடக்கு - கிழக்குப் பாடசாலைகளில் நூல்கள் இல்லை. ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. மின்சாரம், குடிநீர் வசதிகள் இல்லை. கட்டட வசதிகள் இல்லை. இருக்கும் கட்டடங்களை காலாகாலத்தில் பராமரிப்பதற்கும் பழுது பார்ப்பதற்கும் வசதிகள் இல்லை. இராணுவ நடவடிக்கைகளின் போது பாடசாலைகளின் மீது குண்டுகள் வீசப்பட்டு பல பாடசாலைகள் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன. மரங்களின் கீழே அமர்ந்து கல்வி கற்க வேண்டிய அவல நிலைக்கு மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அரச கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசப் பாடசாலைகள் பலவற்றில், குறிப்பாக கிழக்கில், பாடசாலைகளின் ஒரு பகுதி அல்லது முழுவதும் இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது. இதனால், இராணுவமயமாக்கல் இடம் பெற்று, கல்வி கற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கௌரவ தவிசாளர் அவர்களே, வடக்கு - கிழக்கில் கல்வி கற்பித்தலுக் கான ஆசிரியர் பற்றாக்குறை விபரத்தினை நோக்கும் போது எமக்கு அதிர்ச்சி தரும் தரவுகளேயுள்ளன. மாவட்ட ரீதியாக வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறை விபரத்தினை இங்கு பார்ப்போம். யாழ்ப்பாணக் கல்வி மாவட்டத்தில் 1694 ஆசிரியர் வெற்றிடங்களும், கிளிநொச்சி கல்வி மாவட்டத்தில் 767 ஆசிரியர் வெற்றிடங்களும், முல்லைத்தீவு கல்வி மாவட்டத்தில் 538 ஆசிரியர் வெற்றிடங்களும், வவுனியா கல்வி மாவட்டத்தில் 500 ஆசிரியர் வெற்றிடங்களும், மன்னார் கல்வி மாவட்டத்தில் 308 ஆசிரியர் வெற்றிடங்களும், திருகோணமலை கல்வி மாவட்டத்தில் 412 ஆசிரியர் வெற்றிடங்களும், மட்டக்களப்பு கல்வி மாவட்டத்தில் 978 ஆசிரியர் வெற்றிடங்களும், கல்முனைக் கல்வி மாவட்டத்தில் 583 ஆசிரியர் வெற்றிடங்களும் உள்ளன. மொத்தமாக வடக்கு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலுள்ள தமிழ்மொழி மூலமான பாடசாலைகளில் 5,780 ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவ்வெற்றிட மதிப்பீடு கடந்த ஆண்டு முற்பகுதிக்குரியதொன்றாகும்.

இவ்வாண்டில் இவ்வாசிரியர் பற்றாக்குறை மேலும் அதிகரித்துள்ள தென்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். வடக்கு - கிழக்கிலுள்ள சுமார் 16,000 தமிழ் மொழிப் பாடசாலைகளில் சுமார் ஐந்தரை இலட்சம் தமிழ் பேசும் மாணவர்கள் கல்வி கற்பது குறிப்பிடத்தக்கது. இங்கு ஆச்சரியப்படக்கூடிய ஒரு விடயத்தை குறிப்பிட விரும்பு கின்றேன். வவுனியா கல்வி மாவட்டத்தில் தமிழ் மொழிமூல பாடசாலைகளில் 500 ஆசிரியர் பற்றாக்குறை நிலவும்போது, அதே மாவட்டத்திலுள்ள சிங்களமொழி பாடசாலைகளில் 75 ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கின்றனர் என்பதுதான் அது. எனவே, வடக்கு - கிழக்கில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க கௌரவ அமைச்சரவர்கள் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டுமென இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன். வடக்கு - கிழக்கில் ஆசிரியர் நியமனங்களின்போது, ஏற்கனவே அங்குள்ள பாடசாலைகளில் தொண்டாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப் பட வேண்டியது அவசியமானதாகும். நெருக்கடியான சூழ்நிலையில் இவர்களின் பங்கு பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

இந்த நாட்டிற்கு ஏராளமான அறிவுஜீவிகளைத் தந்தது யாழ்ப் பாணப் பாடசாலைகள்தான். பல்கலைக்கழகங்களுக்கான போட்டிப் பரீட்சைகளில் மிக உயர்வான வெட்டுப் புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் அதிகமான மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கியதும் யாழ்ப்பாணப் பாடசாலைகளே! இன்றுள்ள மாணவர் களும்கூட அங்கு மின்சாரமும் ஏனைய அடிப்படை வசதிகளுமற்ற, மிகப் பயங்கரமான ஒரு யுத்த சூழ்நிலையிலும், விளக்கு எரிப்பதற்கு மண்ணெண்ணெய்கூட இல்லாத சூழ்நிலையிலும் கல்வி கற்கவேண்டிய பரிதாப நிலையில் உள்ளனர். பின்தங்கிய மாவட்டமென்ற வரை யறைக்குள் உள்ள ஏனைய அனைத்து மாவட்டங்களை விடவும் மிகவும் வசதிகள் குறைந்த நிலையிலேயே இன்று அம் மாணவர்கள் கல்வி கற்கவேண்டியவர்களாக உள்ளனர். அவ்வாறு இருந்தும் எமது மாணவர்கள் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்துக் கல்வியில் அதிக அக்கறை செலுத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ தவிசாளர் அவர்களே,

1970களில் கொண்டுவரப்பட்ட பல்கலைக்கழக பிரவேசத்திற்கான தரப்படுத்தல் முறைமை இலங்கையின் அரசியல் வரலாற்றிலும், தமிழர்களது கல்வி வரலாற்றிலும், தேசிய இனப்பிரச்சினை வரலாற்றிலும் மறக்கமுடியாத ஒரு நிகழ்வாகும். இத்தரப்படுத்தல் முறைமை எமது மக்களின் அதிகமான உயர்கல்வி வாய்ப்புக்களைத் தட்டிப் பறித்துக்கொண்டது.

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது பொருளாதார முறைமையின் ஊடாக இலங்கை 2000ஆம் ஆண்டளவில் புதிய கைத்தொழில் நாடு என்ற அந்தஸ்தினைப் பெறுவதென்ற நோக்கின் அடிப்படையில் பல புதிய முறைசாராக் கல்வித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையானது இதுவரை உயர்கல்வி பெறுவதற்குரிய ஒரேயொரு வழியாகப் பாடசாலைக்கல்வியை மாணவர்கள் முழுமையாக நம்பியிருந்த நிலை இந்த நாட்டில் மாற்றி, பரந்த கல்வி வாய்ப்புகளை திறந்த பல்கலைக்கழகங்கள், இணைந்த பல்கலைக் கழகங்கள், கல்வியற் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், மற்றும் கணினிப்பொறிப் பயிற்சி நிறுவனங்கள், இலத்திரனியல் கற்கை நெறிகள் போன்றவற்றின் மூலம் வழங்கியுள்ளது. அதேவேளை, தமிழ்மொழி மூல மாணவர்கள் குறிப்பாக வடக்கு - கிழக்கில் பயிலும் மாணவர்கள், இருட்டில், யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் தொடர்ந்தும் உயர் கல்விக்கான ஒரே மார்க்கமாகக் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையையே நம்பியிருக்கவேண்டிய துரதிஷ்டவசமான நிலைமையில் இருந்து வருகின்றனர்.

கௌரவ தவிசாளர் அவர்களே, வருடம்தோறும் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களது தொகை தேசியரீதியாக அதிகரிக்கப்பட்டு வந்துள்ள போதிலும், வடக்கு - கிழக்கில் இருந்து அனுமதிக்கப்படும் மாணவர்களது எண்ணிக்கை மட்டும் அதிகரிக்கப்படாமல் அல்லது இருந்ததை விடவும் குறைக்கப்படும் விதத்தில், அனுமதி முறையில் அவ்வப்போது மாற்றங்கள் செய்யப் பட்டு வந்துள்ளன.

துறைரீதியாக வர்த்தக முகாமைத்துவப் பீடத்திற்கு 1983/84 கல்வி ஆண்டில் மொத்த அனுமதி 948 ஆக இருந்துள்ளது. 1993/94 கல்வி ஆண்டில் இது 1526 பேராக, ஏறத்தாழ 65 சதவீத அதிகரிப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆனால், யாழ். மாவட்டத்திலிருந்து 1983 / 84 கல்வி ஆண்டில் அனுமதிக்கப்பட்டோர் 99 பேராகவும், 1993 / 94 கல்வி ஆண்டில் 100 பேராகவும் இருந்துள்ளது. இங்கு ஒரு சதவீத அதிகரிப்புக்கூட ஏற்படவில்லை. மாறாக கொழும்பு, கண்டி, காலி போன்ற மாவட்டங்களில் முறையே 120 சதவீத, 80 சதவீத, 20 சதவீத அதிகரிப்புகள் காணப்பட்டுள்ளன. இதேபோல மருத்துவத் துறையிலும் 1983 / 84 கல்வி ஆண்டில் மொத்த அனுமதி 424 பேராக இருந்தது. 1993 / 94 கல்வி ஆண்டில் இது 871 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், அன்று யாழ். மாவட்டத்திலிருந்து அனுமதிக்கப்பட்டவர்கள் தொகை 48 ஆகவே இருந்துள்ளது. ஆனால், இத்தொகை 1993 / 94 கல்வி ஆண்டில் 44 பேராகக் குறைக்கப் பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் 92 பேராக இருந்த தொகை 233 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 150 சதவீத அதிகரிப்பாகும். கண்டி. காலி, போன்ற மாவட்டங்களில் ஏறத்தாழ 120 சதவீத அதிகரிப்பு இருந்துள்ளது.

கணிதத் துறையில் எமது மாணவர்கள் ஏனைய துறைகளைவிடவும் மிக உயர்வான திறமையினை வெளிக்காட்டி வந்திருப்பதுதான் வரலாறு. பொறியியல் பீடத்திற்கான தெரிவிலும், பௌதிக விஞ்ஞானத் துறையிலும் இம்முறை யாழ் மாவட்டத்திற்கான வெட்டுப்புள்ளிதான் அதி உயர்வானது, முதன்மையானது, கடந்த பத்து ஆண்டு காலத்தில் இத்துறைக்கான மொத்த அனுமதி 476 இல் இருந்து 761 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், யாழ். மாவட்டத்திலிருந்து 1983 / 84 கல்வி ஆண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 64 ஆக இருந்தது. ஆனால், 1993 / 94 கல்வி ஆண்டில் 75 ஆகத்தான் அதிகரிக்கப்பட்டது. அதேநேரத்திலே கொழும்பு மாவட்டத்தில் 1983 / 84 கல்வி ஆண்டில் 95 பேராக இருந்த தொகை, 1993 / 94 கல்வி ஆண்டில் 173 ஆக அதிகரித்துள்ளது. கண்டியிலே 32 பேராக இருந்த தொகை 50 ஆகவும், காலியில் 21 ஆக இருந்த தொகை 51 ஆகவும் அதிகரிக்கப்பட்டது. இதிலிருந்து ஒரு சராசரி தமிழ் மாணவர் புரிந்துகொள்ளக் கூடியது, தனது பல்கலைக்கழக அனுமதி திட்டமிட்டு மட்டுப்படுத்தப்படுகிறது என்பதைத்தான்.

இச்சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும், ஒரு மாணவன் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும்போது அல்லது அப் பரீட்சையை எதிர்பார்த்துப் படிக்கும்போது, அம்மாணவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்த அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி அமையப்போகிறது." என்று தெரிந்திருந்தால்தான், அதனை வைத்து அவன் தனது கல்வியைத் தொடர முடியும். ஆனால், இங்கு நடப்பது என்ன? மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி, பரீட்சை முடிவுகள் வெளியாகிய பின்புதான், "எந்த அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி அமைய வேண்டும்" என்று தீர்மானிக்கப்படுகின்றது. இதனை நியாயமான மனித கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாகவே கருத இடமிருக்கின்றது.

கௌரவ தவிசாளர் அவர்களே, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தனது பல்கலைக்கழக அனுமதிக்கான கொள்கை வகுப்பில் தெளிவாகக் கூறுவதாவது "பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு காலத்துக்கு காலம் அரசாங்கத்தின் அனுசரணையுடன் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான கொள்கைகளை வகுக்கும் என்பதுதான்." இவ்வாறு வகுக்கப்படும் கொள்கை அடிப்படையிலேதான் - இச்சபையிலே நான் ஏற்கனவே கூறியதுபோல - எமது மாணவர்களின் அனுமதி மட்டுப்படுத்தப்படுகின்றது. இதிலிருந்து தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்களை எச்சந்தர்ப்பத்திலும் மட்டுப்படுத்தி வைத்திருத்தல் என்பது மட்டும்தான் மானியங்கள் ஆணைக்குழுவின் ஒரேயொரு நிலையான கொள்கையாகவுள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

உயர் கல்வியில் தமிழ் மாணவர்கள் அநீதிக்குள்ளாக்கப்படுதல் என்பது, 1970 களிலிருந்து வடிவங்கள் மாறினாலும் அடிப்படையில் இன்று வரை மாற்றம் இல்லாமலேயே இருந்து வருகின்றது. ஆரம்பத்தில் இன ரீதியாக இருந்த தரப்படுத்தல் பின்னர் பாட ரீதியாகவும், அதன் பின்னர் மொழி ரீதியாகவும் 1974 வரை அமுலில் இருந்தது. பின்னர் அது மாவட்ட அடிப்படையில் "சனத்தொகை விகிதாசாரப்படி" என மாற்றப்பட்டது. 1977 இன் பின்னர் நாடளாவிய தகைமை அடிப்படை, மாவட்ட விகிதாசார அடிப்படை, பின்தங்கிய அடிப்படை என்ற மூன்று முறைகள் அறிமுகமாயின. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டு அது சுயாதீனமாக விடப்பட்டது. அது சிக்கலான மாணவர்களால் இலகுவில் புரிந்துகொள்ள முடியாத விதிகள், கொள்கைகளைக் காலத்திற்குக் காலம், அதாவது, ஒவ்வொரு கல்வியாண்டிலும் உருவாக்கி, அதனூடாக வழமையான பாரபட்சத்தை தொடர்ந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடயத்துக்கு ஒரு சிறந்த உதாரணமாக 1993 / 94 கல்வி ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி நடைமுறையை நோக்குவோம்.

வெளிப்படையாகத் தோன்றும் விதிமுறைகளின்படி அகில இலங்கை ரீதியில் தகைமை அடிப்படையில் 40 சதவீதமும், மாவட்ட சன விகிதாசார அடிப்படையில் 55 சதவீதமும், பின்தங்கிய மாவட்ட அடிப்படையில் 5 சதவீதமும் அனுமதி அளிக்கப்படும் என்பதுதான் நிலைமை. ஆனால், வழங்கப்பட்ட அனுமதிகளில் நாடளாவிய தகைமை அடிப்படைக்கு 40 சதவீதத்தினை விடக்குறைவான வீதத்திலேயே அனுமதியளிக்கப்பட்டுள்ளது. துறைரீதியாக நோக்கினால் 90 / 91 கல்வியாண்டில் மருத்துவத்திற்கு 40 சதவீதமாக இருந்த திறமை அடிப்படை, 93 / 94 ஆம் கல்வியாண்டில் 35.9 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பல் வைத்தியம் தொடர்பான வாய்ப்பு 33.6 சதவீதத்திலிருந்து பின்னர் 28.6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவம் 31.9 இலிருந்து 25.4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனைத்துத் துறைகளுக்கும் தகைமை அடிப்படையில் தெரிவாகும் மாணவர்களது எண்ணிக்கை விகிதாசார அடிப்படையில் குறைந்தே வந்துள்ளது.

உயிரியல் விஞ்ஞானத் துறைக்கு நடந்த நிலை மிகவும் ஆச்சரியத்திற்கும் வேதனைக்கும் உரியதாகும். 1990 / 91 ஆம் கல்வியாண்டில் 38.5 ஆக இருந்த தகைமை அடிப்படையிலான அனுமதி 93 / 94 ஆம் ஆண்டில் 6.5 என்ற அளவுக்கு தாழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாறான நடைமுறைகளால்தான் எமது மாணவர்களுக்குரிய வெட்டுப்புள்ளி மிக உயர்வாகக் காணப்படுகிறது. தரப்படுத்தல் அல்லது வெட்டுப்புள்ளி முறை அறிமுகப்படுத்தியதன் ஆரம்ப நோக்கமே இனரீதியான பாகுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது என்பதை அனைத்துத் தரவுகளும் வெளிக்காட்டி நிற்கின்றன.

கௌரவ தவிசாளர் அவர்களே, இப்பாரபட்சம் தொடர்ந்தும் நீடிக்கப்படக்கூடாது என்ற கடந்த காலத்தின் நீதிமன்றத் தீர்ப்புக்கூட உதாசீனம் செய்யப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை யாழ் மாவட்டத்தில் மட்டும் நடாத்தப்படாமல், அதற்காக 91 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ். மாவட்டத்தில் மட்டும் நடத்தப்பட்ட பரீட்சையையும் நாட்டின் ஏனைய பகுதிகளில் 90 ஆம் ஆண்டு ஆகஸ்டில் நடத்தப்பட்ட பரீட்சையையும், இரண்டு வெவ்வேறு பரீட்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகக் கருதி, வெவ்வேறு வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டிருந்தன. இதற்கான பிரதான காரணம், யாழ். மாவட்ட மாணவர்கள் சிறப்பாக சித்தி எய்தியிருந்தமைதான். இந்த அநீதிக்கெதிராக சுரேந்திரன் என்ற கணிதத்துறை மாணவரால் தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கின் தீர்ப்பில் நீதியரசர் பெர்ணான்டோ அவர்கள், இரண்டு பரீட்சைகளும் ஒன்றாகக் கருதப்பட வேண்டுமெனத் தீர்ப்பிட்டு, "ஏராளமான கஷ்டங்களுக்கு மத்தியில் அவதியுறும் யாழ்ப்பாண மாணவர்கள் தொடர்பில் கரிசனை காட்டப்பட வேண்டும்" எனக் கூறியிருந்தார். ஆனால், இத் தீர்ப்பும் கூற்றும் பொறியியல் பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்கள் விடயத்தில் புறக்கணிக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் யாழ். மாணவர்களுக்கெதிராக இழைக்கப்பட்ட அநீதி குறித்து அன்று உபவேந்தர்கள் மாநாட்டில் குரல் கொடுத்த இந்நாளின் கௌரவ நீதி, அரசியலமைப்பு அமைச்சரும் நிதி பிரதி அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களுக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

பல்கலைக்கழக அனுமதி தொடர்பான கொள்கைகளை மீளப் பரிசீலிக்கும்படி 1987 இல் அமைக்கப்பட்ட கே.எம்.டி. சில்வா குழுவின் அறிக்கை தொடர்பாக இங்கு நான் குறிப்பிட வேண்டும்.

> "திறமை அடிப்படையில் அமைந்திருந்த அனுமதிமுறை, கோட்டா முறைக்கும் முன்னுரிமை முறைக்கு மாற்றம் செய்யப்பட்டு ஏறத்தாழ இரண்டு சகாப்தங்கள் ஆகிவிட்ட நிலையில் அவை பல்கலைக்கழக கல்வித்தரம் தாழ்த்தப்படுவதற்கும் நாட்டின் இன முரண்பாட்டினைத் தீவிரப்படுத்துவதற்கும்தான் பங்களிப்புச் செய்துள்ளன என்பதனைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது."

இவ்வாறு குறிப்பிட்ட இந்த அறிக்கை பல புதிய விடயங்களைப் பரிந்துரை செய்திருந்தது. அதன்படி ஒவ்வொரு பல்கலைக்கழகக் கல்வி ஆண்டிலும் படிப்படியாக உயர்த்தப்பட்டு வர வேண்டிய தகைமை அடிப்படைக்கான வாய்ப்பு, இவ்வாண்டில் அதாவது 94 / 95 ஆம் ஆண்டின் அனுமதியில் 100 சதவீதமாகக் கொண்டுவரப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால், இக்குழுவினது பரிந்துரை கருத்திற் கொள்ளப்படவே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம் என்ற வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கிழக்குப் பல்கலைக்கழகமும் மிகவும் பாரபட்சமான நடைமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. கிழக்குப் பல்கலைக்கழகம் ஒரு தேசிய பாடசாலைக்குரிய வசதிகளைவிடக் குறைவான வசதிகளைக் கொண்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகம் தொடர்ந்தும் தனது கொள்ளளவுக்கேற்ப அனுமதிக்கக் கோருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையைவிட குறைவான மாணவர்களையே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதிக்கின்றது. 1991ஆம் ஆண்டில் 460 மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டிய இடத்தில் 192 மாணவர்களே அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேபோல யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் ஒவ்வொரு கல்வியாண்டிலும் அனுமதிக்கத் தக்க எண்ணிக்கையைவிட, சராசரியாக 700 பேர் குறைவாகவே அனுமதிக்கப்படுகின்றனர்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

எமது மக்கள் கல்விக்கு மிகவும் முன்னுரிமை வழங்குபவர்கள். பல் கலைக்கழக அனுமதி தொடர்பிலும் பல்கலைக்கழக விடயங்களிலும் எம் மக்களுக்கு ஏற்படும் பாரபட்சமான அநீதிகளை விசாரணை செய்ய நீதியான ஆணைக்குழு ஒன்றை நியமித்து நடவடிக்கை எடுக்குமாறு இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கின்றேன். எமது நாட்டின் ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் பெட்டகங்களில் தூங்குவதுதான் வழமை. இவ்விடயத்தில் அவ்வாறின்றி ஆணைக்குழுவின் விசாரணை களை துரிதப்படுத்துவதுடன், அதனடிப்படையில் நடவடிக்கை களையும் உடன் எடுக்க வேண்டும் என வேண்டுகின்றேன். பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான அதிகாரங்கள் அல்லது நிபந்தனைகள் இந்த அநீதிகளுக்கு அடிப்படை யாக அமைவதனால் அச்சட்டத்தினையும் அந்நிபந்தனைகளையும் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். கடந்த காலங்களில் ஒட்டு மொத்தமான பல்கலைக்கழக அனுமதி தொடர்பில் பல முறைகேடான நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. எனவே குறைந்தபட்சம் கடந்த ஐந்து வருடகாலத்திற்கான பல்கலைக்கழக அனுமதிகளையாவது மீள ஆராய நடவடிக்கைகள் எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்: நன்றி.

02 மார்ச் 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவு பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு வடக்கு – கிழக்கு மக்களின் உயிர், உடமைகளை அழிவுக்குள்ளாக்கியே வருகிறது

கௌரவ தலைவர் அவர்களே,

ஜனநாயகமும் சுதந்திரமும் நிலவக்கூடிய ஒரு புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக, யுத்தத்தை ஒதுக்கி சமாதானத்தை அடைவதற்கான ஒரு காலகட்டத்திலே நாம் இன்று பிரவேசித்துள்ளோம். சமாதானத்தைக் கொண்டுவரும் உன்னத நோக்கில், யுத்தத்தினால் அழிக்கப்பட்ட - போரினால் சிதைவடைந்த - அனைத்தையும் மீளக் கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. இப்பணியானது, எம் மக்களுக்கு இன்று அவசியமாகவும், அவசரமாகவும் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். 1983ஆம் ஆண்டின் பின் வடக்கு - கிழக்கில் நிலவிய கொடிய யுத்தம் வடக்கு - கிழக்கு மாகாணத்தையே சின்னாபின்னப்படுத்தி விட்டது. அமைதியான மனித வாழ்வு சிதைந்துவிட்டது. ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் அழிக்கப்பட்டு விட்டன. வாழ்விடங்கள் சிதைந்து கிடக்கின்றன. மதத் தலங்கள் சிதைந்து கிடக்கின்றன. வர்த்தக, தொழிற்துறை நிலையங்கள் அழிக்கப்பட்டு விட்டன. பாடசாலைகள் சிதைந்து கிடக்கின்றன. வடக்கு - கிழக்கிலே எதுவுமே பூரணமாக இல்லை. யுத்தமானது அனைத்தையுமே தலைகீழாய் புரட்டிப்போட்டிருக்கின்றது. இப்படியான ஒரு பிரதேசத்தை - எமது அழகிய பிரதேசத்தை - யுத்தத்துக்கு முன்பிருந்தது போன்று மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நாம் உழைக்க வேண்டியுள்ளது. இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்த முழுமையான புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளில் ஈடுபட வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ தலைவர் அவர்களே,

இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுக்கு நூறுகோடி ரூபா அளிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். எமது மக்களுக்கு இன்று தேவையானது, தமிழ் பேசும் மக்களுக்கான வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தில் எமது மக்கள் உச்சப் பாதுகாப்புடன் வாழக்கூடிய ஓர் அரசியல் தீர்வும் அதனுடன் இணைந்த புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுமேயாகும்.

கௌரவ தலைவர் அவர்களே, வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு - புனரமைப்புப் பணிகளுக்கு மேற்கு நாடுகள் உதவ முன்வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. வடக்கு - கிழக்கில் யுத்தத்திற்காக நாம் செலவு செய்த தொகையைவிட, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கு பலமடங்கு அதிகமான தொகையை நாம் செலவிட வேண்டியுள்ளது. இப்படி நாம் பலகோடி ரூபாய்களைச் செலவிட்டாலும் பருத்தித்துறை தொடக்கம் பொத்துவில் வரை முன்பிருந்த அழகிய பிரதேசத்தை கட்டியெழுப்ப முடியுமா என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் ஒவ்வொரு நிதியாண்டிலும் நாம் பாதுகாப்பு செலவீனங்களுக்காக பலகோடி ரூபாய்களை ஒதுக்கி வைத்துள்ளோம். இப் பெருந்தொகையான பணம் வடக்கு - கிழக்கில் பல்லாயிரக்கணக்கான மக்களின் உடைமைகளை அழித்தும், உயிர்களைப் பலி கொண்டுமுள்ளது. உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள், இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள், ஆகியோர் தங்கள் முகவரிகளை இழந்து திக்குத் தெரியாமல் இருக்கின்றார்கள். கணவன்மாரை இழந்த ஆயிரக்கணக்கான இளம் விதவைகளும் அவர்களின் எதிர்காலமும் எமது கண்களிலேயே கண்ணீரை வரவழைக்கின்றது. வறுமை, பசி, பிணி, போஷாக்கின்மை, போன்றவற்றினால் இன்று எமது மக்கள் நலிந்து போயிருக்கின்றார்கள். அவசியமான, போதுமான மருந்து வகைகளுக்கு நிலவும் தீவிர தட்டுப்பாடு, எமது மக்களின் மரணத்துக்கு முனைப்புக் கொடுக்கின்றது.

கௌரவ தலைவர் அவர்களே, தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஓர் உகந்த அரசியல் தீர்வுத் திட்டத்தை இவ்வரசு கொண்டிருக்குமானால், வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனரமைப்புப் பணிகளை துரிதப்படுத்துவதில் அரசு எவ்வித தயக்கமும், கொள்ளத் தேவையில்லையென்பதை நான் இச்சபைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இது தொடர்பாக சில முக்கியமான விடயங்களைத் தங்களின் கவனத்திற்கு முன்வைக்க விரும்புகின்றேன். 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கிலிருந்த முஸ்லீம்கள் புலிகளால் அகதிகளாக்கப்பட்டார்கள். அந்த மக்கள் இன்று புத்தளம், அனுராதபுரம், கொழும்பு போன்ற மாவட்டங்களில் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி அல்லற்படுகின்றார்கள். போதிய உணவு வசதி, வாழ்விட வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி, குடிநீர் வசதி போன்ற எதுவுமற்ற நிலையில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக அம்மக்கள் அகதி வாழ்க்கையைத் தொடர்கின்றார்கள். அந்த மக்கள் தங்கள் பழைய வாழ்விடங்களுக்குச் சென்று வாழக்கூடிய அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணத் தீவுப்பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து, யாழ்ப்பாணத்திலுள்ள அகதி முகாம்களிலே பல சொல்லெணா வேதனைகளுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக் கின்றார்கள். இடம்பெயர்ந்த மக்களில் பெரும்தொகையானோர் யுத்தத்தின்போது புலிகளால் மனித கேடயங்களாகப் பயன்படுத் தப்பட்டு யாழ்ப்பாணத்தின் பிரதான பகுதிகளுக்கு பலாத்காரமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். இன்று தீவுப் பகுதிகளில் சமூக நிலை தோன்றியிருக்கின்ற போதிலும் அம்மக்கள் மீளக் குடியேற புலிகள் பல வழிகளிலும் தடையாக இருக்கின்றனர். இந்நிலைமையைப் போக்க அரசு, புலிகளுடனான பேச்சுவார்த்தையின் போது, தீவுப்பகுதி மக்களின் மீள்குடியேற்ற விடயத்தைக் கருத்திற்கொண்டு பேசுதல் வேண்டும். கௌரவ அமைச்சர் அவர்கள், இம் மீள்குடியேற்றங்களுக்கு முன்னுரிமை அளிப்பாரென நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

கௌரவ தலைவர் அவர்களே,

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பகுதிகளில் அகதி முகாம்களிலே மக்கள் அல்லற்படுகின்றார்கள். அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலையடி வேம்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளான கண்ணகிபுரம், புட்டம்பை, களவாப்பிட்டி, அலிகம்பை, போன்ற பிரதேசங்களில் இருந்து வன்செயல்களினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகளாக வெளியேறிய 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்னும் அகதி முகாம்களிலே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இலங்கையிலுள்ள பழங்குடி மக்களின் குடியிருப்புக்களில் ஒன்றான அலிகம்பை வாழ் பழங்குடியினர் திருக்கோவில் பகுதியிலுள்ள கல்வியங்காட்டில் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். ஆலையடி வேம்புப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட களவாப்பிட்டி என்ற இடத்தில் வாழ்ந்த சுமார் 200இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அதே பிரதேச எல்லைக்குள் அகதிகளாக வாழ்கின்றனர். களவாப்பிட்டிப் பிரதேசம் பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப்பட்ட பிரதேச மாக காணப்பட்ட போதிலும், அங்கு மக்கள் தமது சொந்த வாழ் விடங்களில் மீளக்குடியமர முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவற்றைக் கருத்திற் கொண்டு கௌரவ அமைச்சரவர்கள் இவர்களின் மீள்குடியேற்றத்திற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே, 1983ஆம் ஆண்டில் இருந்து திருகோணமலையில், உப்புவெளி, லவ்லேனில், உள்ள காணியில் குடியிருந்த 32 முஸ்லீம் குடும்பங்களையும், 18 தமிழ்க் குடும்பங் களையும் சேர்ந்தவர்கள், 1990ஆம் ஆண்டில் இடம்பெற்ற வன்செயலின்போது அகதிகளாக்கப்பட்டார்கள். அவர்களது குடியிருப்புகள் எரிக்கப்பட்டன. ஆனால் தற்போது அவர்களது குடியிருப்புகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அரசியல் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு எடுத்த நடவடிக்கைகளினால், கடந்தகால அரசாங்கம் இப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக உறுதியளித்திருந்தது. ஆனால், இதுவரையும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த அகதிகளோ லவ்லேணுக்கு அருகிலுள்ள ஜமாலியா அகதி முகாமில் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தமது சொந்தக் குடி யிருப்புகளிலே மீளக்குடியேறுவதற்கு விரும்புகின்றார்கள். அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்றுவாழத் தயாராக இல்லை. எனவே, இப்பிரச்சினையிலும் இதைப் போன்ற பிரச்சினைகளிலும் இன்றைய அரசின் அணுகுமுறை எவ்வாறு அமையப்போகின்றது என்பதை எமது மக்கள் அவதானத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். கௌரவ தலைவர் அவர்களே, எமது மக்கள், தமது சொந்தப் பிரதேசங்களிலும் தமது சொந்த மண்ணிலுமே மீளக்குடியேற விரும்புகின்றார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு விடயத்தில் இருந்து வரும் மந்த நிலைமை, இழுபறி நிலைமை, கால அவகாசமின்மை தொடர்பான சில விபரங்களைக் கௌரவ அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். கடந்த 1995 பெப்ரவரி 13ஆம் திகதிய "வீரகேசரி" பத்திரிகையில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிவித்தல் தொடர்பாக கௌரவ அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். அதில், 1983ஆம் ஆண்டு யூலை 24ஆம் திகதியில் இருந்து ஏற்பட்ட வன்செயல்களி னால் பாதிப்படைந்து, இதுவரையும் அரசிடமிருந்து எந்தவித நஷ்டஈடும் பெற்றுக்கொள்ளாத பொதுமக்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டிருந்தன. ஆனால், இந்தக் கால எல்லை போதுமான தாக இருக்கவில்லை. 1995 பெப்ரவரி 13இல் வெளிவந்த அந்தப் பத்திரிகை அறிவித்தலுக்கான விண்ணப்ப முடிவுத் திகதியோ 1995 பெப்ரவரி 20 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, இதனையும் உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன். குறைந்த பட்சம் இந்தக் காலநீடிப்பு மூன்று மாதங்களுக்காவது இருக்க வேண்டும் என்று நான் கௌரவ அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் பொழுது பொலிஸ் பதிவு கோரும் நடைமுறையானது, வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெரும் தடையாக உள்ளது. 1983ஆம் ஆண்டுக்குப் பிறகு வடக்கு - கிழக்கில் பெரும்பாலான பிரதேசங்களில் பொலிஸ் நிலையங்கள் இருக்கவில்லை என்பதையும் தங்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன். ஆகவே, இந்த நடைமுறையைத் தவிர்ப்பதற்கு, கிராம சேவையாளர் பகுதிகள் உள்ளடங்கலாக "வன் செயல்களினால் உயிர் உடைமை இழப்பு" சம்பந்தமான விசாரணைக் குழு ஒன்றை அமைப்பதன் மூலம், பாதிக்கப்பட்டவர்களை நாம் இனங்கண்டு நஷ்டஈடு வழங்கலாம் என்பதையும் தங்களின் கவனத் திற்கு முன்வைக்கின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

புதிய அரசின் மீள்குடியேற்ற கொள்கை, பாதிக்கப்பட்ட எமது மக்களின் மனங்களில் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது. புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றத்தை, தற்போது அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மீள்குடியமர்வு மாதிரிக் கிராம ரூபத்தில், மக்களின் பல்வேறு அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யும் வகையில் புதிய பல வேறு நலன்புரி அடிப்படை வசதிகளைக் கொண்ட திட்டங்களை அறிமுகமாக்கி, நடைமுறைப்படுத்தி வருகின்றனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த ஒருவர் புனர்வாழ்வு, புனரமைப்புக்கான அமைச்சராக இருப்பதையிட்டு நாம் சந்தோசமடைகின்றோம். மீள்குடியேற்றம் என்பது பல தடைகளையும் எதிர்ப்புகளையும் தாண்டி மேற்கொள்ளப்படவேண்டிய கடின பணியாகும். மீளக்குடியேற்றத்திற்கு எதிராக உள்ள அனைத்துத் தடைகளையும் எதிர்கொண்டு கௌரவ அமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களை தங்களது சொந்தப்பகுதியிலே குடியேற்றுவார் என்ற நம்பிக்கை இருக்கின்றது. கௌரவ தலைவர் அவர்களே, கௌரவ அமைச்சரவர்கள், கடந்த 4ஆந் திகதி, திருகோணமலையிலுள்ள கப்பற்றுறை மீள்குடியமர்வு மாதிரிக் கிராமத்தில் அமைந்துள்ள பல்வேறு அடிப்படை அத்தியாவசியச் சேவைகள் நிலையங்களுக்கான திறப்பு விழாவின் போது, மீளக்குடியேறியவர்கள் தமக்கென சொந்தமான தொழில்வாய்ப்புகளை பெறும் வரை, அவர்களுக்கு தொடர்ந்தும் உலருணவுப் பொருட்கள் அல்லது பணம் வழங்கப்படும் என்று உறுதியளித்திருந்தார். இதனை நாம் வரவேற்கின்றோம். கடந்த காலங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பொழுது, அம் மீள்குடியேற்றங்கள் திட்டமிடப்படாத அடிப்படையிலே நடைபெற்றிருக்கின்றன. மீள்குடியேற்றத்தின் உண்மையான பயனை மக்கள் அனுபவிக்கவில்லை. எனவே, அமைச்சர் அவர்கள் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட மீள்குடியமர்வுத் திட்டங்களுக்குப் புதிய வசதிகளை அளிப்பதுடன், நிவாரணங்களையும் வழங்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் வேண்டிக் கொண்டு எனது உரையை முடிக்கின்றேன்: நன்றி.

13 மார்ச் 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸாரும், படையினரும்
தமிழர்கள் அனைவரையும்
சந்தேகத்திற்குரியவர்களாக நோக்குகின்றனர்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

கடந்த ஒரு மாதகாலத்தில் நாட்டின் பல பாகங்களில் நடைபெற்று வரும் சம்பவங்கள், இனவாத சக்திகள் மீண்டும், தலைதூக்க முற் படுவதை வெளிப்படுத்தி நிற்கின்றன. இன்றைய யுத்தத்தை நாட்டு மக்கள் எவருமே விரும்பவில்லையென்பது அனைவரும் அறிந்த விடயந்தான், எனினும் சகலரது விருப்பங்களையும் மீறி, யுத்தம் வெடித்திருக்கின்றது. இந்த யுத்தத்தில் சிந்தப்படுகின்ற இரத்தம் குறித்தும் இழக்கப்படும் மனித உயிர்கள் குறித்தும் சமாதானத்தில் அக்கறையுடைய அனைவருமே வேதனையடைந்துள்ளனர்.

யுத்தத்தில் கொல்லப்படுபவர்கள் எந்த இனத்தவர்கள், எந்த மதத்தவர்கள், எந்த ஊரவர்கள் என்று சமாதான விரும்பிகள் பிரித்துப் பார்ப்பதில்லை. மனிதநேயம் உள்ளவர்கள், மனித உயிர்களின் பெறு மதியினை அறிந்தவர்கள், சிந்தப்படும் இரத்தத்தில் இன அடை யாளமோ மத அடையாளமோ இருக்கிறதா என்று ஆராய்ந்து கொண்டிருக்க மாட்டார்கள். இறந்தவர்கள் எந்த இனத்தவர்கள் என்று பார்த்துத்தான் வேதனை ஏற்படுமானால் அதன் பெயர் மனிதாபிமானமல்ல. அதன் பெயர் இனவாதம், இனவாதம் இனங் களின் ஒற்றுமைக்கு எதிரானது: அது சமாதானத்திற்கு எதிரானது, இனவாதம் என்பது தானாக உற்பத்தியாவதில்லை. கடந்த காலத்திலே சுயலாப அரசியல் சக்திகள் தாம் இனவாதத்தை திட்டமிட்டு உருவாக்கின. இனங்களை மோதவைத்து, இன உணர்ச்சிகளைத் தூண்டி வாக்குகளைப் பெறுவதுதான் அவர்களது நோக்கமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அந்த குறிப்பிட்ட அரசியல்வாதிகள் வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்கள்: பதவிகளை அடைந்தார்கள், வசதிகளைப் பெருக்கிக் கொண்டார்கள். ஆனால், அவர்களால் தூண்டி விடப்பட்ட இனவாதம் காரணமாக இலங்கைத்தீவு இரத்தக் காடாகிவிட்டது. நாட்டின் அபிவிருத்தி பின்தள்ளப்பட்டு அழிவுகளே விருத்தியாகிக் கொண்டிருந்தன. இந்த அனுபவங்களின் மூலம் தான், சமாதானமும் இன ஒற்றுமையும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு அவசியம் என்பதை நாட்டு மக்கள் அனைவருமே அங்கீகரித்தார்கள். ஆனால், தற்போது நடைபெற்றுவரும் சம்பவங்கள் சிலசக்திகள் மக்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்லவும் இதன் மூலம் தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றவும் முற்படுகின்றனவோ என சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளன.

கௌரவ தலைவர் அவர்களே,

கடந்த 02.06.1995ஆம் ஆண்டு அன்று காலையிலே தமிழர்களுக் கெதிராக நடைபெற்ற வன்செயல்கள் தற்செயலாக இடம்பெற்றவை யல்ல. சாதாரண மக்கள் செய்த செயலாக நாம் அதனைக் கருதவில்லை. முன்கூட்டியே திட்டமிட்டு, பெற்றோல்க் குண்டுகளைத் தயாரித்து வைத்து வெறியாட்டம் நடாத்தியிருக்கின்றது. அந்த வெறியாட்டத்தை நடாத்தியவர்கள் தங்களைச் 'சிங்கள மக்களின் காவலர்கள்' என்று கூறிக்கொள்ள நினைத்திருக்கலாம். ஆனால், உண்மையில் அவர்கள் எந்த மக்களையும் நேசிப்பவர்கள் அல்லர். அவர்கள் நாட்டில் நடைபெறும் சாவுகளை வைத்து அரசியல் நடாத்த விரும்புகிறவர்கள். உண்மையில் அவர்கள் யுத்தத்தில் இழப்புகள் ஏற்படுவதை விரும்புகிறார்கள். அவ்வாறு உயிரிழப்புகள் ஏற்பட்டால்தான் அதனைச் சொல்லி தாங்கள் அரசியல் நடாத்தலாம் என்று நினைக்கிறார்கள். திட்டவட்டமான அரசியல் கொள்கைகள் தங்களிடம் இல்லை என்று மக்கள் மத்தியில் அம்பலமானவர்களுக்கு இப்போது மறைந்துகொள்ள ஓரிடம் தேவைப்படுகின்றது. அவ்வாறு தங்களை மேற்கொள்ளுகின்ற அரணாக அவர்கள் இன வாதத்தை நாடியிருக்கின்றார்கள். இந்த இனவாத சக்திகளை இப்போதுகூட நாம் புரிந்து கொள்ள தவறினால் ஐக்கிய இலங்கை என்பது வெறும் கனவாகத்தான் இருக்கும். கடந்த காலத்திலே இந்த நாட்டில் இடம்பெற்ற இனக் கலவரங்கள், தமிழ் மக்கள் தங்களுக்குரிய பாதுகாப்பைத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தின. வடக்கு - கிழக்கில் மட்டும்தான் தமிழர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் இருக்க முடியுமென்ற உணர்வையும் அது ஏற்படுத்தியது. கௌரவ தலைவர் அவர்களே 1983ஆம் ஆண்டு இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கு எதிராகப் பாரிய இனப்படுகொலை நடவடிக்கையொன்று கட்டவிழ்த்து விடப் பட்டது. அதற்கு முன்னர் ஆயுதம் தாங்கிய தமிழ் இயக்கங்களில் சில நூறு இளைஞர்கள் தாம் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆனால், 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் வீடுகளிலும், தெருக்களிலும், சிறைகளிலும் தமிழர்களைப் பிணங்களாக்கிய போதுதான் ஆயிரக் கணக்கான வாலிபர்கள் ஆயுதம் தாங்கிய இயக்கங்களோடு தங்களை இணைத்துக் கொண்டார்கள். அன்றும் சரி, இன்றும் சரி, 1983ஆம் ஆண்டின் இனக் கலவரத்திற்கு சாதாரண சிங்கள மக்களை நாங்கள் குறை கூறியதில்லை. சுயலாப அரசியல் கட்சிகள்தான் 1983ஆம் ஆண்டின் இனக்கலவரத்திற்கு காரணமானவர்கள் என்பதை நாம் மறக்கவில்லை. ஆனால், அதன் விளைவான யுத்த சுமையை இன்று சாதாரண சிங்கள மக்களும் தான் சுமந்துகொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் நாம் சொல்லுகின்றோம், இப்போது மீண்டும் இன மோதல்களைத் தூண்டிவிடும் சக்திகள் யாரெவராகவிருந்தாலும் அவர்கள் இந்த நாட்டை மீள முடியாத யுத்தத்தில் சிக்க வைத்துச் சீரழிக்கவே விரும்புகிறார்களென்று. ஒரு சில குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அவர்கள் இந்த நாட்டு மக்களின் நிம்மதியைப் பலியிட நினைக்கின்றார்கள்.

காலியில் இடம்பெற்ற வன்செயலை நிறுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். ஆனாலும், 02.06.1995 அன்று இரவு 09 மணியளவில் ஆரம்பித்த வன்செயல்கள் மறுநாள் காலை தொடரும் வரை அங்குள்ள பொலிஸார் துரித நடவடிக்கை எடுக்கத் தயங்கியது ஏன் என்றுதான் எங்களுக்குப் புரியவில்லை. அதுமட்டுமல்ல: கலவரத்தைத் தூண்டுவதற்குச் சிலர் திட்டமிடுவதாக முன்கூட்டியே தகவல் தெரிந்திருந்தும் பொலிஸார் அலட்சியமாக இருந்திருக்கிறார்கள். நாட்டில் யுத்த சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பாதுகாப்புப் பிரிவுகள் உசார்ப்படுத்தப்பட்டிருக்கும் நேரத்தில் கலவரம் செய்யும் ஒரு கும்பலை அடக்குவதற்கு தாமதம் ஏற்பட்டது ஏன் என்று எங்களுக்குப் புரியவில்லை. தீயணைப்புப் படைகூட அறிவித்தல் கிடைத்தும் உரிய நேரத்தில் போய் சேரவில்லை என்று அறிகிறோம். இவ்வாறான நடைமுறைகள் நாட்டின் சட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒழுங்கு என்பனவற்றை நிலைநாட்டும் நிறுவனங்கள் மீது தமிழ் மக்களுக்கு அவநம்பிக்கைகளை உருவாக்குகின்றன.

காலியில் நடைபெற்ற வன்செயல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவதுடன், இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாத வகையில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். வழக்கமாக இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றவுடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வாக்குறுதிகள் வழங்கப் படுவதுண்டு. ஆனால், நடைமுறையில் அந்த வாக்குறுதிகள் நிறை வேற்றப்படுவதில்லை. எனவே, பாதுகாப்பு பிரதியமைச்சர் அவர்கள் இவ்விடயத்தில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

கௌரவ தலைவர் அவர்களே,

தமிழ் இளைஞர்கள் யுவதிகள் கைதுசெய்யப்படும் விவகாரம் தொடர்பாக எமது கட்சி பல தடவைகள் எடுத்துக் கூறியிருக்கின்றது. மேதகு ஜனாதிபதி அவர்களிடமும், தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைதுசெய்யப்படும்போது எதிர்நோக்கும் கஷ்டங்கள், சங்கடங்கள் குறித்து நாங்கள் விரிவாக விளக்கி இருக்கின்றோம். இது தொடர்பான "மனித உரிமைகள் செயலணிக்குழு" ஒன்றை நியமிக்கப் போவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால், இதுவரை அவ்வாறான செயலணிக்குழு எதுவும் நியமிக்கப்படவில்லை. அவ்வாறான குழு ஒன்று நியமிக்கப்பட்டால் அதன் மூலம் தற்போதுள்ள நிலைமையை விட, சற்று மேலான நிலை ஏற்படலாம் என்று நாம் நம்புகின்றோம். ஆனால், தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைது விடயத்தில் பொலிஸாரோ, பாதுகாப்பு படையினரோ தமிழர்கள் என்றால் சந்தேகத்திற்குரியவர்கள் என்பது போன்ற அணுகுமுறைகளை கையாளுவார்களேயானால் எந்தக் குழுவாலும் பிரயோசனம் ஏற் படப்போவதில்லை.

கைதுசெய்யப்படும் ஆளொருவர் ஏன் கைதுசெய்யப்படுகின்றார், எங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார் என்ற விபரத்தை அவர்களது உறவினர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்பது யாரும் அறியாத ஒன்றல்ல. ஒரு குழுவை நியமித்துத்தான் இந்த அடிப்படை விடயத்தைக் கூட பொலிஸாருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் நினைவூட்ட வேண்டுமென்று நாம் நினைக்கவில்லை. ஆனால் கொழும்பில் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் நிலையங்களில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் விடயத்தில் இந்த அடிப்படை விடயம் கூட அலட்சியம் செய்யப்படுகின்றது. நமக்கு நேரடியாக ஏற்பட்ட அனுபவம் ஒன்றை இந்தச் சபையின் கவனத்துக்கு கொண்டுவருகின்றேன். 26.05.1995 அன்று முகத்துவாரம் பொலிஸாரால் சுப்பிரமணியம் விமலேஸ்வரன் என்னும் தமிழ் வாலிபர் கைது செய்யப்பட்டார். இவர் எவ்வித இயக்க உறுப்பினருமல்ல என்று நாம் தெளிவாக அறிந்திருந்தமையால் அவரை விடுதலை செய்யுமாறு 27.05.1995 அன்று முகத்துவாரம் பொலிஸாருக்கு சிபார்சு செய்தோம். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவதாசன் அவர்கள் முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தில் தற்காலிக பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டார். கடிதம் ஒன்று கொடுத்தனுப்புமாறும் அதன் பின் அவரை விடுதலை செய்வதாகவும் அந்த அதிகாரி தொலைபேசியில் தெரிவித்தார். அதன் அடிப்படையில் கௌரவ உறுப்பினர் சிவதாசன் அவர்கள் கடிதம் கொடுத்து விட்டபோது அந்தக் கடிதத்தோடு சென்ற அந்த இளைஞரின் பெற்றோரிடம் "அவரை விடுதலை செய்யமுடியாது: தடுப்புக் காவல் உத்தரவு போட்டுவிட்டோம்" என்று அதே பொலிஸ் அதிகாரி கூறியிருந்தார். அந்தப் பெற்றோர் தடுப்புக் காவல் எத்தனை நாட்கள் என்று கேட்டதற்கு அந்த அதிகாரி "தடுப்புக்காவல் 7 நாளும் இருக்கிறது, 3 மாதமும் இருக்கிறது" என்று பதிலளித்திருக்கிறார். அப்படியானால் எங்கள் பிள்ளைக்கு எத்தனை நாட்கள் தடுப்புக்காவல் பிறப்பிக்கப்பட்டுள்ளது என அவர்கள் வினவியபோது, அதற்கு அந்த அதிகாரி "அவையெல்லாம் உங்களிடம் சொல்லமுடியாது" என்று பதிலளித்துள்ளார். இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கடிதத்துடன் செல்லும் ஒருவருக்கு நடக்குமானால் சாதாரண நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை ஊகித்துக்கொள்ள முடியும். ஓர் உதாரணத்துக்காகத்தான் நான் இச்சம்பவத்தைக் குறிப்பிட்டேன். இது போன்று பல்வேறு சம்பவங்கள், தமிழ் மக்களைச் சந்தேகத்துக்குரியவர்களாக, இந்த நாட்டின் சட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்டு நடத்தப்படுகின்றவர்களாக எண்ணுகின்ற நிலைமை யைத்தான் வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றன.

கௌரவ தலைவர் அவர்களே,

கிழக்கு மாகாணத்தில் கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களும், யுவதிகளும் தற்போது எங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற விபரங்கள் அவர்களது குடும்பங்களுக்கு கூட தெரியப் படுத்தப்படுவதில்லை. குறிப்பாக திருகோணமலையில் வெள்ளை வானில் சுற்றித் திரியும் ஆயுதபாணிகள், தம்மை யார் என்று அடையாளம் காட்டாமல், தாம் விரும்பியவர்களை எல்லாம் பிடித்துச் செல்கின்றனர். இந்த வெள்ளை வானின் அட்டூழியம் குறித்து கடந்த மாதம் நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தின்போதும் எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நடராஜா அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால், இப்போதும் நடு இரவில் குறிப்பிட்ட வெள்ளை வானில் ஆயுதபாணிகள் கைதுகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இது தொடர்பாக பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அவர்கள் உடன் கவனத்திற்கொள்ள வேண்டும். அது மட்டுமல்லாமல், தம்மை இரகசியப் பொலிஸார் என்று கூறிக்கொள்வோரால், ஜீப் வண்டியிலும் பஸ் வண்டியிலும் இரவு நேரங்களில் தமிழர்கள் கைது செய்யப்படும் சம்பவங்களும் திருகோணமலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் இரவு நேரமாகிவிட்டாலே உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில், மக்கள் அச்சத்தோடு விழித்துக் கொண்டிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

கௌரவ தலைமை தாங்கும் அமைச்சர் அவர்களே,

1983ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையிலே 53 தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டார்கள். வரலாற்றில் என்றுமே காணாத கறை அது. அவ்வாறான சம்பவங்கள் மீண்டும் தலைதூக்கக் கூடாது என்று நாம் நினைத்தால், அவ்வாறான சம்பவங்களை தூண்டி விடக்கூடிய சிறைகளுக்கு காவலாக இருப்பவர்களின் அத்துமீறல் களை ஆரம்பத்திலேயே தடுக்க வேண்டும். 26.05.1995 அன்று திருகோணமலை மத்திய சிறைச்சாலையிலுள்ள தடுப்புக் காவல் கைதிகள் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். மத்திய சிறைச்சாலையில் இராணுவப் பொலிஸ் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளும் தாக்குதலுக்கு உள்ளாகியிருக் கின்றார்கள். இந்தத் தாக்குதலுக்கு இராணுவப் பொலிஸ்பிரிவைச் சேர்ந்த கோப்ரல் ரணசிங்க என்பவரே தலைமைதாங்கியிருக்கின்றார். இச் சம்பவத்தை அறிந்து திருகோணமலை மனித உரிமைகள் பணிக்குழு, இராணுவப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியான கப்டன் வீரசிங்க என்பவருக்கு புகார் தெரிவித்தது. இதனையடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.05.1995 அன்று கப்டன் வீரசிங்க, இராணுவ வைத்தியர் ஒருவரை அழைத்துச் சென்று கைதிகளிடம் விசாரணை நடத்தியுள்ளார். அந்த விசாரணை, தாக்குதலில் ஈடுபட்ட கோப்ரல் ரணசிங்க முன்னிலையில் தான் நடத்தப்பட்டது. அதனால் கைதிகள் பயம் காரணமாக வாய் திறக்கவில்லை. ஒரு கைதி மட்டும் தனது வாயினால் இரத்தம் வருவதாக வைத்தியரிடம் தெரிவித்தார். வைத்தியர் சென்ற பின்னர், அந்தக் கைதி மிகவும் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார். கௌரவ பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டால் மட்டுமே, இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் தடுக்க உதவும் என்பதை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தில் கிராம சேவகர் பிரிவுகள் தோறும் ஊர்காவல் படைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஊர்காவல் படையினருக்கு எந்தவிதமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. என்பதைக் கௌரவ அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். வீதிகளில் பொதுமக்களைச் சோதனையிடவும் ஊர்காவல் படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகின்றோம். திருகோணமலையிலுள்ள ஊர்காவல் படையினரால் தமிழர்கள் அச்சுறுத்தப்படுவதுடன், வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டுமானால், தமது அனுமதி பெறப்படவேண்டுமென்று அவர்களால் மிரட்டப்பட்டு வருகின்றனர். ஊர்காவல்ப்படை ஊருக்குள் இனமோதலையும் உயிர் அபாயங்களையும் விளைவிக்கும் படையாக மாறும் நிலைதான் ஏற்பட்டு வருகின்றது. இந்த ஊர்காவல் படைகள் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளுக்காக அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது, ஆனால், நாம் அறிந்தவரை இந்த ஊர்காவல்ப் படையினர், புலிகள் தாக்கும் போது திருப்பித் தாக்கிய சம்பவங்கள் கூட இடம்பெற்றதாகத் தெரியவில்லை. புலிகள் தாக்கிவிட்டுச் சென்றால் சாதாரண தமிழ் மக்கள் மீது அச்சுறுத்தலை ஏவிவிடும் வேலைகளைத்தான் திருகோணமலையில் ஊர்காவல் படைகள் செய்துகொண்டிருக்கின்றன. எனவே, ஊர்காவல் படை விடயத்தில் பாதுகாப்பு அமைச்சு தெளிவான வரையறைகளைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே,

அத்தியாவசியப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கும் நடைமுறை யிலுள்ள தடைகளுக்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது. சில பகுதிகளில் பாதுகாப்புப் படையினர். தமது விருப்பங்களுக்கேற்ப, தாமும் மேலதிகமான தடைகளை விதித்துக் கொண்டிருக்கின்றார்கள். உதாரணமாக, திருகோணமலை மாவட்டத்தில் மூதூரைச் சுற்றியுள்ள தமிழ்க் கிராமங்களுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு இராணுவம் தடை விதித்திருக்கின்றது. அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு, கூட்டுறவு சங்கங்களுக்குக்கூட தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசின் அறிவித்தலுக்கு மாறான இவ்வாறான இராணுவத் தடைவிதிப்புகள் நிறுத்தப்பட வேண்டும். மூதூரைச் சுற்றியுள்ள தமிழ் பேசும் மக்கள் தற்போதைய யுத்தம் காரணமாக அன்றாட ஜீவியத்திற்கே அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவ திப்படும் மக்களை மேலும் அல்லல்படுத்துகின்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த கௌரவ அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, திருகோணமலை மாவட்டத்திலுள்ள சலப்பையாறு, புடவைக்கட்டு, குச்சவெளி போன்ற பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் படையினரின் உதவியோடு நிலாவெளிக் கிராமத்தில் குடியேற்றப்படுகின்றனர். அந்நிலங்கள் கோவில்களுக்கும் தனியாருக்கும் சொந்தமான நிலங்களாகும். அவ்வாறு அவர்கள் குடியேற்றப்படுவதால், உள்ளூர் மக்களுக்கும் அவர்களுக்குமிடையில் முரண்பாடுகள் உருவாகியுள்ளன. எனவே, அம்மக்களை தமது சொந்த இடங்களுக்குத் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ அமைச்சர் அவர்களே,

வடபகுதி மக்களைப் பொறுத்தவரை, தற்போதைய யுத்தம் ஆரம் பித்ததன் பின்னர். அவர்களது வாழ்க்கை நிலை அவல நிலையாக மாறியுள்ளது. வட பகுதிக்குக் கொண்டு செல்ல முடியும் என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பொருள்கூட, தடை முகாம்களில் வைத்து படையினரால் தடுக்கப்படுகின்றன. வடக்கிற்குப் பொருட் களுடன் செல்லும் லொறிகள் கூட தடைமுகாம்களில் தேவையற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால தாமதத்திற்குள்ளாக்கப்படுகின்றன. வட பகுதிக்கு அரசாங்கம் அனுப்பி வைக்கும் உணவுப் பொருட்கள், தற்போதைய நிலையில் கால தாமதத்துடனேயே சென்றடைகின்றன. அதேசமயம் யாழ்ப் பாணத்திற்கு அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்படும் மண்ணெண் ணெயின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டுக்கு 'மாகோ' கப்பல் மூலமாக அரசாங்கம் மண்ணெண்ணை அனுப்பி வைக்கின்றது. இந்த 'மாகோ' கப்பலில் 12,000 பரல் மண்ணெண்ணெய் ஏற்றிச் செல்ல முடியும். அவ்வாறு 12,000 பரல் மண்ணெண்ணெய் ஏற்றிச் செல்லப்பட்டால் யாழ்ப்பாண மக்களின் ஒரு மாதத்திற்குரிய மண்ணெண்ணெய்த் தேவையில் 60 வீதத்தையே தீர்த்துவைக்கமுடியும். ஆனாலும், ஏப்பிரல் 19ம் திகதிக்கு முன்னர் - யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் - 9,500 பரல் மண்ணெண்ணெய் மட்டுமே ஒரு மாதத்திற்குரிய தேவைக்காக அனுப்பிவைக்கப்பட்டு வந்தது. இதனால் அங்கு மண்ணெண்ணெய் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவியது. இவ்வாறான நிலையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அரசாங்கத்தால் 5,922 பரல் மட்டுமே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதுகூட இரண்டு மாத கால தாமதத்தின் பின்னரே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, யாழ்ப்பாணத்துக்கான மண்ணெண்ணெய் ஏற்றப்பட்ட நிலையில் பாதுகாப்பின் அனுமதி கொடுக்கப்படாமையால் 'மாகோ' கப்பல் துறைமுகத்தில் ஏழு நாட்கள் தாமதித்து நின்றது. இதனால் கப்பலுக்கு நாள் ஒன்றுக்கு 3,000 அமெரிக்க டொலர்கள் கட்டணமாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தக் கட்டணத்தை யாழ்ப்பாண அரச அதிபரின் செயலகமே பொறுப்பேற்றது. தாமதம் காரணமாக ஏற்பட்ட 21,000 அமெரிக்க டொலர் செலவுக்கேற்ப, மண்ணெண்ணெய் அதிகரித்த விலைக்கே யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் 25 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகின்றது. அதேசமயம் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கடைகளில் ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் 75 ரூபா வரை விற்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இல்லாத நிலையில் அங்குள்ள அரச காரியாலயங்கள், மருத்துவமனைகள், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், போன்றவை மண்ணெண்ணெய் விநியோகத்தையே நம்பியிருக்கின்றன. அது மட்டுமல்லாமல், யாழ். மாணவர்கள் குப்பி விளக்கில்தான் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படும் மண்ணெண்ணெயின் அளவை அதிகரிப்பதோடு, தேவையற்ற கால தாமதங்களையும் தவிர்க்க வேண்டுமென்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். நன்றி.

08 ஜூன் 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு மீண்டும் அபகரிக்கும் வகையில் செயற்படுவது வருத்தத்துக்குரியது

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

பொது நிர்வாக. உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டத்துறை, பாராளுமன்ற விவகார அமைச்சானது இன்றைய அரசு இயந்திரத்தில் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கும் அமைச்சாகும். நிர்வாக அமைப்பிலுள்ள சகல உத்தியோகத்தர்களின் நியமனம், சேவை, நிபந்தனைகள், ஓய்வூதியம் போன்ற விடயங்களையும் நாட்டின் பல்வேறு நிர்வாகக் கடமைகளையும் ஆற்றுகின்ற மாவட்ட நிர்வாகம், நாட்டுக்கு, வெளிநாட்டுச் செலவாணியைப் பெருமளவு ஈட்டித்தரும் பெருந்தோட்டத்துறை என்பன இந்த அமைச்சின் கீழேயே வருகின்றன. இத்தகைய முக்கியமான விடயங்களைக் கையாளும் அமைச்சு சம்பந்தமான குழுநிலை விவாதத்திலேயே ஈ.பி.டி.பி சார்பாக கலந்துகொண்டு குறுகிய நேரத்திலே பல்வேறு பட்ட விடயங்களையிட்டு நுண்ணியமான முறையில் ஆராயமுடியா விடினும், சில விடயங்களையிட்டுச் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

கடந்த காலங்களில் பழைய கொள்கையின்படி அரசாங்க சேவைக்கு நியமனங்கள் செய்யப்பட்டபோது சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில அரசாங்க சேவைகளில் ஒரிரு சிறுபான்மை இனத்தவர்கூட நிய மனம் பெறமுடியவில்லை. உதாரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங் களை எடுத்துக்கொண்டால் இலங்கை நிர்வாகசேவை இரண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு இரண்டாந் தரத்தில் கிட்டத்தட்ட 200 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. வடக்கு - கிழக்கில் பல மாவட்டங்களில் உதவி அரசாங்க அதிபர் பதவிகளும், மாவட்டத் திணைக்களத் தலைவர் பதவிகளும் பதில் உத்தியோகத்தர்களாலேயே நிரப்பப்பட்டிருந்தன. பகிரங்க சேவைக்கு - அரசாங்க சேவைக்கு - ஆட்சேர்ப்பதற்கு கடந்த அரசாங்க காலத்தில் ஒரு புதிய தேசியக்கொள்கை கடைப் பிடிக்கப்பட்டது. இக்கொள்கை பற்றிய விபரங்கள் பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 15/90இல் தெரிவிக்கப்பட்டுள்ளன. இப்புதிய தேசியக் கொள்கையின்படி, நியமனங்கள் அரசியல் தலையீடுகள் இன்றி திறமை அடிப்படையில் இன விகிதாசார அடிப்படையிலும் செயற்படுத்தப்பட்டன. அரசியல் தலையீடுகள் இன்றித் திறமையும் இன்றி விகிதாசாரம் பேணப்பட்டு வந்தால் இலங்கை நிர்வாகசேவை போன்ற உயர்சேவைகளில்கூட கணிசமான அளவு சிறுபான்மையினர் அரச நியமனங்களைப் பெற்றனர். இந்தத் தேசியக் கொள்கை அமுலாக்கப்பட்ட பின்பு ஒரு சில சிறுபான்மையினர் நியமனங்களைப் பெற்ற போதிலும், ஏற்கனவே கிட்டத்தட்ட 200 வெற்றிடங்கள் இருந்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே இலங்கை நிர்வாக சேவை விசேட பரீட்சையொன்று நடத்தப்பட்டு, கிட்டத்தட்ட 90 உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு நிலைமை ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தற்பொழுது அரசாங்க சேவை நியமனம் சம்பந்தமான மேற்படிக் கொள்கை மாற்றப்பட்டுள்ளதாக அறிகின்றேன். சிறந்த போட்டி அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை வெளிநாட்டுச் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை போன்ற பல்வேறு பரீட்சைகளிலும் இன விகிதாசாரம் பேணப்பட மாட்டாதென அறியவருகின்றது. இன விகிதாசாரம், அரசாங்க நியமனங்களில் பேணப்படுவதானது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என்ற வாதத்தின் பேரிலேயே இந்தக் கொள்கை மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் நான் அறிகின்றேன். அப்படியாயின் இந்த நாட்டில் பல்கலைக்கழக அனுமதிகளில், தமிழ் பேசும் மாணவர்களுக்கு மிகவும் அநீதி இழைக்கப்படுகின்ற வகையில் மாவட்ட அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது, அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகாதா?

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மட்டும் இலங்கை நிர்வாக சேவையில் நூற்றுக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன. ஏனைய அரச சேவைகளிலும் இந்நிலைமை நிலவுகின்றது. தனியே திறமை அடிப்படையில் நியமனங்கள் செய்ய முயலும் போது, குறிப் பிட்ட பிரதேச மக்களின் மொழியைப் பேசாத உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டால், அதனால், அப்பகுதி மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. ஆகவே, மாவட்ட - மாகாண அடிப்படையில், அல்லது மொழிவாரியாகப் பதவி வெற்றிடங்கள் அடையாளங்காணப்பட்டு நியமனங்கள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

1963இல் இலங்கை நிர்வாக சேவை முறை உருவாக்கப்பட முன்பு 'டி.ஆர்.ஓ' முறை அமுலில் இருந்தது. 'டி.ஆர்.ஓ' க்கள் அதாவது இலங்கை பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள், கண்டிய மாகாணங்கள், கீழ் நாடு - "Low Country" - தமிழ் பேசும் பிரதேசங்கள் என்ற மூன்று பிரிவுகளின் அடிப்படையிலே பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெற்றது. 1963இல் புத்தளம், கற்பிட்டி, முந்தல் போன்ற பிரிவுகள் தமிழ் பேசும் பிரதேசங்களில் அடங்கின. உள்ளூ ராட்சி சேவைக்குகூட மொழிவாரியாக பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டு நியமனங்கள் நடந்தன. இந்த முறையானது மீண்டும் பின்பற்றப்பட்டாலேயே, வடக்கு - கிழக்கிடம் மலையகத்திலும் நிலவும் பதவி வெற்றிடங்களை சரியான முறையில் நிரப்பக்கூடியதாக இருக்கும்.

எமது நாட்டின் பகிரங்கசேவை சம்பந்தமாகவும் நான் சில கருத்துக்களை இந்த அவையில் முன்வைக்க விரும்புகின்றேன். நாம் விரைவில் 21ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கவுள்ளோம். ஆனால், எமது பகிரங்க சேவையோ இன்னும் பிரிட்டிஷாரால் கையளிக்கப்பட்ட அதேநிலையிலேயே உள்ளது. திறந்த பொருளா தாரக் கொள்கையை கடைப்பிடிக்கும் இன்றைய நிலையில் தனியார் துறையின் தேவைகளுக்கு ஒத்துழைப்புக் கூடிய, திறமை மிக்க பகிரங்க சேவையொன்று ஸ்தாபிக்கப்படல் அவசியமாகும்.

தலைவர் அவர்களே, தனியார் துறையினரால் மேற்கொள்ளப்படக் கூடிய வர்த்தகரீதியான நடவடிக்கைகளை அரசாங்கம் பகிரங்க சேவையிடம் விடவேண்டிய அவசியமில்லை. அத்தியாவசிய சேவைக ளைத் தவிர, வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ளும் அரசாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களங்கள் மூடப்பட வேண்டும்.

இந்த நாட்டில் நீண்ட காலமாக நடைபெற்றுவரும் போராட்டங்களை அடுத்து, மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் விதத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசியல் அமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில், மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ்வாறு மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக் கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் மத்திய அரசு அபகரிக்கும் விதத்தில், "பழைய குருடி கதவைத் திறடி" என்பதைப் போல செயற்படுவது வருத்தத்துக்குரியது. அதிலும் சிறுபான்மையினருக்கு உரிய நியாயம் வழங்குவதாக நாட்டு மக்கள் அனைவருக்கும் வாக்குறுதி அளித்து பதவிக்கு வந்த இன்றைய அரசாங்கம், அதிகாரப் பரவலாக்கப்பட்ட அமைச்சுக்களையும் திணைக்களங்களையும், ஏனைய அரச நிறு வனங்களையும் தன்னகத்தே கொண்டிருப்பது முரண்பாடான விடயமாகும். நன்நடத்தை, சிறுவர் பராமரிப்புத் திணைக்களம், சமூக சேவைத் திணைக்களம், மத்திய உள்ளூராட்சி ஆணையாளர், மத்திய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் போன்ற திணைக்களங்களும், பதவிகளும் இன்றைய நிலையில் மத்திய அரசின் கீழ் இயங்குவது அவசியமா? திறந்த பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்படும் இந்தக் காலகட்டத்தில் இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அவசியமா? தற்போது விவசாய அபிவிருத்தி அதிகார சபைக்கான தேவை உள்ளதா? அரசாங்க பகிரங்க சேவை சம்பந்தமான சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் போது இவை குறித்துப் பரிசீலிக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் எமக்கு அவசியமானது சிறிய, ஆனால் திறமையான பகிரங்க சேவையொன்றே. பொது நிருவாக அமைச்சு இந்த முயற்சிக்குத் தலைமை ஏற்க வேண்டும். பகிரங்கசேவைச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காகச் சிறிய, ஆனால், பலம்வாய்ந்த குழுவொன்று அமைக்கப்படல் வேண்டும்.

மலேசியா, இந்தோனிசியா, கனடா, போன்ற நாடுகளில் மேற்கொள் ளப்படும் பகிரங்கசேவை சீர்திருத்தங்களை நாம் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். நமது நாட்டிலும் இவ்வாறான சீர்திருத்தங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். கடந்த காலத்தில் ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான சீர்திருத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தலைமைத்துவத்தின் உதவியுடன் இச்சீர்திருத்தங்கள் மேற் கொள்ளப்படின் வெற்றி கிடைப்பது நிச்சயம். We need political commitment இதனை நாம் மறக்கக்கூடாது.

பகிரங்க சேவையைப் பொறுத்தமட்டில் இன்னுமொரு விடயமும் மிக முக்கியமானது. நாம் திறமையான பகிரங்க சேவையொன்றினை எதிர்பார்த்தல், அதற்கேற்ப எமக்குச் சில கடமைகளும் உள்ளன. முதலாவதாக, திறமையான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யவேண்டும்: இரண்டாவதாக அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு சிறந்த சம்பளத்தை வழங்க வேண்டும். இன்று இலங்கையில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் திருப்தியானதாக இல்லை. வங்கியொன்றில் சிற்றூழியரொருவர் பெறும் சம்பளம், அரசாங்க சேவையில் ஓர் அலுவலக அதிகாரி – Staff Officer – பெறும் சம்பளத்தைவிட அதிகமானது. கௌரவ நிதியமைச்சர் வழங்கியுள்ள 250 ரூபா சம்பள அதிகரிப்பு - அதுவும் இரண்டு கட்டமாக - திருப்தியானதாக இல்லை. நாட்டைப் பாதுகாக்கும் நிதிக்கு சில அரசாங்க ஊழியர்கள் தமது சம்பளத்தில் இரண்டு சதவீதத்தைக் கொடுக்கவேண்டியுள்ளது. அரச ஊழியர்களின் 250 ரூபா சம்பள அதிகரிப்பைவிட இது அதிகமான தொகையாகும்.

தேசிய சம்பள ஆணைக்குழு அரசாங்க ஊழியரின் சம்பள விடயத்தில் திருப்திகரமான, முன்னேற்றகரமான ஆலோசனைகளைத் தெரிவிக்குமென்று நான் நம்புகின்றேன். சிங்கப்பூர், மலேசியா, போன்ற கைத்தொழில் மயமாகிவரும் நாடுகளில் சம்பள விகிதங்களுக்கொப்ப இலங்கையிலும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படல் வேண்டும். நமது அண்டை நாடான இந்தியாவில்கூட, அரச ஊழியர்களுக்கு திருப்தியான வேதனம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. திறமை வாய்ந்த, தகுதிவாய்ந்த ஊழியர்களைக் கவரும் விதத்தில் சம்பள விகிதம் அமைவது முக்கியமானதாகும்.

கௌரவ தலைவர் அவர்களே,

இந்த அமைச்சின் கீழ் உள்நாட்டு அலுவல்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களும் வருகின்றன. மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள் போன்றோர் இந்த அமைச்சின் கீழேயே கொண்டுவரப்பட்டுள்ளனர். மாவட்ட நிர்வாகம் தொடர்பாக எமது நாடு பல பரீட்சாத்தங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை சந்தித்துள்ளது. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் நமது நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த கச்சேரி முறை 1990இல் மாற்றம் கண்டது. எனினும் அதற்குப் பதிலாக உருவான பிரதேச செயலகமுறை பெரிதாக வெற்றியளிக்க இடம் தரப்படவில்லை. மீண்டும், அரசாங்க அதிபர்கள் மாவட்ட செயலாளர்கள் என்ற உருவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். சிறிது காலம் பிரதேச செயலாளர்களும் கிராம சேவை உத்தியோகத்தர்களும் மாகாண சபையின் கீழ் செயற்பட்டு, இப்போது மீண்டும் உள்நாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பான மத்திய அமைச்சின்கீழ்க் கொண்டு வரப்படவுள்ளனர். இப்பரீட்சார்த்தங்கள் யாவும் அவசியமானவையா? முன்னோடி வழிகாட்டி – PILOT – அடிப்படையில் இவற்றை பரீட்சித்துப் பார்த்துப் பின்னர் அமுலாக்கியிருக்கலாமல்லவா!

கிராமசேவை உத்தியோகத்தர்கள் மத்திய அரசின் கீழ்க் கொண்டு வரப்பட்டதை, பொதுஜன ஐக்கிய முன்னணியில், மேல்மாகாணசபை ஆகியவற்றின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது கண்டித்திருந்தனர். ஆனால், இன்று நிகழ்வது என்ன? கிராமசேவை உத்தியோகத்தர்களை மீண்டும் மாகாண சபையின் கீழ்க் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்தியாவில் மாவட்ட கலெக்டர்கள், தாசில் தாரர்கள், கிராமநிர்வாக அதிகாரிகள் போன்றோர் மாநில அரசின் கீழ் கடமை புரிகின்றனர். இலங்கையிலும் உண்மையாகவே அரசு அதிகாரப் பரவலாக்கலை அமுல்படுத்த விரும்பினால், மாவட்ட நிர்வாகங்களைப் பூரணமாக மாகாண அரசுகளிடமே வழங்க வேண்டும். இதனைக் கௌரவ அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலே கடமை புரியும் அரசாங்க ஊழியர்களுக்கான இடர்க் கொடுப்பனவு - றிக்ஸ் அலவன்ஸ் - தொடர்பாக இச்சபையில் பிரஸ்தாபிக்க விரும்புகின்றேன். நெருக்கடியான பிரதேசங்களில் கடமைபுரியும் அரச ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென்று அரசு தீர்மானித்தது. அதற்கு அங்கீகாரமும் வழங்கியிருந்தது. ஆனால், இன்றுவரை வடக்கு - கிழக்கிலுள்ள விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கடமையாற்றும் அரச ஊழியருக்கு அதனை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு செய்து தரப்படவில்லை. இவ்வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து டிசம்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம்வரை இக்கொடுப்பனவுகள் வழங்கப்படுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அனுராதபுரம், புத்தளம், போன்ற பகுதிகளும் நெருக்கடியான பிரதேசங்களாகக் கருதப்பட்டு, அங்கும் இடர் கொடுப்பனவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்நது. இப்பகுதிகளுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். ஆனால், மிகவும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பல சிரமங்கள் மத்தியில் கடமை புரிபவர்களுமான வடக்கு - கிழக்கு மாகாண அரச ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுவதை வேதனையுடன் நாம் நோக்குகின்றோம். இக்கொடுப்பனவுகளை அரச ஊழியர்களுக்கு வழங்க 180 மில்லியன் ரூபா மாகாண சபைக்குத் தேவைப்படுகின்றது. இப்பணம் கிடைக்கப்பெற கௌரவ அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக, விடுவிக்கப்படாத பிரதேசங்களில் கடமைபுரியும் அரச ஊழியர்களுக்கும் இந்த இடர்க்கொடுப்பனவு வழங்கப்படாதது வருத்தத்திற்குரியது. இப்பிரதேசங்களில்தான் மிகவும் சிரமங்களின் மத்தியில் அதிக வாழ்க்கைச் செலவுகளை எதிர்நோக்கி, பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் இவ்ஊழியர்கள் கடமை புரிகின்றனர். இவர்களின் நிலைமையைப் புரிந்து அவர்களுக்கும் இக்கொடுப்பனவுகள் கிடைக்க கௌரவ அமைச்சர் மனிதாபிமான அடிப்படையில் உதவ முன்வரவேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

மன்னார்தீவு, நெடுந்தீவு போன்ற பகுதிகளில் விடுவிக்கப்படாத தேசங்களாகக் கருதப்பட்டு, இந்தக் கொடுப்பனவு வழங்குவதற்குரிய பட்டியலிலிருந்து விடுபட்டுள்ளன. இவ்விரு பகுதிகளும் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட பிரதேசங்களாக இருந்தும் விடுவிக்கப்படாத பகுதிகளாகக் கருதியதன் காரணம் எனக்குப் புரியவில்லை. ஆகவே இவ்வகையான தவறுகள் நீக்கப்பட்டு அப்பிரதேசங்களில் கடமை புரியும் ஊழியர்களைக் கௌரவப்படுத்துமாறும், மேலும் அரச ஊழியர்கள் அங்கு சென்று கடமையாற்ற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே,

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பல்வேறு அமைச்சுச் செயலகங்கள், பிரதேச திணைக்களங்களில் உள்ள ஆளணிப்பற்றாக்குறையின் விபரங்களைப் பார்த்தால், அதிர்ச்சியாகவுள்ளது. இந்த ஆளணிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றாக்குறை சம்பந்தமாக சம்பள ஆளணிக் கமிசனுக்கு பல தடவைகள் அறியத்தந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பல்வேறு அமைச்சுச் செயலகங்கள், திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் காணப்படும் வெற்றிடங்களும், நிரப் பப்பட வேண்டிய ஆளணித் தேவைகள் பற்றிய விபரத்தினை இச்சபா பீடத்தில் சமர்ப்பிக்கின்றேன். இப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய கௌரவ அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன். நன்றி

05 டிசம்பர் 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்

கௌரவ தலைவர் அவர்களே,

கமத்தொழில், காணி, வன வள அமைச்சின் மீதான இந்த குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதையும், இவ்வமைச்சு தொடர் பான தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளையும் அவர்களின் உண்மை நிலைமைகளையும் ஈ.பி.டி.பி சார்பில் இங்கு முன்வைப்பதையும் நான் கடமையாகக் கொண்டுள்ளேன்.

ஒரு நாட்டில் பாரம்பரியமாக பல்லாண்டு காலமாக, பல்லாண்டு காலங்களாக வாழ்ந்து வரும் இனங்களின் தேசியத்தை முன்நிறுத்து வதில் பிரதான பாத்திரம் வகிப்பவை, அம் மக்களின் மொழியும் அம்மக்களின் தொடர்ச்சியான நிலப்பரப்பாகும். இலங்கையைப் பொறுத்தவரையில், தமிழ் பேசும் மக்கள் தங்களின் பூர்வீகத் தாயக மாக கொண்டுள்ள வடக்கு - கிழக்குப் பிரதேசம், பிரித்தானியாவின் இன ரீதியான பிரித்தாளும் பிரதிநிதித்துவ முறையின் ஊடாகவும் கூறு போடப்பட்டு வந்திருக்கின்றது. காலத்திற்கு காலம் ஆட்சியதிகாரத் தில் இருந்தவர்கள் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் தாயக நிலம் தொடர்பாகக் கொண்டிருந்த சட்டவிரோதக் குடியேற் றக் கொள்கையானது, தமிழ் மக்களுடைய ஆயுதப்போராட்டத்தை ஊக்குவித்த காரணிகளுள் பிரதானமாக கொள்ள வேண்டியவற்றில் முதன்மையானதாகும். இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களாகிய நாம், உரிமையை இழந்தோம், உடமையை இழந்தோம், சமத்துவத்தை இழந்தோம், அமைதியை இழந்தோம், மொழியை இழந்தோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணை இழந்தோம், உயிரை, கற்பை இழந்தோம் என்பதே வரலாறு ஆகும்.

1941ஆம் ஆண்டு டி.எஸ். சேனாநாயக்கவினால் கல்லோயா, பட்டிப் பனை ஆற்றில் ஆரம்பிக்கப்பட்ட சட்டவிரோதமான குடியேற்ற மானது இன்று திருமலை லிங்கநகர் வரை தனது ஆக்கிரமிப்புக் கரங்களை நீட்டியுள்ளது. இச் சட்டவிரோதக் குடியேற்றங்கள் என்ற நில ஆக்கிரமிப்பின் பின்னால், அரசும் மத நிறுவனங்களும், இன வாதிகளும் தீவிரமாக செயற்பட்டு வருவதை நாம் காண்கின்றோம். இத்தகைய கொடூரமிக்க, நியாயமற்ற குடியேற்றங்கள் பல வழிகளாலும் திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றன. விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் என்றும், மீனவர் குடியேற்றங்கள் என்றும், கைத் தொழில் அபிவிருத்தி என்றும் புனிதப் பிரதேசம் என்றும், படை முகாம்கள் விஸ்தரிப்பு என்றும், தற்பொழுது மீள்குடியேற்றம் என்றும் பல வழிகளில் தமிழ் பேசும் மக்களின் நிலங்கள், வளங்கள் சூரையாடப்படுகின்றன.

தமிழ் பேசும் மக்களை அடியோடு வேரறுக்கும், அச்சுறுத்தும், அரசியல் அநாதைகளாக்கும், இக்குடியேற்றங்களின் விளைவால், கிழக்கில் அம்பாறை மாவட்டமும், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய மாவட்டங்கள் என்ற நிலையிலிருந்து மாறும் அபாயத் தருணத்தில் இருக்கின்றன. 1940ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் 3000ஆக இருந்த சிங்கள மக்கள் தொகை 1981இன் குடிசன மதிப்பீட்டின் படி, 146,371 ஆக உயர்ந்து நிற்கின்றது. இதேபோன்று 1880ஆம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் வெறும் 935 பேராகவிருந்த சிங்கள மக்களின் தொகை, 1981ஆம் குடிசன மதிப்பீட்டின் படி, 86,341 ஆக அதிகரித்துள்ளது. 1981ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள், சிங்கள மக்களை விட 402பேராலேயே கூடுதலாக உள்ளனர். 1880களில் திருகோணமலையில் சிங்கள மக்களை விட 17 மடங்கு அதிகமாக இருந்த தமிழர்கள், 1981ல் அதாவது 100 வருடங்களுக்கு பின்னர், சிங்கள மக்களை விட 402 பேர்களால் மாத்திரமே கூடுதலாக இருக்கும் அளவுக்கு அவர்கள் ஆக்கிரமிப்பின் உச்சத்தில் இருக்கின்றனர். யுத்தத்தால் வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தவர்கள், அகதிகளாக இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் போன்றவர்களின் எண்ணிக்கை யும் இந்த மதிப்பீட்டிற்கு உட்படுத்தினால், இன்று திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம் சிங்கள மக்கள் பெரும்பான்மையாகவுள்ள மாவட்டமாக இருப்பது நிரூபணமாகிறது.

இன்று திருமலையும் அம்பாறையும் முற்றுமுழுவதாக ஆக்கிரமிக்கப் பட்டுள்ள நிலையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களான மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் தமிழ் பேசும் மக்களின் நிலங்கள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. அங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்கள், துரத்தியடிக்கப்படுகின்றனர். 'மணலாறு' என்ற தமிழரின் பாரம்பரிய பிரதேசம் இன்று 'வெலிஓயா' என்ற பிரதேசமாக பெயர் மாற்றப்பட்டிருக்கின்றது. அது போன்று அம்பாறை மாவட்டத்தில் கல்ஓயா விவசாயக் குடியேற்றம் தீகவாபி புனிதப் பிரதேசக் குடியேற்றத்திட்டம் திருமலையில் திருகோணமலை நகர், கந்தளாய் முதலிக்குளம், பன்குளம், திரியாய், புடவைக்குட்டு, புல்மோட்டை, அல்லை, பதவிக்குளம், வவுனியா மாவட்டத்தின் எல்லைப் பகுதிகள், முல்லைத்தீவில் கொக்கிளாய், நாயாறு, மணலாறு என இடம்பெற்றுள்ள, குடியேற்றத்திட்டப் பட்டியலை அடுக்கிக்கொண்டே போகலாம், தெற்கிலுள்ள வறிய சிங்கள மக்கள், அபிவிருத்தித் திட்டங்களென்ற போர்வையில் வெளிநாட்டு நிதி உதவிகளுடனும் அரசாங்கத்தின் பூரண உதவிகளுடனும் பாதுகாப்பு ஆயுதங்களுடனும் உலர் உணவு நிவாரணமும் வழங்கப்பட்டுக் குடியேற்றப்படுகின்றனர்.

இவ்வாறான நில ஆக்கிரமிப்பின் தந்திரோபாயத்தினால் தமிழ் பேசும் மக்கள் தங்களது பூர்வீக நிலங்களின் பெரும்பகுதியை இன்று இழந்து நிற்கின்றனர். கைத்தொழில், வியாபாரம் எனத் திட்டமிட்ட குடியேற்றத்திற்குப் பெருமளவு இலக்கானது திருகோணமலை மாவட்டமாகும். திருகோணமலைத் துறைமுகத்தை இலக்காக வைத்துப் பாரிய கைத்தொழில் நிறுவனங்களுக்காகவும், உல்லாசப் பயணத்துறைத் திட்டங்களுக்காகவும் பெருமளவான காணிகள் அபகரிக்கப்பட்டமையாலும் துறைமுக ஊழியர்களாகவும் பிறிமா ஆலை போன்ற பெரிய கைத்தொழில் நிறுவனங்களின் ஊழியர் களாகவுமுள்ள பெரும்பான்மை சமூக மக்களுக்கு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமையாலும் இன்று அங்குள்ள கூடுதலான நிலப் பரப்புக்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. இதுவரை காலமும் திருகோண மலை மாவட்டத்தின் வடக்கு, மேற்கு, தெற்கு ஆகிய எல்லைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் நடைபெற்று வந்த திட்டமிட்ட குடியேற்றம், புற்றுநோய் பரவுவது போல திருகோணமலை மாவட்டத்தின் இதயப்பகுதியான திருகோணமலை நகருக்குள் பரவிவிட்டது. இவை தொடர்பான சில விடயங்களை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கௌரவ தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே,

திருகோணமலையின் பிரசித்து பெற்ற இந்துக் கோவில்களுக்கும் 'ரஸ்டி' களுக்கும் சொந்தமான நிலங்களும் மயானங்களும் பெரும்பான்மை சமூகத்தினரால் அபகரிக்கப்படுகின்றன. மணிக்கூட்டுக் கோபுரத்திற் கும் 'பிறட்றிக்' கோட்டைக்கும் இடையிலுள்ள, காளிகோவில் தீர்த்த உற்சவத்திற்குக் காலம் காலமாக பயன்படுத்தப்பட்டுவந்த கடற்கரை நிலங்கள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. திருகோணமலை சனீஸ்வரர் கோவில், கிருஸ்ணர் கோவில், சிறுதுறையூற்றுப்பிள்ளையார் கோவில், தொடுவாய்ப் பிள்ளையார் கோவில், முத்துக்குமார சுவாமி கோவில் போன்ற இன்னும் பல கோவில்களுக்குச் சொந்தமான காணிகளில், காலி, மாத்தறை, களுத்துறை, பாணந்துறை, குருநாகல் ஆகிய இடங் களிலிருந்து அழைத்துவரப்பட்டவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இக்கோவில்களின் நிர்வாகங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை மீட்பது தொடர்பாக உரிய இடங்களுக்கு புகார் செய்திருந்தும்கூட, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

திருகோணமலை நகரின் நுழைவாயிலான மட்டிக்களியில், சண்முகா 'ரஸ்டி' க்குச் சொந்தமான 11 ஏக்கர் நிலம், திடீர் திடீரென ஒவ்வொரு நாளும் அமைக்கப்படும் குடிசைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. திருகோணமலை நகரில் வடகரை வீதியிலுள்ள வீர நகரில் முஸ்லீம்களுக்குச் சொந்தமான மையவாடியின் பெரும்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. இந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளி யேற்றி பள்ளிவாசல் நிர்வாகத்திடம் மையவாடியை ஒப்படைக்கும் படி நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும், இவ் உத்தரவை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் இது தொடர்பாக எந்த வித நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை. இதேபோன்று திருகோணமலை நகரின் பிரதான இந்து மயானத்தின் ஒரு பகுதியும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலுள்ள 'லவ் லேன்' என்னுமிடத்தில் வசித்துவந்த 34 முஸ்லீம் குடும்பங்களும் 16 தமிழ்க் குடும்பங்களும் 1990களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேற்றப்பட்டு, அவர்களின் குடியிருப்புகள் ஆக்கிரமிக் கப்பட்டன. இதில் மிகவும் பரிதாபத்துக்குரிய விடயம் என்ன வெனில், அவர்கள் தமது சொந்த வீடுகளுக்கு முன்பாகவுள்ள அரசாங்கக் களஞ்சியக் காணியில் அகதிகளாக இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதே. திருகோணமலை 'லவ் லேன்' பகுதியில் இலங்கை மின்சார சபையினால் அவர்களின் பாவனைக்காகக் கோரப்பட்ட நிலத்தில் அவசர, அவசரமாக நூற்றுக்கு மேற்பட்ட சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அவர்களில் பலருக்கு காணி அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இக் குடியிருப்புக் களுக்கு மேலாக அதிசக்தி வாய்ந்த மின்சாரத்தைக் கொண்டு செல்லும் மின் கம்பிகள் செல்லுகின்றன. இப்படியான பாதுகாப்பற்ற இடங்களிலுள்ள காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கியது தவறான ஒரு நடவடிக்கையாகும்.

ஹபரணை - திருகோணமலை நெடுஞ்சாலையின் இரு புறமும் உள்ள வனத் திணைக்களத்திற்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளின் காடுகள் அழிக்கப்பட்டு, ஹபரணையிலிருந்து திருகோணமலை 04ஆம் கட்டை வரை திட்டமிட்ட முறையில் மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இதைவிட, சீனக் குடாவிலிருந்து திருமலை புகையிரத நிலையம் வரை புகையிரதப் பாதையின் இரு மருங்கிலுமுள்ள புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலங்கள் அபகரிக்கப்பட்டு, அங்கும் குடியேற்றம் நடைபெற்றுள்ளது. இவற்றிற்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாறாக மின்சாரம், நீர், போன்ற அடிப்படை வசதிகள் அவற்றிற்கு அரசாங்கங்களால் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இன்று திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் மிகவும் வேதனையுடன் இருக்கின்றனர். லிங்கநகரில் இராணுவப் பயிற்சி முகாம் அமைக்கப் பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி மக்களின் மனதில் அச்சமும் பீதியும் தோன்றியுள்ளது. லிங்கநகர் இராணுவப் பயிற்சி முகாம் அமைக்கப் பட்ட நடவடிக்கையை, பாரம்பரியமாக அக்கிராமத்தில் வாழ்ந்து வரும் ஏழைத் தமிழ் மக்களைத் திட்டமிட்ட நோக்கில் வெளியேற்றும் ஒரு நடவடிக்கையாகவே அம் மக்கள் கருதுகின்றார்கள். அது மட்டுமல்ல அம்மக்கள், இராணுவத்தினரால் அச்சுறுத்தப்படுகின்றனர். இதுவரை 40 குடும்பங்கள் அங்கிருந்து துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். மேலும் 300குடும்பங்கள் மண் இழந்தவர்களாக நடுத்தெருவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அநீதியான செயல் தொடர்பாக எமது கட்சி பலமுறை இச்சபையிலும் வெளியேயும் குரலெழுப்பி, அம் மக்களின் வெளியேற்றத்தை அரசு தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுவந்துள்ளது. ஆனால் அரசு அம் முயற்சியில் தீவிர முனைப்புக் காட்டுவது வேதனைக்குரியதாகும். அம் மக்கள் இன்று அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துகின்றனர். அம் மக்களை அங்கிருந்து வெளியேற்றுவது தான் உங்களது அரசின் கொள்கையென்றால் தமிழ் பேசும் மக்களின் தாயக மண்ணை கபளீகரம் செய்வதுதான் உங்கள் திட்டமென்றால், - தமிழ் பேசும் மக்கள் உங்களிடம் நியாயத்தை எதிர்பார்ப்பார்களா? என்று இச் சபையில் கேட்க விரும்புகின்றேன்.

புனித பிரதேசக் குடியேற்றங்களாக தமிழ், முஸ்லீம் தேர்தல் தொகுதியாக இருந்த மூதூரின் ஒரு பகுதி, சேருவில தொகுதி என 1976ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் உருவாக்கப்பட்டது. திருமலை மாவட்ட மொத்த நிலப்பரப்பின் 3/5 பகுதியை இத் தொகுதி ஆக்கிரமித்துக் கொண்டது. இச் சேருவலத் தொகுதி, புனித நகரத்திட்டத்தின் மூலம் இன்றும் தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதேபோன்று திரியாய புனித நகரத் திட்டம், தீகவாபி புனித நகரத் திட்டம் என்பவற்றினால் 1000க் கணக்கான ஏக்கர் நிலங்களை தமிழ், முஸ்லீம் மக்கள் இழந்துள்ளனர். வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களை அச்சுறுத்தும் இக் குடியேற்றத் திட்டங்களினால் அம் மக்கள் தம் பொருளாதார வாய்ப்புக்கள், வளங்கள், பிரதிநிதித்துவம், ஆகியவற்றை இழந்து நிற்கின்றனர். அம்பாறை, திருகோணமலை, வவுனியா, ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற குடியேற்றங்களினால் தமிழ் பேசும் மக்கள் தங்களது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்திருக்கின்றனர். இக் குடியேற்றத் திட்டங்கள், வடக்கு - கிழக்கு மட்டுமல்லாது, எங்கெல்லாம் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அம் மக்கள் வாழ்வை பலவீனப்படுத்துவதற்காக திட்டமிட்டு செயற்படுத்தப்படுவதை நாம் காண்கின்றோம்.

இன்று இச் சபையில் நான் அழுத்திக் கூறுவது என்னவென்றால் உண்மையாகவே நீங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்கத் தயாராக இருக்கின்றீர்கள், அம் மக்களின் அபிலாசைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கின்றீர்கள் என்றால், உடனடியாக தமிழ் பேசும் பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துவதுடன், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களையும் நியாயமான முறையில் அகற்றுதல் வேண்டும் என்பதே ஆகும். இல்லையேல் இந்நாட்டின் தேசிய இன முரண்பாடு மேன்மேலும் கூர்மையடைந்து, சமாதானத்துக்கான சூழ்நிலை ஒரு போதும் ஏற்படாது என்பதனை இச் சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். தமிழ் பேசும் மக்கள் தங்கள் இருப்புத் தொடர்பாக பன்நெடுங்காலமாக அச்சுறுத்தப்படுவது, உண்மையான சமாதானத்துக்கு பெரும் தடையாக இருந்து வருகின்றது என்பதை நாம் உணர்தல் வேண்டும். உங்களுடைய தாயக மண்ணை கபளீகரம் செய்ய நாம் ஒரு போதும் முனைந்ததில்லை. எமது மண்ணில் எமது மக்கள் வாழ்வதற்கான உரிமையை அவர்களுக்கு வழங்குங்கள் என்றே நாம் கேட்கின்றோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, அதிகாரப் பரவலாக்கம் பற்றி நாம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பேசிக்கொண்டு இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான தீர்வை நோக்கிய அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான யுத்தம், திட்டமிட்ட காணிக் குடியேற்றம் போன்ற பல்வேறு காரணிகளை ஊட்டி வளர்த்து வருவோமானால், எம்மால் ஒரு போதும் நிம்மதியான சமாதானத்தை காணமுடியாது என்பதை இந்தச் சபையில் அழுத்திச் செல்ல விரும்புகின்றேன்.

ஆண்டாண்டு காலமாகப் பாலஸ்தீன மண்ணில் வாழ்ந்த பாலஸ்தீன மக்கள் தாயகம் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டது போன்ற நிலைமைக்கே, எமது மக்களும் ஒவ்வொரு நாளும் முகங்கொடுத்து வருகின்றார்கள். பாலஸ்தீன கவிஞன் ஒருவனின் கவிதை ஒன்றை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

> சூறையாடப்பட்ட மண்ணில் இருந்தும்
> எரிந்து போன வீடுகளில் இருந்தும்
> என்னிடம் பேசுகின்றது ஒரு குரல்
> இப்போது நீ போய் விடப் போகிறாயா?
> இப்போது நீ போய் விடப் போகிறாயா?
>
> அந்தக் குரல் சொல்கிறது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசகாரக் கூட்டம் உன்னைச் சுற்றி நிற்கிறது
விலங்கு வடிவங்கள் உன்னை நெருங்குகின்றன
பீதி எனும் வௌவால் இறக்கைகளின் கீழ்
காலம் ஒளிந்து கொண்டு உள்ளது
இப்படி இருந்தும் நீ போகாதே!
இப்படி இருந்தும் நீ போகாதே!

வானத்தில் இருந்து ஒளி இன்னும்
ஓடிப் பதுங்கவில்லை
ஆற்றின் இடையோ
ஒரு நாடோடிப் பெண் போல் வளைகிறது
நீ போகவே மாட்டாய் ஒரு போதும்
தோல்வி உற்ற போர் வீரனைப் போல் எங்கும் போக
மாட்டாய்
இந்தப் பூமியை விட்டு

கௌரவ தலைவர் அவர்களே,

அடுத்ததாக விவசாய நடவடிக்கைகளில் எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இச்சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். வடக்கு - கிழக்கு மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். ஆனால், இன்று யுத்த நிலைமையைக் காரணம் காட்டி, நீர்ப்பாசன, விவசாய அபிவிருத்தி வேலைகள் எதுவும், வடக்கு - கிழக்கில் கடந்த பல வருடங்களாக நடைபெறவில்லை. ஆனால், தெற்கில் வெளிநாடுகளின் நிதியுதவியுடனான பல விவசாய, நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் பாரிய அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் யூரியாவைப் பயன்படுத்த, முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர், அனைத்து நைதரசன் வளமாக்கிகளுக்குமான தடை விஸ்தரிக்கப்பட்டது. இப்போது வடக்கு - கிழக்கில் படையினரின் பூரணக் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் பகுதிகளில் கூட, யூரியா உட்பட, நைதரசன் வளமாக்கிகளை பாவிக்க அனுமதியில்லை. வடக்கு - கிழக்கின் விவசாய உற்பத்தியைக் குறைத்து, அதன் மூலம் பொருளாதாரத்தை நலிவுறச் செய்து, அம் மக்களை பட்டினிக்குள்ளாக்குவதே இந்தத் தடை நடவடிக்கைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான நோக்கமோ? என நாம் ஐயமுறுகின்றோம்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்பு, யாழ் மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டுவரப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்போவதாக, அரசின் பிரச்சார சாதனங்களில் உரத்த குரலில் சொல்லப்பட்டது. ஆனால் இன்று வரை இதற்கு போதுமான அளவு நடவடிக்கைகள் அங்கு எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் விவசாய உள்ளீட்டுப் பொருள்களுக்கு அதாவது விதை, வளமாக்கிகள், களைநாசினி, கிருமிநாசினி மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் விவசாய உபகரணங்கள் விவசாய இயந்திரங்கள் போன்றவற்றிற்கு இன்னும் அங்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அதேவேளை அங்குள்ள விவசாயி கள் கஸ்டப்பட்டு உற்பத்தி செய்யும் விளைபொருள்களை அங்கு நல்ல விலைக்கு சந்தைப்படுத்த முடிவதில்லை. தற்போது யாழ்ப்பாணத்தில் போதியளவு சந்தை வசதி இல்லை. யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் மரக்கறி வகைகள், பழ வகைகள், கிழங்கு வகைகள் வெங்காயம், செத்தல் மிளகாய், புகையிலை போன்ற பொருட்கள் யாழ்ப்பாணத்தில் வைத்தே அரசு கொள்வனவு செய்வதுடன் அவற்றை தென் இலங்கைக்கு உடனுக்குடன் அனுப்பி சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் தற்பொழுது பெருமளவான சின்ன வெங்காயம் சந்தைப்படுத்த முடியாமல் தேங்கிக் கிடக்கின்றது. இதேவேளை யாழ்ப்பாணத்தில் மிக முக்கியமான விவசாயப் பகுதிகளான செம்மண் பிரதேசங்கள், அதிபாதுகாப்பு வலயங்கள் எனப் பிர கடனப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் வளமான அந்த நிலங்களில் எந்தவிதமான விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாமல் விவசாயிகள் கஷ்டமுறுகின்றனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் அல்லது அப்பகுதிகளில் பயிர் செய்ய அனுமதியளிக்க வேண்டும்.

வன்னியில் இம்முறை போதிய மழையின்மையால் விவசாயம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. குடிநீருக்கு கூட அங்கு பெரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. தற்போது மழைக்காலம் ஆரம்பமாகி யுள்ளதால் உடனடியாகப் போதிய விவசாய உள்ளீட்டுப் பொருள்களை வன்னிப் பகுதிக்கு அனுப்பி வைக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக, ஏனைய துறைகளில், சிங்களமொழித் திணிப்பு நடை பெறுவது போல, விவசாயத் துறையிலும் மொழித்திணிப்பு நடைபெறுவதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 'கொவி செத்த' 'கொவிசெவன' 'கொவி கேந்தர' போன்ற சிங்களச் சொற்பிரயோகங் களுக்குப் பதிலாக, நல்ல தமிழ் சொற்களின் பிரயோகம் இடம்பெற வேண்டும். இந்த நாட்டில் தமிழ் பேசும் விவசாயிகளும் கணிசமான அளவில் உள்ளனர் என்பதை உணர்ந்து, அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து, அவர்களின் மனங்களைப் புண்படுத்தாது அரசு நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகின்றேன். நன்றி

29 நவம்பர் 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு – கிழக்கு கல்வித்துறையில் நிலவும் ஆளணி பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படவேண்டும்

கௌரவ தவிசாளர் அவர்களே,

1993ஆம் ஆண்டில் சம்பள ஊழியர் கோப்புக் குழுவினால் Salaries Committee இனால் வடக்கு - கிழக்கிலுள்ள பாடசாலைகளுக்கான மொத்த ஆளணித் தேவை 31,057 எனவும், அதன் பிரகாரம் ஆசிரியர்கள் 27,906 பேர், இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தோர் 2,800 பேர், சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர்கள் 250 பேர் எனவும் ஏற்றுகொள்ளப்பட்டது. இதற்கமையவே தற்போதும் சம்பளத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேவேளையில் 1995, பெப்ரவரி கணிப்பீட்டின் பிரகாரம், இம் மாகாணத்தின் அதிபர்கள் உட்பட ஆசிரியர்களின் ஆளணி விபரங்களை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. தமிழ் மொழிப் பாடசாலைகளின் ஆளணித் தேவை, 25,090 ஆகும். ஆனால், தற்போது சேவையிலுள்ள 18,756 பேர் மட்டுமே. ஆகவே, தமிழ்மொழிமூலம் பாடசாலைகளுக்கான ஆசிரியர்கள், அதிபர்கள் பற்றாக்குறை 6,334 ஆகும். அதேவேளை, சிங்கள மொழிமூலப் பாடசாலைகளில் 4,349 பேருக்கான ஆளணித் தேவைக்கு, 4,909 ஆளணியினர் சேவையில் உள்ளனர். எனவே, அங்கு 560 பேர் மேலதிகமாக உள்ளனர். இக்கணிப்பீடு, கல்வி, உயர்கல்வி அமைச்சின் சுற்றுநிரூபத்திற்கேற்பவே தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது, நாடு முழுவதிலுமுள்ள சகல மாகாணங்களுக்குமான ஆசிரியர் ஆளணித் தேவையைக் கணிப்பிட்டு, அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறும் நடவடிக்கையில் மத்திய கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது. இது சம்பந்தமாக மாகாணக் கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய கலந்துரையாடல்களின் போது, வடக்கு - கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணத்திலுள்ள ஆசிரியர் ஆளணித்தொகை தொடர்பாக, மாகாணக் கல்விப் பணிப்பாளரும் மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகளும் இங்கு நான் குறிப்பிடும் எண்ணிக்கையை இனங்கண்டுள்ளனர். அதாவது வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்கள் 25,449 பேர் எனவும், அதிபர்கள் 3,391 பேர் எனவும், மொத்தமாக ஆசிரியர்களும் அதிபர்களுமாக 28,840 பேர் எனவும் இனங்காணப்பட்டது. இதேவேளையில் தேசிய பாடசாலைகளுக்குத் தேவையான அதிபர்கள், ஆசிரியர்கள் 1,657 பேர் எனவும், வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள ஆசிரிய கலாசாலைக்கான ஆளணித் தேவை 31,565 எனவும் இனங்காணப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. இங்கு நான் குறிப்பிட்ட தேசியப் பாடசாலைகளும் ஆசிரிய கலாசாலைகளும் மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நிலைமை இவ்வாறிருக்க, சம்பள ஊழியர் கோப்புக் குழுவின் தலைவர் அவர்களால் மத்திய கல்வி அமைச்சின் செயலாளருக்கு 23.07.1996 திகதியிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்ட கடித மூலம், ஒவ்வொரு மாகாணத்திற்கும் தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆசிரிய ஆளணி விபரம் தெரிவிக்கப்பட்டு, அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுமாறு கோரப்பட்டுள்ளது. அக்கடிதத்திலேயே வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குரிய நிரந்தர ஆளணி 28,252 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலே ஆளணிக்கு மேலதிகமாக 765 எனக் குறிப்பிடப்பட்டுமிருக்கிறது. இந்த மேலதிக 765 என்பது, சிங்கள மொழிமூல ஆசிரியர்களைக் குறிப்பிடுவதாகக் கொண்டாலும், 28,252 எனக் குறிப்பிட்டுள்ள நிரந்தர ஆளணி என்பது, தனியாக மாகாண ஆசிரியர்கள், அதிபர்களை மாத்திரமா அல்லது ஏனைய தரத்திலுள்ள ஆளணியினரையும் உள்ளடக்கியதா என்று தெளிவாகக் குறிப்பிடவில்லை. எனினும் மத்திய கல்வி அமைச்சின் அதிகாரி களிடமிருந்து வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் பெற்றுக் கொண்ட தகவல்களின்படி, இவ்வெண்ணிக்கையானது தேசியப் பாடசாலைகள், ஆசிரியர் கலாசாலைகள் என்பனவற்றின் ஆளணிகளையும் உள்ளடக்கியதுதான் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வெண்ணிக்கை அங்கீகரிக்கப்படுமாயின், எமது மாகாணப் பாடசாலைகளுக்குரிய ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆளணித் தேவையான 28,840 என்ற எண்ணிக்கை 25,527 ஆகக் குறைக்கப்படும் நிலைமை யேற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறையை மிக மோசமாக எதிர் நோக்கியுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தில், மேற்படி சம்பள ஊழியர் கோப்புக் குழுவினதும் மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகளினதும் தவறான கணிப்பீட்டினால் மாணவர்களின் கல்வி மேலும் பாதிக்கப் படக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது. இது திட்டமிட்ட செயலா? அல்லது தவறா? என நாம் ஆராயவில்லை. ஆனால், இதனால் பாதிக் கப்படப்போவது வடக்கு - கிழக்கில் தமிழ் மொழிமூலம் பயிலும் எமது மாணவர்களே என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். எனவே, கௌவர அமைச்சர் அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்குரிய சரியான ஆளணித் தேவையை இனங்கண்டு, அதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திற்கமைய, பட்டதாரி களையும், பல்கலைக்கழக டிப்ளோமா தாரிகளையும் ஆசிரியர்களாக நியமிக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக் கின்றது. இதன் பிரகாரம் 1994ஆம் ஆண்டில் 81 ஆசிரிய நிய மனங்கள் வழங்கப்பட்டன. பரவலாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், விஞ்ஞான, வர்த்தகப் பட்டதாரிகளையும், சித்திரம், சங்கீதம், நடனம் போன்ற அழகியற் கல்வித்துறை டிப்ளோமாதாரிகளையும் ஆசிரியர்களாக நியமித்து, அப்பாடத்துறைகளில் வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பு வதற்கான நடவடிக்கைகள் வடக்கு - கிழக்கு மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் புதிய நியமனங்கள் எதுவும் வழங்கப்படலாகாதென அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே பரவலாக் கப்பட்ட அதிகாரங்களுக்கு முரணாக ஏன் இம்முடிவு மேற்கொள்ளப் பட்டதென்பதை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் அதேவேளையில், பரவலாக்கப்பட்டுள்ள அதி காரத்தின் கீழ் வழங்கப்படும் நியமனங்களென்பதாலும் அவை அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆளணித் தொகைக்கு மேலதிகமாக இல்லாத தாலும் சம்பளக் கொடுப்பனவுக்கான நிதியொதுக்கீடு மேற்கொள்ளப் பட்டிருப்பதனாலும் வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை நிலைமையைக் கருத்திற்கொண்டு, இந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்களை வழங்கும் அனுமதியைக் கௌரவ அமைச்சரவர்கள் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

கல்வி நிருவாக வியூகத்தை மீளமைத்தல் தொடர்பான சில விடயங் களில் உள்ள குறைபாடுகள் பற்றி இங்கு நான் குறிப்பிட விரும்பு கின்றேன். ஏனைய மாகாணங்களில் இடம்பெறுவதைப் போன்று, வடக்கு - கிழக்கு மாகாணத்தின் கல்வி நிருவாக வியூகத்தை மீளமைப்பதற்கான முன்மொழிவுகள் கௌரவ கல்வி, உயர்கல்வி அமைச்சரவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இங்கு நான் குறிப்பிடும் வரைபுகள் அமைச்சரவைத் தீர்மான இலக்கம் 02/95 இற்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. அதன்படி வடக்கு - கிழக்கில் பின்வரும் மட்டங்களில் நிருவாக அலகுகள் அமையவுள்ளன. அவையாவன, மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவல கங்கள் - 07, வலயக்கல்வி அலுவலகங்கள் - 20, கோட்டக்கல்வி அலுவலகங்கள் - 71 என்பவையாகும். ஆயினும், இவ்வமைப்பினை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஆளணிக்குரிய அங்கீகாரம் இன்ன மும் வழங்கப்படவில்லை. தற்போது சேவையிலுள்ள அலுவலகங் களோடு, இவ்வமைப்பை ஏற்படுத்துவதற்கான ஆளணிக்குரிய அங்கீகாரம் இன்னமும் வழங்கப்படவில்லை. தற்போது சேவை யிலுள்ள அலுவலகங்களோடு, இவ்வமைப்பை ஏற்படுத்துவதற் கான குறைந்தபட்ச மேலதிக ஆளணித் தேவையை இங்கு நான் குறிப்பிடுகின்றேன். கல்வி நிருவாக சேவை அலுவலகர்கள் 242 பேரும், கணக்காளர்கள் 25 பேரும், பொறியியலாளர்கள் 19 பேரும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 105 பேரும், எழுதுவினைஞர்கள் 356 பேரும், தட்டெழுத்து / சுருக்கெழுத்தாளர்கள் 117 பேரும், ஏனைய ஊழியர்கள் 156 பேரும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கல்வி நிருவாக வியூகத்தை மீளமைப்பதற்காக தேவைப்படுகின்றனர். தேவையான ஆளணியின்றிப் புதிய நிர்வாக அமைப்பை ஏற்படுத் துவது அர்த்தமற்றதாகும். ஏற்கனவே; 1993 ஆம் ஆண்டில் புதிய கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டபோது, தேவை யான ஆளணி வழங்கப்படாததால் பெரும் சிரமமான நிர்வாகப் பிரச்சினைகள் அங்கு காணப்படுகின்றன. எனவே, இம் மீளமைப்பும் தோல்வியில் முடிந்து விடாமல் இருப்பதற்கு மிக முக்கிய தேவையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளணிப்பிரச்சினை இருப்பதனால், கௌரவ அமைச்சரவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு, ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு- கிழக்கில் பின்தங்கிய கல்வியை மேம்படுத்துவதற்காக மூன்று வருட செயற்றிட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இம் முயற்சியை நாம் மனங்கொண்டு இச்சபையில் பாராட்டும் அதேவேளை, இச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய கல்வியமைச்சு தனது ஆக்கபூர்வமான சகல உதவிகளையும் வழங்க வேண்டுமென கௌரவ அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

உலக வங்கியின் 'ஐடீஏ' திட்டத்தின் கீழ் கல்வி வலயங்கள், கல்விக் கோட்டங்களின் அலுவலகங்கள் என்பவற்றுக்கென கொம்பியூட்டர்களை வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றது. வடக்கு மாகாணத்தில் கணனிகள் இன்னும் விநியோகிக்கப்படவில்லை என்பதைக் கௌரவ அமைச்சர் அவர்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன். அதேவேளையில், 'ஐடீஏ' திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு பாடசாலைக்கென்று விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 38 பாடசாலைகள் மட்டும்தான் இவ்வுபகரணங்கள் வழங்கப்பட தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன. குறைந்தது 1ஏபி தரத்திலுள்ள பாடசாலைக்காவது இந்த உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். இதனடிப்படையில் வடக்கு- கிழக்கில் 119 பாடசாலைகள் 1ஏபி தரத்திலுள்ளன. இவைகளுக்கு இந்த விளையாட்டு உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கு கௌரவ அமைச்சர் அவர்கள் ஆவண செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

1994ஆம் ஆண்டு ஆசிரிய ஆலோசகர்களை நியமிப்பதற்கான பரீட்சை ஒன்று பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்பட்டது. அதேபோல் இலங்கை கல்விச் சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை ஒன்றும் நடாத்தப்பட்டது. இப் பரீட்சை முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை, ஆசிரிய ஆலோசகர்களை நியமிப்பது மாகாண கல்வி அமைச்சிற்குட்பட்ட விடயமாகும். வடக்கு - கிழக்கிற்கு 497 ஆசிரிய ஆலோசகர்கள் தற்போது தேவையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளனர். அவர்களை நியமிப்பதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதில் மத்திய கல்வி அமைச்சின் தலையீடு இருக்காமல் பார்த்துக்கொள்ளும்படி கௌரவ அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

தேசியக் கல்வி நிறுவனம்தான் ஆரம்ப நிலைக் கல்வி, இடைநிலைக் கல்வி என்பவற்றிற்கு வேண்டிய திட்டமிடல், கற்கைநெறி தயாரிப்பு, பாடவிதானங்களை அமைத்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றது. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகள் மூலமாக இவைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால், இரு மொழிகளிலும் வேலை செய்வதற்கு தேசியக் கல்வி நிறுவனத்தில் சமமான ஊழியர்களே தேவையாக இருக்க வேண்டும். ஆனால், நடைமுறையில் தற்போது 15 வீதமான தமிழ் பேசும் ஊழியர்களே இருக்கின்றனர். தமிழ் மொழி மூலமான பாடவிதானங்கள் விடயத்தில், சில பாடவிதானங்களை மொழி பெயர்ப்பினூடாக தமிழ் பேசும் மாணவர்கள் பயில வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். உதாரணமாக, சித்திரப்பாடத்திற்கான பாடவிதானம் தமிழ் மொழியில் தயாரிக்கப்படாததால், சிங்கள மக்களின் கலாசாரத்துடன் தொடர்பான சிங்கள மொழி மூலமான பாடவிதானத்தையே தமிழ் பேசும் மாணவர்கள் கற்க வேண்டி யிருக்கிறது. இதனால் தமிழ் பேசும் மக்களின் பண்பாடு, கலாசாரம் என்பன மாணவர்களுக்கு உணர்தப்படுவதில் சிக்கல் ஏற்படுகிறது. இதுபோன்ற குறைபாடுகளை நீக்க கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து உயர்கல்வி தொடர்பான சில விடயங்களைச் சுருக்கமாக இங்கு முன்வைக்க விரும்புகின்றேன். தலைநகரிலுள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை இல்லையென்ற குறை நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இதேபோல கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் கூட தமிழ்த்துறை இல்லாதது மிகவும் வேதனைப் படத்தக்கது. தென்கிழக்காசியாவிலேயே கிழக்கு மாகாணம் கிராமியப் பண்பாட்டிற்கு பெயர்போன இடமாகவிருக்கின்றது. ஆகவே, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைக்கான பீடம் ஒன்றை ஏற்படுத்துவது. மிகவும் முக்கியமானதாகவிருக்கின்றது. இன்று பல்கலைக்கழகங்களில் சிங்கள மொழியில் உள்ளது போல, தமிழ் மொழி மூலத்தில் பல துறைகளுக்குமான கற்கைநெறிகள் இல்லை. இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரபட்சம் நீக்கப்பட்டு, தமிழ் மொழியில் கற்கை நெறிகள் இல்லாத துறைகள், தமிழில் ஆரம்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். உதாரணமாக வெகுஜனத் தொடர்புக் கற்கைநெறியை இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன். இதுபோலவே திறந்த பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மொழிகள் உள்ளது போலத் தமிழ் மொழியிலும் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

விபுலானந்த இசை நடனக் கல்லூரி பல்கலைக்கழகம் ஒன்றுடன் இணைக்கப்படாததால், இக்கல்லூரியில் இருந்து வெளியேறிய இரண்டு காலப் பகுதிக்கான மாணவர்கள் 58 பேர், தொழில் வாய்ப்பின்றி உள்ளனர். ஆகவே இந்த விபுலானந்த இசை நடனக் கல்லூரியை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க நடவடிக்கை கள் எடுக்குமாறு கௌரவ அமைச்சர் அவர்களிடன் கேட்டுக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு ஏறத்தாழ 40 சதவீத மாணவர் களே இன்று சமூகமளித்திருக்கின்றார்கள். அதிகமான பல்கலைக் கழக மாணவர்கள் அங்கு திரும்பிச் செல்வதற்கான பிரதான காரணம் அவர்களுக்குப் பாதுகாப்புத் தொடர்பான உத்தரவாதம் இல்லை யென்பதாகும். இப்பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலான மாணவிகள் பல்கலைக்கழகம் திரும்புவதற்கு அஞ்சுகின்றனர். விஞ்ஞான ஆய்வுகூடங்களைப் பயன்படுத்த முடியாத நிலையில் விஞ்ஞான மருத்துவத்துறை மாணவர்கள் அங்கு பாதிப்படைகின்றனர். பெரும்பாலான பேராசிரியர்கள் அப்பல்கலைக்கழகத்திற்குத் திரும்ப வில்லை. யாழ். பல்கலைக்கழகத்தின் இடைக்கால புனரமைப்புக்காக அப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் 50 மில்லியன் ரூபாவை உடனடி உதவியகாக் கோரியிருந்தது. ஆனால், பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு 15 மில்லியன் ரூபாவையே ஒதுக்கியுள்ளது. இது போதுமானதாகவில்லை. ஆகவே, மிகுதியான 35 மில்லியன் ரூபாவையும் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் முழுமையாக இயங்க முடியாத நிலையிலுள்ளது. மருத்துவ பீடத்திற்கு அருகாமையிலேயே படையினரின் பாதுகாப்பு அரண்கள் இருப்பதால் மாணவர்கள் அங்கு செல்ல அஞ்சுகின்றனர். யாழ்ப்பாண அரசினர் மருத்துவமனையைப் பயன்படுத்த முடியாத நிலை இருப்பதனால், யாழ்ப்பாண மருத்துவபீட மாணவர்கள் தமது இறுதியாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்முறைப்பயிற்சியை, அங்கு மேற்கொள்ள முடியாமலிருக்கின்றது. அந்த மருத்துவமனை கிராமிய ஆஸ்பத்திரியின் தரத்திலேயே இன்று இருக்கின்றது. ஆகவே, அம்மாணவர்கள் கொழும்பிலேயே தமது செயல்முறைப் பயிற்சியை நடத்துவதற்காக எடுக்கப்பட்டிருந்த தீர்மானங்கள், சிலரின் பாரபட்சமான நடவடிக்கைகளினால் செயல்படுத்தப்பட முடியாமல் தடைப்பட்டுள்ளன. ஆகவே, இம் மாணவர்கள் தமது செயல்முறைப் பயிற்சியைக் கொழும்பிலேயே மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை கௌரவ அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று வேண்டி விடைபெறுகின்றேன். நன்றி

04 டிசம்பர் 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் சிவில் அதிகாரிகளாக, இராணுவ அதிகாரிகளை நியமிக்க எடுக்கும் முயற்சி, சிவில் நிர்வாகத்தைச் சிதைப்பதாக அமைந்துவிடும்

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

யுத்தத்தின் கொடூரம் இன்று தமிழ் மக்களைத் தீவிரமாக நெருக்கி வருகின்றது. மக்கள் வீடுகளை விட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஊர்களைவிட்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள், அகதிகளாக, அபலை களாக அழிந்து கொண்டிருக்கிறார்கள். கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுக்கள், ஆட்லறிப் பீரங்கித் தாக்குதல்கள் என்பவை மக்களை மரணப்பிடிக்குள் தள்ளுகின்றன. பசி, உணவுத் தட்டுப்பாடு மருத்துவ வசதியின்மை, ஒதுங்குவதற்கு இல்லிடம் இன்மை, சுகாதாரச் சீர்கேடுகள், நோய்களின் கோரம் - இவைதான் இன்றைய தமிழ் மண்ணின் - மக்களின் வாழ்வு! இது ஜதார்த்தமாக இருக்க, தெற்கில் தமிழ் மக்களுக்கு எதிரான குரல்கள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

1994 ஆகஸ்டில் எழுப்பப்பட்ட சமாதானக் குரல்கள், இன்று இனவாதக் குரல்களாகவும், யுத்தத்தை தீவிரமாக ஆதரிக்கும் குரல்களாகவும் மாறிய வண்ணம் இருக்கின்றன. திட்டமிட்டு அரசியல் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சிங்கள ஆணைக்குழுவின் முன், சிங்கள இனம் அழிக்கப்படுவதாக வாக்கு மூலங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் அழிக்கப்பட்டு வரும் இனமாக சிங்கள இனத்தைக் காட்டி, தமிழ் மக்களை அழிப்பதை இன்று சிலர் நியாயப்படுத்துகின்றனர். உண்மை என்ன? இந்த நாட்டில் நீண்ட காலமாகத் தமிழர்களையும் தமிழ் மண்ணையும் அழிப்பதற்கே மாறி மாறி அரசுக்கு வந்த அரசுகள் கங்கணங்கட்டி செயல்ப்பட்டு வந்திருப்பதை நாம் அறிவோம், இந்த உலகம் அறியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே,

தமிழ் மக்களாகிய நாம் இன்று யுத்தத்தினால் அழிந்து வரும் இனமாக உள்ளோம். வாழிடங்கள் சிதைக்கப்பட்டு, குடும்பங்கள் பிரிக்கப்பட்டு, மண்ணைப் பிரிந்து அகதி முகாம்களிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், கடந்த இரண்டு தசாப்த காலமாக அழிக்கப்பட்டு வருகின்றனர். வன்னியில் இன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கும் யுத்தத் தின் மூலம் நாற்பதாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1,60,000 பேர், அகதிகளாக்கப்பட்டுள்ளனர். யுத்தத்தின் காரணமாக யாழ்ப் பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து ஏற்கனவே அகதிகளாக வந்து அந்தரித்து நின்றவர்களும் கூட இதில் அடங்குகின்றனர். யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து மரணத்தைச் சுமந்து மடிந்து போனவர்களின் தொகை இன்னமும் சரியாகத் தெரியவில்லை. அந்த நாற்பதாயிரம் குடும்பங்களும் உணவுப் பொருள்கள், மருத்துவ வசதிகள் இன்றி அபாயகரமான நிலையில் தவித்து நிற்கின்றனர். இன்று இந்த நாட்டில் தமிழராய் பிறப்பதே கொடிதிலும் கொடிதென்று ஆகிவிட்டது.

"முன்னேறிப் பாய்தல்" "சூரியக்கதிர்-I" "சூரியக்கதிர்-II" என்ற இராணுவ நடவடிக்கைகளின் மூலம் கைப்பற்றப்பட்ட யாழ் மண்ணில் அரசு பிரச்சாரப்படுத்திய சமாதான நகரத்தைக் காணமுடியவில்லை. இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக காணாமற்போனோரின் பட்டியலுக்குப் பதில் அளிப்பார் யாருமில்லை. யாழ்ப்பாணத்தில் காணாமற்போன சுமார் எழுநூற்றுக்கும் மேற்பட்டவர்களின் குடும்பத்தவரினதும், சுற்றத்தவரினதும், கண்ணீரும் சோகமும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாதவை. யாழ்ப்பாண மக்களின் வாழ்வைச் சிதைத்துவிட்ட யுத்தம், யாழ் மண்ணின் சூழலையும், இயற்கையையும், சிதைத்து விட்டது. சிதைத்துக்கொண்டுமிருக்கிறது. மரங்கள் அழிக்கப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றன. வடக்கின் வளமிக்க மண், இராணுவத்தின் பாதுகாப்பு அரண்களின் அமைப்பிற்கென அகழ்ந்தெடுக்கப்படுகின்றது. இச் சூழல் மாற்றத்தி னால் மழையின்மை, குடிநீர்ப் பஞ்சம் போன்றவற்றை அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அரசியல் தீர்வுத் திட்டம், பாராளுமன்றத் தெரிவுக்குழு என்பவற்றில் தமிழ் மக்களை நம்பிக்கை கொள்ள வைக்கக்கூடிய சூழலை எப்படி ஏற்படுத்த முடியுமென இச்சபையில் நான் கேட்க விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் மூலம் மக்களின் மனங்களை வென்றுவிட முடியாது. ஆகவே, அரசு யுத்தத்தினால் காட்டும் தீவிரத்தை விடுத்து, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வை முன்வைப்பதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். இதுவே எமது எதிர்கால சந்ததியினர்க்கு நாம் செய்யும் கைம்மாறாகும்.

இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அரசியல் கட்சிகள், ஜனநாயக நிறுவனங்கள் அனைத்தும் ஒரு பொதுவான இணக்கப்பாட்டிற்கு உடனடியாக வருதல் வேண்டும். கடந்த காலங்களைப் போல் இந்த நாட்டிலுள்ள இரண்டு பிரதான கட்சிகளும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் கண்ணாம்பூச்சி ஆடிக்கொண்டிருக்கின்றன. அன்றைய பண்டா - செல்வா ஒப்பந்தம் தொடங்கி இலங்கை இந்திய ஒப்பந்தம் வரை இதுதான் நடந்தது. எதிர்காலத்திலும் இதற்கு இடமளிக்கக்கூடாது. தமிழ் மக்களின் விடயத்தில் புதிய அரசின் கொள்கை கடந்த கால அரசின் கொள்கைக்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல என்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது. ஆளும் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே சிங்கள ஆணைக்குழு முன் இனவாதம் பேசியிருக்கின்றார். தெற்கில் இனவாதக் குரல்கள் வலுப்பெறுவதற்கு இந்த சிங்கள ஆணைக்குழு முக்கிய பங்காற்றி வருகின்றது. ஆகவே, நாட்டின் நன்மை கருதி அரசு உடனடியாக இந்த ஆணைக்குழுவைத் தடை செய்ய வேண்டும் என இச்சபையில் கோரிக்கை விடுக்க விரும்புகின்றேன்.

தமிழ் மக்களின் பாரம்பரிய மண்ணைக் கபளீகரம் செய்து குற்றுயிராய் மாற்றிய பின் எஞ்சிய மண்ணையும் ஆக்கிரமிப்பதிலேயே அரசுகள் கவனம் செலுத்துகின்றன. ஏற்கனவே அம்பாறை மாவட்டத்தில் 30% சதவீதமான நிலங்கள் கபளீகரம் செய்யப்பட்டு விட்டன. திருகோணமலையிலும் இதே நிலைமைதான் மணலாறு எனப்படும் தமிழ் மண்ணை வெலி ஓயாவாக மாற்றிவிட்டார்கள். இன்று வன்னியிலிருந்து தொடங்கப்பட்டுள்ள யுத்தத்தில் பல பக்க படை நகர்வாக வியூகம் அமைக்கப்பட்டுள்ளது. மணலாற்றில் இருந்து நெடுங்கேணி நோக்கிச் சென்றிருக்கும் படைகள், தமிழ் மண்ணின் பெரும் பகுதியை யுத்த சூனியப் பிரதேசமாக இன்று கைப்பற்றி வைத்திருப்பதன் மூலம், அன்று யூ.என்.பி அரசினால் நிர்வாக நோக்கு எனச் சொல்லப்பட்ட அனுராதபுர மாவட்டத்துடன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இணைக்கப்பட்ட மணலாற்றுப் பிரதேசத்தை, விரிந்த ஆக்கிரமிப்புப் பிரதேசமாக விஸ்தரிப்பதற்கு, அரசு திட்டமிட்டிருப்பதாக தமிழ் மக்கள் அஞ்சுகின்றனர். இவ் அச்சத்துக்கான காரணங்கள் நிறைவேறியுள்ளன. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியவுடன் "யாப்பா பட்டுனே" என யாழ்ப்பாணத்திற்கு பெயர் சூட்டியிருந்தார்கள். வவுனியாவில் பறையனாலயங்குளம் என்ற பழம் பெரும் தமிழ்க் கிராமத்துக்கு "சப்புமல்புர" எனப் பெயர் சூட்டியிருக்கின்றார்கள். இன்று திருகோணமலையில் மட்டிக்களி என்ற இடத்திலுள்ள தமிழ் மக்களுக்கும் இந்து ஸ்தாபனங்களுக்கும் சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்து, சிங்கள மீன்பிடிக்கிராமம் அமைக்க முயற்சி செய்கின்றார்கள். ஆகவே, அன்றைய அரசு திட்டமிட்டுச் செய்த, அனுராதபுர மாவட்டத்தோடு மணலாற்றுப் பிரதேசத்தின் நிர்வாக இணைப்பை, இன்று இந்த அரசும் தொடர்வதோடு, ஆக்கிரமிப்பு விஸ்தரிப்பு வாதத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்தவும் பார்க்கின்றது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

'வரலாற்றுக் கண்களோடு இன்றைய யுத்தத்தை ஒப்பிட்டுப் பார்த்து, பழைய கல்லறைகளில் இருந்து சாப்புமல் குமாரர்களை வெளியே எடுத்து வடக்கின் யுத்த முனைக்கு அனுப்ப முயற்சிக்காதீர்கள்' என்று நாம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். யாழ்ப்பாணத்தில் சிவில் அதிகாரிகளாக, இராணுவ அதிகாரிகளாக நியமிக்க எடுக்கப் படும் முயற்சி, சிவில் நிர்வாகத்தைச் சிதைப்பதாக அமைந்து விடும், ஜனநாயகத்தை இராணுவ பிடிக்குள் சிக்க அனுமதிப்பதாக அமைந்துவிடும்

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

யாழ். தீபகற்பத்தில் அல்லைப்பிட்டி, துறையூர், தம்பாட்டி போன்ற பகுதிகளில் வாழும் மக்கள், இரவு நேரங்களில் வேலணை இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள வெட்டவெளி நிலங்களில் வந்து தங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வேலணையில் உள்ள இராணுவ முகாம்களைப் பாதுகாப்பதற்காகவே, அந்த மக்களை இந்தப் பகுதி இராணுவத்தினர் கேடயமாகப் பயன்படுத்துகின்றனர். இப் பணயக்கைதி நிலையிலுள்ள அப்பகுதி மக்களை இதிலிருந்து விடுவிக்க வேண்டுமென நான் இச்சபையில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட பிரதேச மக்களில் பெருமளவினர் மீனவர்களாக இருப்பதால், "இரவிலும் இராணுவ முகாமைச் சுற்றி இருந்தால்தான் மீன்பிடிக்க அனுமதிப்போம்" எனப் பேரம் பேசி முகாம்களைச் சுற்றி அவர்கள் கேடயமாக்கப்பட்டுள்ளனர். ஆனால், மீன்பிடிக்க அவர்கள் அனுமதிக்கப்படுவதுமில்லை. குருநகர், பாசையூர், போன்ற பகுதிகளில் அதிகமாக வாழ்வோர் மீனவர்களே, இவர்கள் ஒரு குறிப்பிட்ட சிறு எல்லைக்குள்தான் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகின்றார்கள். இதுவும் குறிப்பிட்ட சில மணிநேர அவகாசத்துடனே அனுமதிக்கப்படுகிறது. ஆகவே அந்நேரத்தை அதிகரித்து, யாழ்ப்பாணத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான பாதுகாப்புக் கட்டுப்பாட்டை தளர்த்துமாறு கௌரவ பாதுகாப்பு பிரதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசம் மீன்பிடியையும் விவசாயத்தையும் நம்பிவாழும் மக்களைக் கொண்ட பிரதேசமாகும். இந்தப் பிரதேசத்தில் மேற்படி தொழில்களை மேற்கொள்வதற்குப் பாதுகாப்பு இறுக்கங்கள் பெரும் தடையாக இருக்கின்றன. மாதம் ஒன்றுக்கு பத்து லீற்றர் மண்ணெண்ணய் வழங்குவதற்கு படையினரால் முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தும், இன்று மண்ணெண்ணையை எடுத்துச்செல்ல அனுமதி முற்றாக மறுக்கப்படுகிறது. விவசாயத்துக் குத் தேவையான செயற்கை உரங்களைக் கொண்டுசெல்ல முடியாதுள் ளது. சில பகுதிகளுக்கு உணவுப் பொருட்களைக் கூட கொண்டு செல்வ தற்கு இறுக்கமான கட்டுப்பாடுகள் உள்ளன. இதனால் இப்பகுதி மக் கள் மிகுந்த சிரமத்துடன் வாழ்கின்றனர். மூதூர்- கூனித்தீவு பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது, ஆகவே, இப்பகுதி மக்களின் அவலங்களைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள 'சென்றல் காம்ப்' எனும் இடத்தைச் சேர்ந்த கோணேஸ்வரி என்ற 35 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாய், பொலிஸாரினால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். வைத்திய பரிசோதனையில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டமை நிரூபிக்கப்படாமல் செய்வதற் காக அப்பெண்ணின் பெண் உறுப்பில் கிறனெட் வெடிக்க வைக்கப் பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார். இது நடந்து பத்து தினங்கள் ஆகியும் இன்றுவரை உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவில்லை. கிரிஷாந்தி, ராஜினி வரிசையில் இன்று கோணேஸ்வரி எனக் கொடுமைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி.

05 ஜூன் 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு – கிழக்கு கல்வியில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கௌரவ தலைவர் அவர்களே,

எமது பகுதியில் இந்த வலயங்கள் ஆரம்பிக்கப்படுவது தாமதமாக்கப் பட்டுள்ளது. ஆகவே, இவைகளை நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, கல்வித்திணைக்களம் என்பவற்றில் ஆளணியினர் பிரச்சினை சரியாக்கப்பட வேண்டும். இந்தமுறை, சரியாக நிர்ணயிக்கப்படாததால், எமது கல்வி மிகவும் மோசமாகப் பாதிப்படைகிறது. கல்விக் கட்டமைப்பு சீரழிந்துள்ளது. நிர்வாகம் பாதிப்படைகிறது. நிதிக்குழு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினருக்கே நிதி ஒதுக்கீடு செய்கின்றது. ஆகவே, ஆளணி விபரங்கள் மீளாய்வு செய்யப்பட்டு, மேலதிக ஆளணியினர் அங்கீகரிக்கப்பட வேண்டும். குறிப்பாக கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களுக்கும் அழகியற் கல்விப் பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம் போன்ற பாடங் களுக்குமான ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் அங்கு நிலவுகின் றது. விரைவான நடவடிக்கையின் மூலம் இந்த நிலைமையைப் போக்கு வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எமக்கு உறுதியளித்துள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நாம் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறோம். போட்டிப்பரீட்சைகளில் மூலமான ஆசிரியர் தேர்வுகளில் நான் குறிப்பிட்ட சில பாடங்களுக்கான சில ஆசிரியர் களைத் தெரிவு செய்ய முடியாத நிலைமை இன்று காணப்படுகின்றது. எனவே, பட்டதாரி, டிப்ளோமா, ஆசிரியர்களை நியமிப்பதற்கு மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை நீங்கள் வழங்க முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் உங்களிடம் கோரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுக்க விரும்புகின்றேன்.

எமது பிரதேசங்களிலுள்ள பல பாடசாலைகளின் கட்டடங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. இவை சீர்செய்யப்பட வேண்டும். பல நிதி நிறுவனங்கள் அவற்றை சீர்செய்ய முன்வந்திருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தளபாட, கட்டட, ஆய்வுகூட, நூலக, வசதிகளை எமது பாடசாலைகளுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். இன்று பல பாடசாலைகள் இராணுவ முகாம்களாக உள்ளன. அவற்றிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றி அப்பாடசாலைகள் இயங்க அனுமதிக்க வேண்டும். பல பாடசாலைப் பகுதிகள் பாதுகாப்பு வலயங்களுக்குள் உட்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, இப் பாதுகாப்பு வலயங்களை நீக்கி, அப்பாடசாலைகள் இயங்க அனுமதிக்க வேண்டும். பல பாடசாலை வளவுகளுக்குள் கண்ணிவெடிகள், மிதிவெடிகள், என்பன காணப்படுகின்றன. அவை அகற்றப்பட்டு, மாணவர், ஆசிரியரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இன்று பல பாடசாலைகள் தற்காலிக கொட்டில்களிலேயே இயங்கி வருகின்றன. மழை காரணமாக பல தற்காலிக கொட்டில் பாடசாலைகள் இன்று ஒழுகுகின்றன. வன்னியில் எமது மாணவர்களின் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. இடப்பெயர்வு பாடசாலைகளே இன்று அங்கு அதிகம். வடக்கு - கிழக்கில் தொடரும் யுத்தத்தினால் பல குடும்பங்கள் தமது உழைப்பாளிகளை இழந்துள்ளன. பல குடும்பங்கள் வேலையின்மை, இடப்பெயர்வு போன்றவற்றால் வறுமையில் வாடுகின்றன. இவர்களுக்கு போதிய நிவாரணம் வழங்குவதில்லை. இந்நிலையில் அப்பகுதி மாணவர்கள் போஷாக்கற்றவர்களாகவும், நோயெதிர்ப்பு சக்தி அற்றவர்களாகவும் உள்ளனர். இதனால் மாணவர்களின் கல்வி எதிர்காலம் பாதிப்புக்குள்ளாகின்றது. எனவே, எமது மாணவர்களுக்குப் போஷாக்கு வழங்கும் திட்டமொன்றை அரசு வகுத்துச் செயற்படுத்த வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

கௌரவ தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே, வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மொழிமூல ஆசிரியர்களில் கிட்டத்தட்ட 75 சதவீதத்துக்கு மேற்பட்டோர் பயிற்சி பெறாத ஆசிரியர்களாகவே உள்ளனர். இதனால், அப்பகுதி மாணவர்களின் கல்வி நிலைமை மிகவும் மோசமாகப் பாதிப்படைகின்றது. எனவே, விசேட திட்டமொன்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் எமது ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இச்சந்தர்ப்பத்திலே கோரிக்கை விடுக்க விரும்புகின்றேன். தேசியக் கல்வி நிறுவகம் தமிழ் மொழியிலே ஆசிரியர்களுக்கான கல்வி முதுமானிக் கற்கை நெறியை வடக்கு- கிழக்கு மாவட்டங்களில் தமிழிலும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது சிங்களமொழி மூலம் மட்டுமே இக்கற்கைநெறி தென் பகுதிகளில் நடாத்தப்படுகின்றது.

பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாடு தீர்த்துவைக்கப் படல் வேண்டும். 1994இல் ஆசிரியர் சேவை அமுல்செய்யப்பட்டு, ஆசிரியர்கள் உரிய தரங்களில் உள்வாங்கப்பட்டு நியமிக்கப்பட்டனர். அதன்பின், அவர்கள் தரமுயர்த்துவதற்குப் பல நிபந்தனைகள் கூறப்பட்டன. அத்தகைமைகளை அவர்கள் அடைவதற்குரிய மீள் பயிற்சிச் செயற்றிட்டம் இதுவரை ஒழுங்கமைக்கப்படவில்லை. அதனால் பல ஆசிரியர்கள் அதே தரங்களிலேயே கடந்த மூன்று வருடங்களாக இருக்கின்றனர். அவர்களைத் தரமுயர்த்துவதற்கான ஒழுங்குகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஆசிரியர் சேவை நடைமுறை உருவாக்கப்பட்டபோது, ஆசிரியர்களை உரிய தரங்களில் அமர்த்துவதற்கே அத்திட்டம் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படு கிறது. எனினும் B.C பெரேராவின் சம்பளத் திட்டப்படி, இவர்கள் பழையபடி தாழ் தரத்துக்கே கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். எனவே இதிலுள்ள முரண்பாடுகளை நீக்கி, இவர்களுக்குரிய சம்பளம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி கௌரவ அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். 01.01.1995 இலிருந்து அதிபர் களின் சம்பள நிலுவை வழங்கப்பட வேண்டும். இதற்கென எமது மாகாணத்திற்கு 63 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. இதனை வழங்க கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிபர் சேவையில் உள்வாங்கப்பட்டபோது, சேவை மூப்பமுள்ள அதிபர்களை உரிய கவனத்தில் எடுக்கவில்லை என்ற விமர்சனம் உள்ளது. எனவே இதனைக் கருத்திலெடுக்க வேண்டும். ஆசிரியர்கள், அதிபர்களின் இடமாற்றங்கள் ஓர் ஒழுங்குமுறையின் அடிப்படையில், யாரும் பாதிக்கப்படாத, பழிவாங்கப்படாத விதத்தில், அரசியல் வாதிகள் உட்பட எவரது தலையீடுகளுமின்றிச் சுதந்திரமாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். ஆட்சிகள் மாறும்போது ஆசிரியர் சமூகமே எப்போதும் அரசியல் பழிவாங்கல்களுக்கு அதிகளவில் ஆளாகின்றது. அரசியல் பழிவாங்கலுக்கு நிவாரணம் என்ற பெயரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

300 பேருக்கு கல்வி நிர்வாக சேவைத் தரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. எந்த அடிப்படையில் இது வழங்கப்பட்டது என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். பதவித் தரங்களை உயர்த்தும் போது, திறமைக்கு முன்னுரிமை வழங்கினால் மட்டுமே நிர்வாகத்தை சீர்ப்படுத்த முடியும்.

கௌரவ தலைவர் அவர்களே,

வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்கள், இன்று வடக்கு - கிழக்கிலுள்ள ஏனைய பல பகுதிகளில் இருக்கின்றன. பல பாடசாலைகளில் தற்காலிகமாக இணைக்கப்பட்டு, அங்கு கல்வியைக் கற்பிக்கின்றனர். அவர்கள் மீண்டும் தங்கள் பகுதிகளுக்கு திரும்பிச் செல்லக்கூடிய சூழ்நிலை உருவாகும்வரை, அவர்களுக்கு முழுமையான வேதனம் வழங்கப்படுவதற்கும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வேதன நிலுவை வழங்கப்படுவதற்குமுரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வடக்கு - கிழக்கு ஆசிரியர்களுக்கு மிகுதியாக வழங்கப்பட வேண்டிய 7 மாதங்களுக்கான இடர்காலக் கொடுப்பனவுகள் இன்னும் கொடுக்கப்படாதிருக்கின்றன. எனவே, இந்த இடர்காலக் கொடுப்பனவை வழங்க கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். விடுவிக்கப்படாத பகுதிகளில் இந்த இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை. உண்மையிலே அந்தப் பகுதி களிலே உள்ள ஆசிரியர்கள் தாம் மிகவும் கஷ்டத்தின் மத்தியிலும் மிகவும் நெருக்கடியின் மத்தியிலும் சேவையாற்றுகின்றனர். அவர்களுக்கும் இந்த இடர்காலக் கொடுப்பனவை வழங்க கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கௌரவ தலைவர் அவர்களே,

கல்வி அமைச்சில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் எவருமே இல்லாதது மிகவும் வேதனைக்குரியது. இந்த நிலைமையை நிவர்த்தி செய்ய கௌரவ அமைச்சர் அவர்கள் விரைவில் நடவடிக்கை எடுப்பார் என்று நாம் நம்புகின்றோம். பரீட்சைத் திணைக்களத்தில், தமிழ்த் தட்டெழுத்தாளர்கள், கணினியாளர்கள், மற்றும் ஏனைய தமிழ் உத்தியோகத்தர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் பல்வேறு தேவைநிமிர்த்தம் அந்தக் காரியாலயத்துக்குச் செல்லும் தமிழ் பேசும் மக்கள், சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கு - கிழக்குத் தவிர்ந்த மற்றைய பகுதிகளில் உள்ள தினைக்களக் காரியாலயங்களில் தமிழ் பேசும் கல்வி நிர்வாக உத்தியோகத்தர்கள் முற்றாக இல்லை என்றே கூறலாம். மலையகப் பகுதிகளிலேயே இந்த நிலைமை அதிகம் காணப்படுகின்றது. இந்த நிலைமைகளைப் போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மலையகத்தில் சேவையில் ஈடுபடும் மக்கள்மயப்படுத்தப்பட்ட பஸ்வண்டிகளில் கடமையாற்றும் சில இனவாதிகள், பஸ்களில் பயணம் செய்ய அங்கு காத்திருக்கும் தமிழ் மாணவர்களை வேண்டுமென்றே அந்த பஸ்களில் ஏற்றாமல் விட்டுச் செல்கின்றனர். இப்படியான சம்பவங்கள் இளம் மாணவர்களின் மனவுணர்வுகள் தூண்டிவிட வழிவகுக்கும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இவ்வாறான இனவாதிகள் இனங்காணப்பட்டு, அவர்களுக்கெதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

கல்வித் துறையில் தமிழ் மொழிக் கல்விக்காக உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். 1970 களுக்குப் பின் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் கல்வி, தேசிய மட்டத்தில் பின்னடைந்துள்ளது. தேசியக்கல்வி 'கமிஷன்' நாட்டின் முறையை மாற்ற வேண்டுமெனச் சிபாரிசு செய்துள்ளது. தேசியக் கல்விக் 'கமிஷன்' அறிக்கையைப் பகிரங்கமாக வெளியிட அரசு முன்வர வேண்டும். மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு கல்விக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டுமேயொழிய, ஏற்கனவே வகுக்கப்பட்ட கல்விக் கொள்கைகளுக்கேற்ப மாணவர்களைத் தயார்ப்படுத்தக் கூடாது. தமிழ் மொழி பேசும் மாணவர்களுக்கான பிரச்சினைகள், தேவைகள் கருத்தில் கொள்ளப்பட்டே கல்விக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

எதிர்பார்க்கப்படும் புதிய கல்விச் சீர்திருத்தத்தை, நன்கு விவாதிக் கப்பட்ட பின்னரே நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். அதிலுள்ள ஆட்சேபனைக்குரிய விடயங்கள் நீக்கப்பட வேண்டும். அதன் நல்ல அம்சங்களை நாம் வரவேற்கின்றோம். கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கு மூன்று பாடங்களையே கற்பிப்பதற் கான முறைகளை அறிமுகப்படுத்த முற்படுவது பற்றி இப்போது சர்ச்சை கிளம்பியிருக்கின்றது. இந்த புதிய கல்வி முறையில் பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளச்சார்பு - Aptitude - பரீட்சை ஒன்றுக்கும் இம் மாணவர்கள் தோற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எமது பகுதிகள் வெளி உலகத்திலிருந்து துண்டிக்கப்பட்ட இன்றைய நிலையில் அங்குள்ள மாணவர்கள் பத்திரிகைகளைப் படிக்கவோ, வானொலியைக் கேட்கவோ, தொலைக்காட்சிகளைப் பார்க்கவோ முடியாதுள்ளனர். இந்த நிலையில் எப்படி அவர்கள் இப்படியான ஒரு Aptitude test க்கு முகம் கொடுக்க முடியும்? பல்கலைக்கழக அனுமதியின் போது இந்த Aptitude test இல் பெறப்படுகின்ற புள்ளிகளும் கவனத்தில் கொள்ளப்படுமானால், எமது பகுதியிலுள்ள திறமையான மாணவனும் நிச்சயம் பாதிக்கப்படுவான் என்றே நாம் கருதுகின்றோம். எனவே, இம்முறை நீக்கப்பட வேண்டும். இல்லையெனில், 100 வீதம் திறமை அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கும் தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டால், Aptitude test இந்த முறையை நாங்கள் ஏற்றுக்கொள்ளலாம். பல்கலைக்கழக அனுமதியை, மாவட்ட அடிப்படையில் என்று எல்லாம் பிரித்து வழங்கும் போது இந்த Aptitide test அவசியமில்லை என்பதே எமது கருத்து. அப்படி Aptitude test இருக்க வேண்டுமென்றால், பொது வினாப்பத்திரத்தில் எந்த இனத்தைச் சேர்ந்தவரும் பதில் எழுதக்கூடிய வகையில் தேர்வு வினாக்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

கௌரவ தலைமைதாங்கும் உறுப்பினர் அவர்களே,

NIE என்ற தேசிய கல்வி நிறுவனமே பாடசாலைகளுக்கான பாட விதானங்களைத் தயாரித்து வருகின்றது. தமிழ் பாடம் தவிர்ந்த ஏனைய பாடவிதானங்கள் சிங்களத்திலே தயாரிக்கப்பட்டுத் தமிழில் மொழிபெயர்க்கப்படுகின்றன. இதனால், பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சிங்களத்தில்போல் தமிழிலும் சமமாக வேலைகள் நடைபெறாமல் மொழிபெயர்ப்பு மட்டுமே நடைபெறுகின்றது. பாட விதானங்களைச் சிங்களத்தில் தயாரிக்கும்போது அவற்றில் சிங்களக் கலை, கலாசார மரபுகள், பாரம்பரியங்களே பிரதிபலிக்கின்றன. எனவே, இவற்றைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது தமிழ் மாணவர்கள் தமக்குப் பரிச்சயமில்லாத அந்நியமான பாடவிதானங்களையே காண்கிறார்கள். அத்துடன் இதன்மூலம் சிங்களப் பாரம்பரியங்கள், கலை, கலாசாரங்கள் தமிழ் மாணவர்களின் மீது திணிக்கப்படுகின்றன. ஆகவே, தமிழ் மொழியிலே தமிழ் மாணவர்களுக்கான பாடவிதானங்கள் தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இதற்குரிய ஒழுங்குகளை NIE கொண்டிருக்க வேண்டும்.

இன்று NIE இல் போதுமான தமிழ் பேசும் ஊழியர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் இல்லாததனால் சிங்களத்தில் வெளியிடப்படும் பாடநூல்கள், ஆசிரியர்கள் கைநூல்கள் என்பன சம காலத்தில் தமிழில் வெளியாவதில்லை. ஒன்றரை வருடங்கள் - இரண்டு வருடங்கள் தாமதமாகவே அவை வெளிவருகின்றன. சிங்களத்திலிருந்து மொழி பெயர்ப்புச் செய்யப்படும் போது ஏற்படும் தவறுகளுக்கு நல்லதோர் உதாரணத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். 6ஆம், 7ஆம் ஆண்டுகளுக்கான கணிதப் பாடத்தில், பல்வேறு திசைகளைக் குறிப்பிடும்போது, வட கிழக்குத் திசையைக் குறிக்க 'ஈசான மூலை' என்ற சொற்பிரயோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இக் குறைபாடுகளைப் போக்க கௌரவ அமைச்சரவர்கள் உரிய நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே,

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தர வரைதல் பாடத்திட்டம், முழுக்க முழுக்க சிங்களக் கலை, கலாசாரங்களை ஒட்டியதாகவே அமைந்துள்ளது. இதனால் எமது மாணவர்கள் தமது பண்பாட்டை மறந்து, தமக்கு அந்நியமானதொரு பண்பாட்டைக் கற்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இதனால் சாதாரணதரப் பரீட்சையில் ஏழு பாடங்களில் 'டி' சித்தி பெறும் மாணவனொருவன் சித்திரப் பாடத்திலே சாதாரண 'எஸ்' சித்தியைப் பெறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான். இதனைக் கௌரவ அமைச்சரவர்கள் உணர்ந்து இதற்கு மாற்றீடான முறையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

க.பொ.த உயர்தரத்தில் பரத நாட்டியம் என்ற ஒரு பாடம் உள்ளது. இதற்கான பாடவிதானத்தில் மூன்றிலொரு பங்கு சிங்கள நாட்டியம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது ஒரு தவறான நடைமுறையாகும். இலங்கை நாட்டியம் என்ற ஒரு பாடம் இருந்தால் அதில் இப்படியான நாட்டியத்தை உள்ளடக்கியிருக்கலாம். ஆனால், பரத நாட்டியத்திற்குள் இதனைத் திணிக்க முற்படுவது தவறான நடைமுறையாகும். எமது பகுதிகளில் அழகியற்கல்விப் பாடங்களான நடனம். சங்கீதம், போன்ற பாடங்களுக்கு ஆசியர் தட்டுப்பாடுள்ளது. இதை நிவர்த்தி செய்ய தமிழ் மொழிமூல அழகியற் கல்லூரி ஒன்றை வடக்கு - கிழக்கில் நிறுவ அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, உயர்கல்வி பற்றிச் சில விடயங்களைக் கூற எண்ணுகின்றேன். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவை எடுத்துக் கொண்டால், அங்கு தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. துணைத் தவிசாளரைத் தவிர சிரேஷ்ட மட்டத்தில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் எவருமில்லை. முன்பு தமிழ் பேசும் உதவிச் செயலாளர் ஒருவர் இருந்தார். அந்தப் பதவி இன்று தமிழ் தெரியாத ஒருவரால் நிரப்பப்பட்டுள்ளது. "இந்த நாட்டில் பல்கலைக்கழக அனுமதியில் எல்லா இன மக்களுக்கும் நியாயம் கிடைக்கின்றது" என்று நீங்கள் கூறுவதாயின், முதலில் இந்த பல்கலைக்கழக மானிய ஆணையத்தில் எல்லா இன மக்களுக்கும் உரிய இடம் அளிக்கப்பட வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன். 160 ஊழியர்களைக் கொண்ட UGC யானது இன விகிதாசாரப்படி 42 தமிழ், முஸ்லீம் ஊழியர்களைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், தமிழ் பேசும் ஊழியர்கள் 7 பேரே அங்கு உள்ளனர். முஸ்லீம்களைப் பொறுத்த மட்டில் ஒருவர் மட்டுமே இருக்கின்றார். இந்நிலைமை மாற்றியமைக்க கௌரவ அமைச்சரவர்கள் முன்வரவேண்டும்.

பல்கலைக்கழக அனுமதிக்கான நிர்ணயிப்பதும் மாற்றுவதும் பல் கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைகளிலேயே உள்ளது. ஒவ் வொரு வருடமும் இந்த ஆணைக்குழு விதிகளை மாற்றிக்கொள்கிறது. அதுவும் க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியான பின்புதான். இதில் மறைந்துள்ள மர்மம் என்ன? இந்த நடைமுறையால் ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுபவர்கள் எமது மாணவர்களே, இது வெளிப்படையான விடயம். இந்த உயர் கல்வி விடயம் தான் தமிழ் மக்கள் மத்தியில் போராளிகளை உருவாக்கியது என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. இந்த அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்காது, அரசியல் தீர்வு காணலாம் என எண்ணுவது புத்திசாலித்தனமானது இல்லை.

பல்கலைக்கழக அனுமதியைப் பொறுத்தமட்டில் கே.எம்.டி சில்வா வின் விதப்புரைகளின்படி, 1995ஆம் ஆண்டு தொடக்கம் முழுக்க முழுக்க திறமை அடிப்படையில்தான் பல்கலைக்கழக அனுமதிகள் இருக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்னமும் 40% மான திறமை அடிப்படையே விதியாக உள்ளது. 'மாவட்ட அடிப்படைத் தேர்வு, எக்காரணத்தைக் கொண்டும் முன்னைய ஆண்டைவிடக் குறைவாக இருக்கக் கூடாது என்ற விதி' இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால் நடைமுறையில் 40% மான திறமை அடிப்படை கூட குறைக்கப்படுகின்றது.

அடுத்து, புதிதாக நடைமுறைக்கு வரவுள்ள 5 சதவீத பல்கலைக்கழக அனுமதி ஒதுக்கீடு, 500 பேரை புதிதாக உள்வாங்கப்போகிறது. இந்த முறை பல்கலைக்கழக அனுமதியில் அரசியல் தலையீட்டையே உருவாக்கப்போகிறது. எந்தவொரு தமிழ்பேசும் மாணவனும் பயன் பெறப் போவதில்லை என்பதனை நாம் அறிவோம். பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு இந்த அனுமதி விடயத்தில் கடந்த ஆறு வருடங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் 'கணக்காய்வு' செய்வதற்கு அமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென நான் இந்த சபையில் கோரிக்கை விடுக்க விரும்புகின்றேன்.

பல்கலைக்கழகங்கள் விடயத்தில் யாழ்ப்பாண, கிழக்குப் பல்கலைக் கழகங்களுக்குப் போதுமான நிதியை ஒதுக்குவதற்கு அரசு முன்வர வேண்டும். தேவையான ஆளணிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அங்கு இல்லாத பீடங்கள் மற்றைய பல்கலைக்கழகங்களில் உள்ளது போல் நிறுவப்பட வேண்டும். போதிய ஆளணி இல்லாத தால் தகுதி, தராதரம், இல்லாத விரிவுரையாளர்கள் அங்கு நியமிக்கப் படுகின்றார்கள். இதனால் மாணவர்களின் கல்வித்தரம் மிகவும் பாதிக்கப்படுகிறது. மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக்கல்லூ ரியைக் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்குரிய நட வடிக்கைகளை எடுக்க வேண்டும். பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்தும், இவ்விடயத்தில் உருப்படியான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட டிப்ளோமாப் பட்டதாரிகள் வேலைவாய்ப்பைப் பெற முடியாத நிலையில் மிகவும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வைத்திய போதனாசிரியர்கள் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். யு.என்.டி.பி.யின் நிதியுதவியுடன் வெளிநாட்டுப் போதனாசிரியர்களைக் குறைந்தது இரண்டு ஆண்டு களுக்காவது கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நடைமுறை மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவிய போது கையாளப்பட்டது.

திருகோணமலையிலுள்ள இணைந்த பல்கலைக்கழகத்தைக் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதாக அறிவிக்கப்பட்ட போதிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய நடைமுறைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அங்கு என்ன பீடங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பது தெளிவாக் கப்பட வேண்டும். அடுத்து நாவல திறந்த பல்கலைக்கழகம் மிகவும் அற்புதமான வளர்ச்சி கண்டுள்ளது. எமது மாணவர்களைப் பொறுத்த வரையில் நாவலவுக்குச் சென்று படிக்கக் கூடிய சூழ்நிலையில்லை. ஆகவே யாழ்ப்பாணம், வவுனியா, திருமலை, மட்டக்களப்பு, ஆகிய இடங்களிலுள்ள பிராந்திய நிலையங்கள் போதிய வசதிளுடன் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் கல்வியல் கல்லூரியொன்றை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கௌரவ தலைவர் அவர்களே,

எனது உரையை முடிக்கும் முன்னர், முக்கியமான ஒரு விடயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன். 150 வருடங்களுக்கு மேலான பழைமை வாய்ந்த கொழும்பிலுள்ள கல்லூரியொன்றின் தமிழ் மன்றம், அண்மையில் கலைவிழா அழைப்பிதழை அச்சடித்து, அம் மன்றத்தின் அழைப்பிதழில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் சின்னங்கள் உள்ளன. அவர்களில் ஒரு மன்னரின் சின்னம்தான் இந்தப் புலிச் சின்னம் என்பதை யாவரும் அறிவார். ஆயினும், கல்லூரி நிர்வாகம் இந்த புலிச் சின்னத்தைக் கண்டு கிலி கொண்டு காலாகாலமாக இந்த மன்றம் பாவித்த அச் சின்னத்தைப் பாவிப்பதற்கு தடை விதித்துள்ளது. இந்த மனோபாவம் நிச்சயமாக மாற்றியமைக்கப்பட வேண்டும். புலிச் சின்னத்தைக் கண்டு அதற்குத் தடை விதித்த நிர்வாகம் முடிவெடுப்பது சரியாயின், மிருகக்காட்சி சாலையிலுள்ள புலிகளை நாம் கொல்ல வேண்டும். அல்லது அவற்றை திறந்து விட வேண்டிய நிர்ப்பந்தமே எமக்கு ஏற்படும். ஆகவே, இவர்களைப் போன்ற அதிகாரிகளின் இனவாதப் போக்கை கௌரவ அமைச்சர் அவர்கள் கருத்திற்கொண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய, உரையை முடிக்கின்றேன். நன்றி.

03 டிசம்பர் 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு – கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்

கௌரவ தவிசாளர் அவர்களே,

துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் ஈ.பி.டி.பி சார்பாக பேசக் கிடைத்திருக்கும் இச் சந்தர்ப்பத்திலே கௌரவ அமைச்சர் அவர்களுக்கும், கௌரவ பிரதி அமைச்சர் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

புனர்வாழ்வு, புனர்நிர்மானப் பணிகள், வட மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களைப் பொறுத்தமட்டில், இந்த அமைச்சினாலும், வடக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில், ஜனாதிபதி செயலகத்தின் கீழ் இயங்கும் வடக்குக்கான புனர்வாழ்வு, புனர்நிர்மான அதிகார சபை, அதாவது RANN எனப்படும். அமைப்பினாலும் செயற்படுத்தப்படுகின்றன. இந்த அமைச்சின் கீழ் இயங்கிய அத்தியாவசிய சேவைகள் ஆணையமும் கூட அரசுக்குக் கீழ்க் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இதேவேளை REPPIA எனப்படும் புனர்நிர்மான அதிகார சபை இந்த அமைச்சின் கீழேயே இயங்குகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுள் பெரும்பாலானோர், வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களே. இவர்களது புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் சம்பந்தமான பொதுக்கொள்கைகளில் அடிப்படையில் வேறுபாடுகள் இல்லை. இந்நிலையில் வெவ்வேறு அமைப்புக்களினால் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்போது, முரண்பாடுகளும், ஒருங்கிணைப்புக் குறைபாடுகளும் ஏற்பட வாய்ப்புண்டு, எனவே, இது தவிர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்குப் புனர்வாழ்வு, புனர்நிர்மான நடவடிக்கைகளுக்காக, உலக வங்கியின் உதவியுடனான ERRP என்று அழைக்கப்பட்ட அவசர புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திட்டம் ஒன்று, 1987 இல் செயல்படுத்தப்பட்டது. இது பல குறைபாடுகளுடன் செயல்பட்டது. ஆரம்பத்தில் மாவட்ட அரச அதிபர்களினால் செயற்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் பெரும் பகுதி 1989 களில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் புனர்வாழ்வு அமைச்சினதும் மாகாண புனர்நிர்மான நெறிப்படுத்தல் குழுவினதும் மேற்பார்வையில் அமுலாக்கப்பட்டது. 1992இல் ERRP II என்ற பெயரில் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, வெளிநாட்டு உதவிகளைப் பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைந்ததால், அத்திட்டம் கைவிடப்பட்ட நிலையிலுள்ளது. அத்திட்டத்தின்படி, கிட்டத்தட்ட 60 மில்லியன் ரூபா புனர்வாழ்வுப் பணிகளுக்கு அவசியமென அன்று மதிப்பிடப்பட்டது. எனினும் இன்றுள்ள கொடூர யுத்த சூழல் காரணமாக, புனர்வாழ்வுப் பணிகளுக்கு எவ்வளவு பணம் அவசியம் என மதிப்பிட முடியாத நிலையில் நாம் உள்ளோம். அழிவுகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் நிலைமையே இன்று காணப்படுகின்றது. புனரமைக்கப்பட்ட உட் கட்டமைப்புக்கள் இன்று அழிவுக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் புனர்வாழ்வு, புனர்நிர்மான அமைச்சரின் புனரமைப்புப் பணிகள் தொடர்பான கொள்கை என்ன என்பதை நாம் அறிய விரும்புகின்றோம்.

வடக்குக்கு ஒரு கொள்கை, கிழக்குக்கும் ஏனைய பகுதிகளுக்கும் வேறொரு கொள்கையா? இப்பணிகளை மேற்கொள்ளும் பல்வேறு அமைப்புக்களும் யாரால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. கூட்டு வேலைத்திட்டம், கூட்டு கொள்கை வகுத்தல் போன்ற விடயங்கள் பற்றி அமைச்சு கவனம் செலுத்துமா? ஜனாதிபதி செயலகத்தின் பணிகள் ஒரு துறைசார் அமைச்சின் பணிகளை ஒத்ததாக இருக்க முடியாது. அங்கு துறைசார் நிபுணர்கள் இல்லை. புனர்வாழ்வு, புனர்நிர்மானப் பணி என்பது ஒரு விசேட துறையாகும். ஆகவே, ஓர் ஒருங்கிணைந்த புனர்வாழ்வு, புனர்நிர்மானக் கொள்கை வகுக்கப்படல் வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

கௌரவ அமைச்சர் அவர்கள் அதிகாரப் பரவலாக்கலை வன்மையாக ஆதரிப்பவர். வடக்கு - கிழக்கு மாகாண சபையில் அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி அங்கம் வகித்தது. புனர்வாழ்வு, புனர்நிர்மானப் பணிகள், அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தின்படி, Concurrence Subject ஆகவுள்ளன. 1989ஆம் ஆண்டு கௌரவ வின்சன்ற் பெரேரா அவர்கள் புனர்வாழ்வு, புனர்நிர்மாண இராஜாங்க அமைச்சராக இருந்தபோது, வடக்கு - கிழக்கு மாகாண சபையிடமே முழு விடயங்களையும் விட்டிருந்தார். அப்பொழுது பணிகள் செவ்வென நடைபெற்றன. 1994ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் - அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆதரவான அமைச்சர் இப்பணிகளைப் பொறுப்பேற்ற பின்னர், இந்த புனர்வாழ்வுப் பணிகள் முழுக்க, முழுக்க மத்தியமயப்படுத்தப்பட்டுள்ள நிலைமையே நாம் காண்கின்றோம். இன்று மாகாண சபையின் புனர்வாழ்வு அமைச்சு மீது மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டப்படுகின்றது. இன்று அதன் அதிகாரங்கள் யாவும் இவ் அமைச்சின் நேரடிக் கண்காணிப்பிலேயே பிரயோகப்படுத்தப்படுகின்றன. இந் நிலைமை மிகவும் துரதிஷ்டவசமானது. அமைச்சுக் கொள்கைகளை வகுக்கலாம், ஆனால், அமுலாக்கல் பணிகள் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப் பட வேண்டும். தென்கிழக்குப் பிராந்திய சபை என்று ஒரு சபை உருவானால் மத்திய அரசு இப்படியான பணிகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதைக் கௌரவ அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வாரா?

மாகாண சபை இப்பணிகளைச் செய்ய வேண்டுமானால், சட்ட மொன்று இயற்றப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. இதனை நொண்டிச் சாட்டாகவே கருத முடியும், 1988-89 ஆண்டு காலப்பகுதி களில் சட்டமொன்றில்லாது பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை, தொடர்ந்து பிரயோகிக்க இன்று சட்டமொன்று அவசியமில்லை. அதிகாரப் பரவலாக்கலை ஆணித்தரமாகக் கோருபவர்கள் கூட "ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி" என்ற பாணியில் நடப்பது கவலைக்குரியது.

கௌரவ தவிசாளர் அவர்களே,

கௌரவ அமைச்சர் அவர்கள் வட பகுதிக்கான புனர்வாழ்வு, புனர்நிர் மான விடயங்கள், இன்று இவ் அமைச்சின் கீழ் வரும் விடயமாக இல்லை என்றாலும், வட பகுதி மக்களின் அவலங்களைப் பற்றி இச்சபையில், இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்க வேண்டியது எனது கடமை என நான் கருதுகின்றேன். இன்று குடிசனத்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான விடயம் மிகவும் சர்ச்சைக்குரியதாக மாறியிருக்கின்றது. இன்று வன்னியில் விடுவிக்கப்படாத பகுதிகளில் வாழும் மக்களின் தொகை தொடர்பாக, மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அரசு புதிதாக ஒரு கணக்கெடுப்பை நடாத்தி, அங்கு இரண்டு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து முன்னூற்றி முப்பத்தொரு பேர்தான் வாழ்கின்றார்கள் என்கின்றது. ஆனால், அரசாங்க அதிபர்கள், அங்கு சென்றுவரும் பக்கச் சார்பற்றவர்கள், சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனத்தினர் ஆகியோர் வன்னியில் கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றனர். முதலில் இந்த சர்ச்சைக்கு - மாறுபட்ட கருத்துக்கு - தீர்வு காணப்படல் வேண்டும். இந்தச் சர்ச்சை நீக்கப்படாது காலம் இழுத்தடிக்கப்படுவது, அங்கு வாழும் மக்களின் வாழ்வோடு விளையாடுவது போன்றதாகும். அரசு தனது நம்பிக்கையானவர்களை அங்கு அனுப்பிச் சரியான கணக்கெடுப்பு ஒன்றை நடாத்தலாமே! அரசாங்க அதிபர்களில் கூட நம்பிக்கை கொள்ளாது, இப்படியான மாறுபட்ட கருத்தை அரசு கொண்டிருப்பது மிகவும் துரதிஷ்டவசமானது.

இன்று அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழும் மக்களின் அவல நிலை மிகவும் துயரம் தரக்கூடியது. குறிப்பாக, வன்னியில் போதியளவு உணவு இல்லை. போசாக்கு சத்துள்ள உணவுப் பொருட்கள் அங்கு கிடைப்பதில்லை. உயிர் காக்கும் மருந்துகளை மாத்திரமன்றி, சாதாரணமான பனடோல், டிஸ்பிறின், போன்ற மாத்திரைகளையும் கூட வழமையான விலைகளை விட ஐந்தாறு மடங்கு அதிகமாக விலைகளைக் கொடுத்தே நுகர வேண்டிய கட்டாய நிலையில் எமது மக்கள் அங்கு உள்ளனர்.

'ரிவிரச' போன்ற பாரிய இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்னர், அதாவது 1995 மே மாத காலப்பகுதியில் இன்று அரசு அங்கு இருப்ப தாக குறிப்பிடும் மக்களின் தொகையளவில், அன்று அங்கு மக்களின் தொகை இருந்த காலத்தில் மாதம் ஒன்றிற்கு கிளிநொச்சி மாவட்டத் திற்கு இரண்டாயிரத்து ஐநூற்றி ஐம்பது பரல் மண்ணெண்ணையும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இரண்டாயிரத்து அறுநூறு பரல் மண்ணெண்ணையும், மன்னார் மாவட்டத்திற்கு ஆயிரத்து இருநூ ற்றி ஐம்பது பரல் மண்ணெண்ணையும், வவுனியா மாவட்டத்திற்கு இரண்டாயிரத்து நூறு பரல் மண்ணெண்ணையும் கொண்டு செல்லப்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. மொத்தமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணாயிரத்து ஐநூறு பரல் மண்ணெண்ணை அன்று வன்னியில் விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், மக்கள் இன்று பெருமளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து அங்கு சென்றிருக்கின்ற நிலையில் - அன்றிருந்த சனத்தொகையை விட இன்று அங்கு சனத்தொகை 40% வீதம் அதிகரித்திருக்கின்ற நிலையில் - மொத்தமாக விடுவிக்கப்படாத நான்கு மாவட்டத்திற்கும் இரண்டாயிரத்து அறுநூற்றி ஐம்பது பரல் மண்ணெண்ணையே கொண்டு செல்லப்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. இதைப்போல், 1995 மே மாத காலப்பகுதியில் தினமொன்றுக்கு 50 லொறிகளில் விடுவிக்கப்படாத வன்னிப்பகுதிக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது. இப்படி 50 லொறி உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டால்தான் அங்குள்ள உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமென்பது அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், இன்று எத்தனை லொறி உணவு எடுத்துச் செல்லப்படுகின்றது? கடந்த மே மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரை 3,698 லொறி உணவுப் பொருட்களே அங்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. முன்னைய சனத் தொகை அடிப்படையில் பார்த்தாலும் கூட, இந்த ஏழு மாதங்களில் 10,500 லொறி உணவுப் பொருட்கள் உண்மையில் அங்கு அனுப்பப் பட்டிருத்தல் வேண்டும். ஆனால், இன்று தினமொன்றுக்கு சராசரியாக 15 லொறி உணவுப் பொருட்களே அனுப்பப்படுகின்றன. அங்குள்ள மக்களின் உணவுத் தேவையை பற்றிச் சொன்னால், இங்கு அரசில் உள்ளவர்கள் "யாரும் பட்டினியால் சாகவில்லையே" ஏன் விதண்டாவாதம் பேசுகின்றார்கள். எமது மக்கள் மூன்று வேளை உணவை உட்கொண்டு எவ்வளவு நாட்களாகிவிட்டனவென்பதை இவர்கள் அறிவார்களா?

கௌரவ தவிசாளர் அவர்களே,

வன்னியில் மிகக் குறைந்த எண்ணிக்கையான அரச ஊழியரும், சிறுசிறு வியாபாரிகளும் உள்ளனர். போதியளவு விவசாய உள்ளீடு கள் விநியோகிக்கப்படாததனாலும் போர்க்கால சூழலினாலும் அங்குள்ள விவசாயிகள் விவசாயம் செய்வதில்லை. கால்நடை வளர்ப்புக்களும் இல்லாதொழிந்து விட்டன. கடற்றொழில் செய்யவும் முடியாத நிலை, இதனால் மக்களிடம் Buying Power - கொள்வனவுத் திறன் - இல்லை. அரைவயிற்றுக் கால் வயிற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சியுடன்தான் அங்குள்ள மக்கள் உயிர் வாழ்கின்றார்கள். அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் அனுப்பப்படும் பொருள்கள் போதியளவானதாக இல்லாத காரணத்தினாலும் குறித்த காலத்தில் அவை எடுத்துச் செல்லப்படாததனாலும் அரச அதிபர்கள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து உணவுப் பொருட்களை கடனாகப் பெற்று விநியோகம் செய்கின்றனர். இதனால் கூட்டுறவுச் சங்கங்களும் நல்ல முறையில் செயற்பட முடிவதில்லை. சுருக்கமாகச் சொன்னால், இடம் பெயர்ந்த எல்லோருக்கும், பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் நிவாரணப் பொருட்கள் உரிய முறையில் முழுமையாகக் கிடைப்பதில்லை. இதனால் வன்னியில் வாழும் மக்கள் உடல், உளப் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

இடம்பெயர்ந்தோருக்கு வன்னியில் போதுமான இருப்பிட வசதிகளோ, அல்லது அடிப்படைத் தேவைகளிலொன்றான மலசல கூட வசதிளோ இல்லை. இன்னும் பலர் பாதுகாப்பற்ற சூழலில் மரங்களின் கீழும் வீதியோரங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். ஆரம்ப காலங்களில் அமைக்கப்பட்ட சிறு குடிசைகளும் கூரைகளும் இன்று மழையினால் ஒழுகுகின்ற நிலையில் உள்ளன. அவற்றை வேய்வதற்கான கூரைப் பொருட்கள் கூட வழங்கப்படுவதில்லை. இப்படிச் சுமார் மூன்று இலட்சம் மக்கள் அங்கு அவதியுறுகின்றனர். சுமார் இரண்டு - மூன்று மாதங்களுக்கு முன் வன்னியில் நிலவிய கொடிய வரட்சியினால் குடிநீர் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமமிருந்தது. இதையுணர்ந்த UNHCR நிறுவனம் தண்ணீர் பவுசர் ஒன்றை அன்பளிப்புச் செய்திருந்தது. ஆனால், இன்றுவரை அது பாதுகாப்புப் பிரிவினரின் அனுமதிக்காக வவுனியாவில் காத்திருக்கின்றது. இப்போது ஒரே மழை எங்கும் தண்ணீர் ஆனாலும் குடிப்பதற்கு உகந்த சுத்தமான தண்ணீர் அங்கு கிடைப்பதில்லை. அந்த நீரை கொதிக்க வைத்துக் குடிக்கவும் அவர்களுக்கு வசதி இல்லை. இதனால் வாந்திபேதி, வயிற்றோட்டம் முதலான நோய்கள் பரவுகின்றன. மழைநீரினால் குளங்கள் நிரம்பி வழிகின்றன. ஆனால் விவசாயம் செய்யத் தேவையான உள்ளீடுகள் இல்லை. எரிபொருள் இல்லை. இந்த நிலையில் வாழ்கின்ற எமது மக்களின் அவலங்களை எண்ணிப்பாருங்கள். இந்தச் சூழலில் எமது மக்களால் எவ்வளவு காலத்திற்கு உயிர் வாழ முடியும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இதிலிருந்து தப்பி வவுனியாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தால் அவர்கள் சிறப்பு தடை முகாம்களில் சுதந்திரமின்றி தடுத்து வைக்கப்படுகின்றார்கள். இந்த நிலைமையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

யாழ்ப்பாணத்தில் 40,674 குடும்பங்களைச் சேர்ந்த 1,64,768 பேருக்கு உலர் உணவு நிவாரணம் மறுக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி எத்தனையோ தடவைகள் நாம் அரசிடம் முறைப்பாடு செய்திருக் கிறோம். ஆனால், அதற்கு செவிசாய்த்ததாக எமக்குத் தெரியவில்லை. எந்த வித தொழில் வாய்ப்பும் இல்லாத மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு அதாவது வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களின் துயர்துடைக்க அரசு உரிய நட வடிக்கைகளை எடுக்க வேண்டும்,

கௌரவ தவிசாளர் அவர்களே,

இன்று வழங்கப்படும் உலர் உணவு முத்திரைகளின் பெறுமதி இவ்வாறு அமைகிறது. மாதம் ஒன்றுக்கு ஒரு தனி நபர் குடும்பத்திற்கு 336 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும் இரண்டு நபர் உள்ள ஒரு குடும்பத்திற்கு 616 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும், மூன்று நபர் உள்ள ஒரு குடும்பத்திற்கு 840 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும், நான்கு நபர் உள்ள ஒரு குடும்பத்திற்கு 1,008 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும், 5 நபருள்ள குடும்பத்திற்கு 1,260 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும் வழங்கப்படுகின்றன. இந்த வகையில் பார்த்தால், ஒரு தனி நபருக்கு நாள் ஒன்றுக்கு 8 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களையே வழங்க முடியும். இன்று விடுவிக்கப்படாத வன்னிப்பகுதியில் கத்தரிக்காய் ஒரு கிலோ 120 ரூபா, இன்று வழங்கப்படும் உலர் உணவு நிவாரணப்பணத்தில் 100 கிராம் கத்தரிக்காயைக்கூடப் பெற முடியாத நிலையிலேயே ஒரு மனிதன் அங்கு வாழ்கின்றான். ஆகவே, இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். வன்னியில் உணவுப்பொருட்களின் விலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இங்குள்ள நிலைமை வித்தியாசமானதுதான். கொழும்பில் 'ரீ' குடிப்பதற்கு நாம் 6 ரூபாவை செலவழிக்கும் இக்காலகட்டத்தில், ஒரு நபருக்கு 8 ரூபா வீதம் வழங்கப்படும் உலர் உணவு நிவாரணம், எந்த அளவுக்கு அவரது தேவையைப் பூர்த்தி செய்யும்? அனுராதபுரம், அல்லது மணலாறு, அல்லது பொத்துவில் போன்ற இடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பெறுமதியுள்ள உலர் உணவு, அங்குள்ள விலைவாசியுடன் ஒப்பிடும்போது, சாதாரணமாக இருக்கலாம். ஆனால், வன்னியில் இந்தப் பெறுமதியான உலர் உணவில் சீவிக்க முடியாது.

கௌரவ தவிசாளர் அவர்களே,

இந்த அமைச்சின் மீள்குடியேற்றத்திட்டங்கள் வெற்றியளித்துள்ளனவா என்பது ஆராயப்பட வேண்டிய விடயம். கிழக்கில் இது பாரிய பிரச்சாரங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. பல மீள்குடியேற்றக் கிராமங்களில் மக்கள் இன்று இல்லை. பாதுகாப்பாக வெளியேறி விட்டனர். தொழில்வாய்ப்பு இல்லாததாலும் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டதாலும், வெளியேறி, தொழில்வாய்ப்புக் கிடைக்கும் பகுதிகளில் பாதுகாப்பாக வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். இன்னும் மீளக் குடியேற்றப்படாத கிராமங்கள் பல உண்டு. அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளியந்தீவு, விநாயகபுரம், தங்க வேலாயுதபுரம், சாகாமம், ஆலையடி வேம்புப் பிரதேச செயலகப் பிரிவில் பனங்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 1100 குடும்பங்கள் இன்னும் அகதி முகாம்களிலேயே வாழ்கின்றனர். இவர்களுக்குத் தொழில் வாய்ப்புடன் கூடிய, பாதுகாப்பான ஏற்பாட்டுடன் மீளக்குடியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1983 முதல் 1990 வரை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பாணமையில் 183 வீடுகளையும், பொத்துவில்லில் 836 வீடுகளையும் கோமாரியில் 148 வீடுகளையும், திருக்கோவில் செயலகர் பிரிவில் 368, ஆலையடி வேம்பு பிரதேச செயலகர் பிரிவில் 1,343 வீடுகளையும், மல்வத்தையில் 248 வீடுகளையும் சம்மாந்துறையில் 353 வீடுகளையும், கல்முனை பிரதேச செயலர் பிரிவில் 3,212 வீடுகளையும், அட்டாளைச்சேனைப் பிரதேச செயலர் பிரிவில் 538 வீடுகளையும் இழந்துள்ளனர். இவ்வாறு சுமார் 7,229 வீடுகளை அவர்கள் இழந்துள்ளனர். அல்லது வீடுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இன்று நெதர்லாந்து உதவித் திட்டத்தின் கீழ் சுமார் 6,000 வீடுகள் அமைக்கும் திட்டம் அங்கு அமுல்படுத்தப்படுவதாக நாம் அறிகின்றோம். ஆனால், அவற்றுள் 1000 வீடுகள் மட்டுமே அங்குள்ள தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மோசமாக பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வீட்டு உதவித் திட்டத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கூடிய முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்க விரும்புகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

மத்திய முகாம் நாலாம் கொலணியைச் சேர்ந்த மக்களின் 396 குடும்பத்தினர் அகதி முகாம்களிலும் 145 குடும்பத்தினர் உறவினர் வீடுகளிலுமே இன்னமும் தங்கியுள்ளனர். இந்த 145 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இன்னமும் நிவாரணம் வழங்கப்படவில்லை. எனவே, அதனை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் அம் மக்கள் தகுந்த பாதுகாப்புடன் மீள்குடியேறுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் 145 குடும்பங்களுக்கு இன்னும் நிவாரணம் வழங்கப்படவில்லை. கொடுக்கவிருக்கப்பட இருப்பதாக நீங்கள் சொன்னாலும் 145 குடும் பங்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

1990ஆம் ஆண்டிலும் அதற்கு பின்பும் இடம்பெற்ற சுற்றிவளைப்பு தேடுதல்களிலும், திடீர் கைதுகளிலும் காணாமல் போனவர்களுக்குரிய உயிரிழப்பு நிவாரணம் வழங்குவதில் அரசு காட்டிவரும் அசமந்த போக்கு மிகவும் மனவருத்தத்திற்குரியது. மேற்படி நடவடிக்கைகளின் மூலம் காணாமற்போனோரின் பெற்றோர், விதவை மனவிமார், நஷ்டஈடு பெறும் பொருட்டு மரண அத்தாட்சிப் பத்திரம் பெற அனுபவிக்கும் கஷ்டம் சொல்லில் அடங்காது, அத்தகைய கஷ்டத்தின் மத்தியில் மரண அத்தாட்சிப் பத்திரம் பெற்றாலும் கூட நஷ்டஈட்டை உரிய காலத்தில் பெற முடிவதில்லை, இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக அரச ஊழியர்களுக்கான நஷ்டஈடு வழங்கப்படுவதில் பலத்த மோசடி இன்று நடைபெறுகிறது. பல அரச ஊழியர்கள் விண்ணப்பித்துவிட்டு காத்திருக்க புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும் பல நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இன்று இந்த நிலை பற்றி பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. நஷ்டஈடு பெறக் காத்திருக்கும் அரச ஊழியர்களின் கண்ணீர்க் கதை சொல்லில் அடங்காது. எனவே, இந்த நிலைமை மாற்றி அமைக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணபித்த தொடர் இலக்க அடிப்படையில் நஷ்டஈடு வழங்க அரசு முன்வர வேண்டும்.

REPPIA சம்பந்தமான நடவடிக்கைகளை கணக்காய்வு செய்ய வேண்டும். ஏனெனில், பல மோசடிகள் நடைபெற்றுள்ளதாக பல குற்றச் சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளன. இந்நிலையில் 1983ஆம் ஆண்டிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவென விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கென பல இலட்சம் விண்ணப்பங்கள் வடக்கு - கிழக்கிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இக் கொடுப்பனவுகளையும் விரைவு படுத்த அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன், நன்றி

11 டிசம்பர் 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மணிப் புதைகுழி விவகாரம் பற்றிச் சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை அமைப்புக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அரசு அலட்சியம் செய்கிறது.

கௌரவ தவிசாளர் அவர்களே,

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்திலே ஈ.பி.டி.பி. சார்பாக சில கருத்துக்களை முன்வைக்க விளைகின்றேன். இலங்கை அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் புலிகளுக்கு எதிரான பிரச்சாரமே இன்று முதலிடத்தைப் பெறுகின்றது. முக்கிய பாத்திரத்தையும் வகிக்கின்றது. புலிகளுக்கு எதிரான பிரச்சாரம் என்று கூறப்பட்ட போதும், தமிழ் பேசும் மக்களின் அரசியல், ஜனநாயகக் கோரிக்கைகளுக்கு, சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தை இல்லாதொழிக்கும் வகையில் இன்று அப்பிரச்சாரம் மாறியுள்ளது. இனப்பிரச்சினைக்கு இந்த நாட்டுக்குள்ளேயே தீர்வைக் காணலாம் என்பது இயலாத காரியம் என்பது இன்று தெளிவாகிவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது, இனப்பிரச்சினை விடயத்தில் எதிர்க் கட்சியின் பக்கம் கையைக் கட்டிக் கொண்டிருந்தது. தற்போதைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசு, எதிர்க் கட்சியின் பக்கம்தான் பந்து இருக்கின்றது என்று கூறிக்கொண்டிருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைக்காவிட்டாலும் தீர்வைக் காண்பதற்கு தன்னிடம் திட்டம் இருப்பதாக மேதகு ஜனாதிபதி அவர்கள் கூறினார். ஐக்கிய தேசியக் கட்சி, தனது யோசனைகளை விரைவாகக் கூறாவிட்டால், அவர்களுக்காகக் காத்திருக்க முடியாது. என்று நீதிக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள் வாயிலாகக் கூறினார். இவ்வாறு கூறியே பல வருடங்கள் உருண்டோடிவிட்டன. ஆனால், இன்று மறுபடியும் ஆரம்ப இடத்திலேயே வந்து நிற்கின்றார்கள். அதாவது, "ஐக்கிய தேசியக்கட்சி" ஒத்துழைக்காவிட்டால், ஒன்றும் செய்ய முடியாது. என்று அரசாங்கம் இன்று சொல்லிக்கொண்டிருக்கின்றது. அப்படியானால் மேதகு ஜனாதிபதி அவர்கள் தன்னிடம் இருப்பதாகக் கூறிய திட்டத்திற்கு என்னவாயிற்று? "தமிழ்க் கட்சிகள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாம் ஒரு தீர்வைக் கொண்டு வருவோம். என்று அரசாங்கத்தினர் கூறினார்கள். நீதியான ஒரு தீர்வைக் கொண்டு வாருங்கள்" என்றுதான் நாங்கள் கூறுகின்றோம். ஏன், அவர்கள் தயங்குகிறார்கள்?

ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக அரசியலுக்குள் பிரவேசித்த தமிழ் கட்சிகளுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதை என்ன? நாங்கள் கூட்டாகச் சமர்ப்பித்த யோசனைகளைக் குப்பைக் கூடைக்குள் அனுப்பியதுதானா எமக்குத் தரப்படும் மரியாதை? தமிழ்க் கட்சிகள் ஏற்காத தீர்வுப் பொதியை, தமிழ்க் கட்சிகள் ஏற்றுக்கொண்டு விட்டதாக அரசாங்கம் இன்று வெளிநாடுகளில் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறது. அரசு முன்வைத்துள்ள தீர்வுப் பொதி, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்த்துவைக்கக் கூடியதல்ல, இது ஒரு அரை குறையான தீர்வுப் பொதி என்பதனாலேயே ஐந்து தமிழ்க் கட்சிகளும் கூட்டாக மாற்று யோசனைகளை முன்வைத்துள்ளன. அந்தக் கட்சிகளின் யோசனைகளை நிராகரித்துவிட்டு, தமிழ்க் கட்சிகள் தீர்வுப்பொதியை ஏற்றுக்கொண்டுள்ளதாகச் சர்வதேச சமூகம் முன்பாகக் கூறுவது ஏற்கக்கூடியதல்ல, கண்டிக்கப்பட வேண்டியதே! தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களை மறுதலித்துக் கொண்டே, தனது சர்வதேசப் பிரச்சாரத்திற்கு தமிழ்க் கட்சிகளின் பெயர்களைப் பயன்படுத்துவது ஏற்கக்கூடியதல்ல. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாம் முன்வைத்துள்ள யோசனைகள் மறுபரிசீலனை செய்யப்படாதவரை, அரசாங்கம் முன் வைத்துள்ள தீர்வுப் பொதியை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

கௌரவ அமைச்சர் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் கூட தீர்வுப் பொதியை செல்லாக்காசு என்று கூறியிருப்பதை பத்திரிகைகள் வாயிலாக அறியக் கூடியதாக இருந்தது. தமிழ் பேசும் தரப்பினரால் அங்கீகரிக்கப்படாத பொதியை, அவர்களின் ஆதரவு பெற்ற பொதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறப்படுவதை நாங்கள் ஏற்கவில்லை. இந்த அரசாங்கத்தினால் நியாயமான தீர்வொன்றைக் காணமுடியுமென்பதிலிருந்த நம்பிக்கை அருகிக் கொண்டே வருகின்றது. குதிரைக்கு முன்பாகக் கொள்ளைக் கட்டித் தொங்கவிடுவதுண்டு, இந்தப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையொன்றைக் காண்பதிலேயே அரசுகூடிய அக்கறை கொண்டிருக்கின்றது. முடிவில்லாத போரை ஒரு சூதாட்டம்போல் நடத்திக் கொண்டிருக்கின்றது. இந்தச் சூதாட்டத்தில் முழு நாடுமே பணயம் வைக்கப்பட்டுள்ளது.

கௌரவ தவிசாளர் அவர்களே,

அதனால்தான் இந்த நாட்டுக்குள் தீர்க்க முடியாத பிரச்சினையைச் சர்வதேச மத்தியஸ்தத்தின் மூலம் தீர்க்க முன்வர வேண்டுமென்று நாம் கோருகின்றோம். கண்டியிலே நில நடுக்கம் ஏற்பட்டபோது அது பற்றி ஆராய, பிரிட்டன் போன்ற நாடுகளின் உதவி கோரப்படுகின்றது. ஆனால், நாடே யுத்தத்தினால் அதிர்ந்து கொண்டிருக்கும்போது, சர்வதேச உதவியை நாட ஏன் மறுக்க வேண்டும்? மத்தியஸ்தம் என்றால் அதற்கு வேப்பங்காயாக இருப்பது ஏனென்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

வெளிநாடுகளில் இருக்கின்ற இலங்கைத் தமிழர்களை இந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்புமாறு இந்த அமைச்சின் மூலம் அரசு கோருகின்றது. இலங்கையில் சகஜ நிலை திரும்பிவிட்டதாகவும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதாகவும் வெளிநாடுகளில் பிரசாரம் செய்யப்படுகின்றது. அண்மையில் கொண்டாடப்பட்ட புலிகளின் மாவீரர்தின வாரத்தில் வன்னியில் விமானப்படையினர் நடத்திய குண்டு வீச்சுக்களால் மொத்தம் பதினேழு பேர் உடல் சிதறிப் பலியாகியிருக்கின்றார்கள்: ஐம்பது பேர் வரை படுகாயமடைந்திருக்கிறார்கள். ஏழு வயதுக் குழந்தை கூட அந்தக் குண்டு வீச்சினால் கொல்லப்பட்டுள்ளது. அந்தத் தாக்குதலினால் ஒரு புலிக்கேனும் துளியளவு சேதம் கூட ஏற்படவில்லை. புலிகள் என்று கூறிக்கொண்டு அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வதுதான் இங்குள்ள சகஜ நிலையா?

செம்மணிப் புதைகுழி விவகாரம் பற்றிச் சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட மனித உரிமை அமைப்புக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அரசு அலட்சியம் செய்து வருகின்றது. யாழில் காணாமற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனோரின் கதியை அறிவதில் அரசு அக்கறை காட்டவில்லை. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறிக்கூறியே அரசு காலத்தை இழுத்தடித்துக்கொண்டிருக்கின்றது. சடலங்கள் புதைக்கப் பட்டமைக்கான தடயங்கள் மறைந்து போகும் சூழ்நிலை அங்கே ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. தாமதமாக வழங்கப்படும் நீதியை, அநீதி என்றுதான் கொள்ள வேண்டியிருக்கும்.

கொழும்பில் தொடர் கைதுகள் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. தமிழ் மக்களைப் பொலிஸில் பதிவு செய்யவதற்கு ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் ஒவ்வொரு நடைமுறை பின்பற்றப்படுகின்றது. அப்படிப் பதிவு செய்துகொண்டிருந்தாலும்கூட, கைதுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. பதிவு செய்வதற்கு இப்போது புகைப்படமும் வேண்டுமென்று கேட்கப்படுகின்றது. இது பற்றிப் பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் கேட்டால், அது பற்றித் தமக்குத் தெரியாதென்று கூறுகின்றார்கள். சட்டமா அதிபரோ, பொலிஸ் பதிவுத் துண்டை கொண்டுதிரியத் தேவையில்லையென்று கூறுகின்றார். ஆனால், அந்தத் துண்டு இல்லாவிட்டால் பயங்கரவாதியென்று கூறிக் கைதுசெய்யப்பட்டு 'உள்ளே' போகவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இன்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு ஏதாவதோர் அலுவலின் நிமித்தம் செல்லும்போது கூட, அங்கு நுழைவாயிலில் போலின் பதிவு கேட்கப்படுகின்றது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை இப்படியான பல நடைமுறைகள் பின்பற்றப்படும்போது, தமிழர்கள் என்றால் அவர்களுக்கு இங்கே யார் சட்டம் விதிக்கிறார்கள் என்பதே புரியாத ஒன்றாக இருக்கின்றது. தமிழ் மக்கள் மீது யார் வேண்டுமானாலும் தம்மிஷ்டப்படி சட்டத்தைப் பிரயோகிக்கலாம் என்று, ஓர் எழுதப் படாத விதி இங்கு கடைப்பிடிக்கப்படுகின்றது.

நாடறிந்த பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டு நீண்ட நாட் களுக்குத் தடுத்து வைக்கப்படுகின்றார்கள். கைது செய்யும் போது அவர்களைப் 'புலி' என்றனர். ஆனால், அதற்கான ஆதாரங்களை வைத்து அவர்களால் நிரூபிக்க முடியவில்லை. இவ்வாறு இங்கு தலைவிரித்தாடும் மனித உரிமை மீறல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். தமிழ் மக்கள் நின்மதியாக, கௌரவமாக வாழவழி செய்யப்பட வேண்டும். அதன் பின் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தமிழர்களை இங்கே வரவழைப்பது பற்றிப் பரிசீலிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கேயிருந்து துன்பப்படுவோர் தொகை போதாதென்று அவர்களை யும் இங்கே அழைப்பது நியாயமல்ல.

கௌரவ தவிசாளர் அவர்களே,

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இன விகிதாசார அடிப்படையில் சிறுபான்மையினருக்கு நியமனங்கள் வழங்கப்படுவதில்லை. வெளி நாடுகளில் இந்த நாட்டைச் சேர்ந்த பெருமளவு தமிழ்பேசும் மக்கள் தொழில் புரிவதால், அவர்களின் நலன்களைக் கவனிக்கக்கூடிய வகையில் அங்குள்ள தூதரங்களில் தமிழ் பேசும் அதிகாரிகள் நியமிக் கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். வெளிநாட்டுத் தூதுவர் நியமனங்களிலும் தமிழர்களுக்கு பாரபட்சம் காட்டப் படுகிறது. திறமை வாய்ந்த பல அதிகாரிகள் இருந்தும் கூட, அவர்களுக்கு வாய்ப்பு எட்டுவதில்லை. இதனைக் கௌரவ அமைச்சர் அவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களில் கடமை புரியும் சில அதிகாரிகள், பாரபட்சமாக இனத்துவேச அடிப்படையிலும் செயற்படுவதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். வெளிநாடுகளில் கடவுச் சீட்டு இழந்தவர்கள் தமிழர்களாக இருந்தால், அவர்கள் தாயகம் திரும்புவதற்கு அவசரக்கால கடவுச்சீட்டு முறை Emergency Pass Port – பெறுவதற்கு பெருமளவு பணத்தினை இலஞ்சமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. சர்வதேச கடவுச்சீட்டு – All Countriey Port – தற்போது வழங்கப்படவில்லை. ஆனால், சர்வதேச கடவுச்சீட்டு வழங்குவதாகக் கூறிப் பெருந்தொகைப் பணம் வெளிநாட்டுத் தூதரங் களினால் அறவிடப்படுகிறது. ஆனால், பாஸ்போட் வழங்கப்படும் போது, 'இலங்கைக்கு மட்டும் பயணிக்க முடியும்' என்ற முத்திரையு டன்தான் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

சில நாடுகளில் குறிப்பாக, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் இலங்கையர் ஒருவரைத் திருப்பியனுப்புவதற்கு அந்த நாட்டு அதிகாரிகள் சில நடவடிக்கைகளை எடுக்கும் போது, அந்த நட வடிக்கைகளுக்கு எமது நாட்டுத்தூதரக அதிகாரிகள் சட்டத்துக்குப் புறம்பாக ஒத்துழைக்கிறார்கள். அதாவது, ஒரு நபரை, அந்த நாட்டின் அதிகாரிகள் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது, அவர் இல்லாமலேயே வேறு முறைகளில் பெறப்பட்ட அவரது புகைப்படம், அவரது கையெழுத்து என்பவற்றைக் கொண்டு, எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுத் தூதரகத்தில் அவருக்கான பாஸ்போட்டைப் பெற்றுக்கொள்ள உதவுவதன் மூலம், அவரைத் திருப்பி அனுப்புவதற்கு எமது நாட்டுத் தூதரக அதிகாரிகள் ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனைச் சட்டதிட்டங்களுக்கு மிகவும் முரண்பட்ட விடயமாக கொள்ள வேண்டும். வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தமிழர்களை, எமது சொந்தப் பிரஜைகளாக கௌரவமாக நடத்துவதற்கு வெளிநாடுகளில் பணிபுரியும் சில தூதரக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்க கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்ததாக, வெளிவிவகார அமைச்சின் 'கொன்சியூலர்' பிரிவு இன்று ஊழலும் இனத்துவேசமும் மிக்க ஒரு பிரிவாக மாறிக் கொண்டிருக்கிறது. அங்கு செல்லும் தமிழ் மக்கள் பல்வேறு விதங்களில் கஷ்டத்துக்குள்ளாக்கப்படுகின்றனர். வெளிவிவகார அமைச்சின் கொன் சியூலர் பிரிவின் கடமைகளில் ஒன்று ஆவணங்களைப் பரிசீலித்து அவற்றை உறுதிப்படுத்திக் கொடுப்பதாகும். இதற்காக ஒவ்வொரு ஆவணத்திற்கும் நூறு ரூபா பெறுமதியான முத்திரை கட்டணமாக அறவிடப்படுகிறது. தற்போது, ஆவணங்களை உறுதிப்படுத்துவதற்கு குறைந்தது மூன்று தினங்கள் செல்கின்றன. இங்கே நான் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதாவது, எங்கே காலதாமதமும் தேவையற்ற கெடுபிடிகளும் ஏற்படுகின்றனவோ, அங்கே ஊழலும் பெருகக்கூடிய வாய்ப்பிருக்கின்றது. இதற்கு வெளிவிவகார அமைச்சின் 'கொன்சியூலர்' பிரிவை நல்ல உதாரணமாக நாம் கொள்ளலாம். இங்குள்ள சிற்றூழியர் தொடக்கம் அதிகாரிகள் வரை பெரும்பாலானோர் இலஞ்சப் பேர்வழியாகவே இருக்கின்றனர். அங்குள்ள குறிப்பிட்ட ஓர் அதிகாரியை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அந்த அதிகாரி இலகுவில் சிரிக்க மாட்டார்: பணத்தைக் காட்டினால்தான் அவர் சிரிப்பார்: இவர் ஊழல், இனத் துவேசம் என்பவற்றுக்கு மிகவும் பெயர்போனவர் என்று அங்கு சென்றுவரும் தமிழர்கள் குறிப்பிடுகிறார்கள். இவரும் இவரைப்போன்ற சில அங்குள்ள சில அதிகாரிகளும் அங்கு வருகின்ற தமிழ் மக்களைப் பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாக்குகின்றனர்.

வடக்கு - கிழக்கு மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் என்பவற்றினால் வழங்கப்படும் பிறப்பு, இறப்பு, திருமண சான்றி தழ்கள், மற்றும் திருமணம் ஆகாமைக்கான சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களையும் உறுதிப்படுத்திக் கொடுப்பதற்கு அவர்கள் மறுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றார்கள். அல்லது இலஞ்சம் கோருகின்றார்கள். இலஞ்சம் கொடுக்காவிட்டால் அலைக்கழிக்கிறார்கள். வெளிநாடுகளில் உள்ளவர்களின் ஆவணங்களை உறுதிப்படுத்துவதற்காக, அவற்றை அவர்களது உறவினர்கள் எடுத்துச் செல்லும் போது, சம்பந்தப்பட்டவர்களே நேரில் வரவேண்டும் என்று புதிய விதிகளை விதிக்கிறார்கள். இது தொடர்பாகவும் கௌரவ அமைச்சர் அவர்கள் தங்களுடைய கவனத்திலெடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக வெளிநாடுகளில் 'விசா' இன்றி தங்கி இருத்தல் அல்லது உரிய அனுமதியின்றி வேலை செய்தல் அல்லது கடவுச்சீட்டின்றி இருத்தல் போன்ற குற்றங்களுக்காக சிறை வைக்கப்பட்டுள்ள இலங்கையரை விடுவித்து, இலங்கைக்கு அனுப்புவதில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் பாரபட்சம் காட்டுகின்றன. தமிழ் பேசும் மக்கள் சிறையில் இருந்தால், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன், அசமந்தப் போக்காக, அங்குள்ள அதிகாரிகள் நடந்து கொள்கின்றார்கள். அவர்களைத் திருப்பி அனுப்புவதற்காக இலஞ்சம் கோருகின்றார்கள். இது போன்ற பல சம்பவங்கள் மத்திய கிழக்கு நாடுகளிலும் தாய்லாந்து போன்ற நாடுகளிலும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, கௌரவ அமைச்சர் அவர்கள் இந்த நிலைமைகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி

01 டிசம்பர் 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் தாயக பூமியில் பறிபோகும் பிரதேசமாக திருகோணமலை காணப்படுகிறது.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

திட்டமிட்ட குடியேற்றத்தின் விளைவாக தமது பிரதேசங்கள் குடியேற்ற வெள்ளத்தில் அள்ளுண்டு போகாமல் பாதுகாக்க, தமிழ் பேசும் மக்கள் குரல் கொடுக்க ஆரம்பித்தனர். இலங்கையில் எப்பகுதியில் சென்று வாழ்வதற்கும் சகல குடிமக்களுக்கும் உரிமை இருக்கின்றது. ஆனால், ஓர் இனத்தைச் சிறுபான்மையாக்கும் நோக்கத்தோடு - அவ்வினத்தின் தனித்துவத்தைச் சிதைத்துவிடும் திட்டத்தோடு அரசினால் நடத்தப்படுகின்ற குடியேற்றத் திட்டங்களையே நாம் எதிர்க்கின்றோம். அரசின் உதவியுடனும் படையினரின் பாதுகாப்புடனும் கிழக்கில் பாரிய குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப் படுகின்றன: உருவாக் கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் இதயப் பகுதியான மணலாற்றில் இருந்த 43 கிராமங்களைச் சேர்ந்த பதின் மூவாயிரத்து ஐநூறு தமிழ்க் குடும்பங்களை, படையினரின் உதவியுடன் இரவோடுஇரவாக அடித்துக் கலைத்து விட்டு, அங்குள்ள சிங்கள மக்களைக் குடியேற்றி, அந்தப் பகுதியின் பெயரை 'வெலிஓயா' என்றும் மாற்றினார்கள். கடந்த அரசாங்க காலத்தில் ஆட்சி செய்தவர்கள், பாதுகாப்புப் படையினர் சமீபத்தில் இப்பகுதியைப் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர். இப்பகுதியிலுள்ள குடியேற்றத் திட்டங்களைப் பாதுகாப்பதற்காகவே அங்கே பல படைமுகாம்கள் நிறுவப் பட்டன. அத்துமீறிய குடியேற்றங்களை அண்டியனவாகவே அங்கு படைமுகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேசமயம், திருமலை, லிங்க நகரில் குடியிருக்கும் தமிழ்க் குடும்பங்களை அங்கிருந்து விரட்டியடிக்க இராணுவத்தினர் முயற்சிக்கின்றனர். ஒரு பகுதியில் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது. இன்னொரு பகுதியில் குடியிருக்கும் தமிழ்க் குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறு அச்சுறுத்தப்படுகின்றது. ஏன் இந்தப் பாகுபாடு? லிங்கநகர் மக்கள் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனமோதல்களில் பாதிக்கப்பட்டு அங்கிருந்து வெளியேறினார்கள். பின்னர் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் தமது காணிகளில் மீளக்குடியேறினார்கள், பிறகு 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தினால் அவர்கள் மீண்டும் அங்கிருந்து துரத்தியடிக்கப்பட்டனர். அதன் பின் அவர்கள் 1991ஆம் ஆண்டிலிருந்து மீளக்குடியேறத் தொடங்கினர். அவர்களுக்கான அடிப்படை வசதிகளை எமது கட்சி ஏற்படுத்திக் கொடுத்தது. இன்று அந்த அடிப்படை வசதிகளை அந்த மக்கள் அனுபவிக்க முடியாதவாறு இராணுவம் தடுத்துக் கொண்டிருக்கின்றது.

லிங்கநகர் காணியை தமக்குத் தருமாறு இராணுவம் 06.09.1991இல் அப்போது ஆளுநராக இருந்த லெப்டினண்ட் ஜெனரல் நளின் சேனவிரத்ன அவர்களிடம் கடிதம் மூலம் கோரியது, அந்தக் கடிதத்துக்கு ஆளுநர் 21.09.1991ஆந் திகதி இராணுவத்திற்கு எழுதிய பதிலில், லிங்கநகர் காணிகள் மக்கள் குடியிருப்புக் காணிகள் என்றும், குடியிருப்பு நிலைகளுக்கு அருகாமையிலுள்ள இடங்களை இராணுவத் தேவைகளுக்காக பயன்படுத்தப்படக் கூடாது என்றும் வலியுறுத்தி எடுதியிருந்தார். பின்னரும் இது தொடர்பான சர்ச்சையை இராணுவத்தினர் உருவாக்கியபொழு, அப்போதைய ஜனாதிபதியாக இருந்த கௌரவ பிரேமதாச அவர்கள் இது பற்றி ஆராய வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் மூலமாக ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். அந்த ஆணைக்குழு 'லிங்கநகர் காணிகள், மக்களின் குடியிருப்புக் காணிகள்' என்று தீர்ப்பு அளித்திருந்தது. தற்போது லிங்கநகரில் இருந்து மக்களை வெளியேற்ற இராணுவத்தினர் இரண்டு காரணங்களைக் கூறி வருகின்றனர். அவற்றில் ஒன்று, அவை இராணுவத்தினருக்குரிய காணிகள் என்பது, இரண்டாவது இராணுவ முகாமின் பாதுகாப்புப் பிரச்சினை, இந்த இரண்டு காரணங்களுமே இனப் பாகுபாட்டோடு முன்வைக்கப்பட்டிருந்தன. முதலாவது காரணமாக இராணுவத்தினருக்கு அந்தக் காணி சொந்தம் என்பதற்கு எந்தவித அத்தாட்சியும் கிடையாது. அங்குள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் கலவரங்கள் காரணமாக இடம்பெயர்ந்து, தற்போது மீண்டும் தமது இடங்களுக்கு திரும்பியுள்ளனர். அவர்களுக்குச் சொந்தமான இடத்தை இராணுவத்தினர் தமது பலத்தின் மூலம் உரிமை கொண்டாட முற்படுகின்றனர். ஒரு பகுதியில் குடியிருக்கும் மக்களை வெளியேறுமாறு விரட்டுவதோ, அவர்களுக்கு தொல்லை கொடுப்பதோ சட்டத்துக்கு மாறான செயலாகும்.

இரண்டாவது காரணமாகக் கூறப்படுவது, பாதுகாப்புத் தொடர்பான காரணமாகும், தமிழ்க் குடும்பங்கள் தமது முகாமுக்கு அருகாமையில் இருந்தால், பாதுகாப்புப் பிரச்சினை என்று சொல்லப்படுகின்றது. சிங்கள மக்கள் இருந்தால் மட்டும் பரஸ்பரம் பாதுகாப்புக் கருதப்படு கின்றது. தமிழர்கள் என்றால், சந்தேகக்கண்கொண்டு நோக்கப்படு வதையும், இனப்பாகுபாடுடனான கண்ணோட்டத்திலேயே லிங்க நகர்ப் பிரச்சினை நோக்கப்படுவதையும் இதன்மூலம் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது.

இதேபோலவே, கடந்த 18.03.1998 அன்று பன்னிரண்டு மணிநேர அவகாசத்தில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள உப்பாறு என்ற கிராமத்தில் வசித்த தமிழ்க் குடும்பங்களை இராணுவத்தினர் அங்கி ருந்து விரட்டியடித்துள்ளனர். தமது பாதுகாப்புக்காகவே அவர்களை வெளியேற்றுவதாக படையினர் மக்களிடம் பகிரங்கமாகக் கூறி அவர்களை வெளியேற்றியிருக்கிறார்கள். உப்பாறு என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இன்று ஆலங்கேணி என்ற இடத்தில் அகதிகளாக வாழ்கின்றனர். அவர்கள் சகல உடைமைகளையும் இழந்தவர்களாக - தொழில்களை இழந்தவர்களாக - வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களை அவர்களது நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் இது போன்ற அச்சுறுத்தல்களையிட்டு அரசு மௌனமாக இருக்கக்கூடாது.

கௌரவ பிரதி தவிசாளர் அவர்களே,

தமிழர்களின் தாயக பூமியில் பறிபோகும் பிரதேசமாக இன்று திருகோணமலை காணப்படுகிறது. அத்துமீறிய பேரினவாதக் குடி யேற்றங்கள் இரு முனைகளும் கூரான கத்திபோல நகருக்குள்ளேயும் நகருக்கு வெளியேயும் மேற்கொள்ளப்படுகின்றன. இன்று திருகோண மலை நகர தமிழ் மக்கள், நகரத்தைப் பாதுகாப்பதற்காகப் போராட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நகரிலுள்ள தமிழர்களின் நிலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், கோயில் நிலங்கள், தனியார் காணிகள், சங்கங்களின் காணிகள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் அவர்களின் காணிகள் உட்பட பல, காணிகள் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களைக் கொண்டிருக்கின்றன. தினமும் ஆக்கிரமிக்கப்பட்டும் வருகின்றன. கோயில் காணிகளில் நிரந்தரக் கட்டிடங்களை அமைத்து, குடியிருப் புக்கள், வியாபார ஸ்தலங்கள் என்பன அமைக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன.

திருகோணமலை 'லவ் லேண்' என்ற இடத்தில் வசித்த தமிழ், முஸ்லீம் குடும்பங்கள் 1985இல் அங்கிருந்து விரட்டப்பட்டன. பின்பு 1987இல் அவர்கள் மீளக்குடியேறினர். அதன் பின்னர், 1990இல் ஏற்பட்ட கலவர நிலையினால் அவர்கள் மீண்டும் இடம் பெயர்ந்தனர். பின்பு அவர்கள் மீளக்குடியேறச் சென்றபோது அந்தக் காணி பன்சலைக்கு உரிய காணியென்று முட்கம்பிகளால் அடைக்கப்பட்டு விளம்பரப்பலகையிடப்பட்டிருந்தது. இன்று இந்தக் காணிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள். அந்தக் காணிகளில் வசித்த தமிழ், முஸ்லீம் குடும்பங்கள் அகதி முகாம்களில் வாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் வாழ்ந்த வீடுகளில் அத்துமீறிய குடியேற்ற வாசிகள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். 1953இல் கந்தளாயிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நில ஆக்கிரமிப்பு நடவடிக்கை மூலம் கந்தளாயிலிருந்து சேருவில வரையும், அனுராதபுரத்திலிருந்து பதவிசிறிபுர, கோமரங்கடவல, முதலிக்குளம், கன்னியா வரையும் உள்ள தமிழ் நிலங்கள் முழுவதும் சூறையாடப்பட்டுள்ளன. இன்று முதலிக்குளம் மொறவேவ என்று அழைக்கப்படுகின்றது. இந் நிலங்கள் சூறையாடப்பட்டமைக்கு படையினர் 'தமது பாதுகாப்புக்காக' என்ற பதத்தை பிரயோகிக்கின்றனர். திட்டமிட்ட குடியேற்றங் களுக்கு அரசினரும் படையினரும் சகல அடிப்படை வசதிகளையும் பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். இன்று மீள்குடியேற் றம் என்ற போர்வையில் ஏராளமான நிலங்கள் சூறையாடப்படுகின்றன. பீலியடி, இராவணன் வீதி, ஆறாம் கட்டை, கன்னியா, முதலிக்குளம், பன்குளம், பிள்ளையார் கோவிலடி போன்ற தமிழர்கள் வாழ்ந்த நிலங்கள், அவர்கள் மீளக்குடியேற முடியாத பிரதேசங்களாக இன்று காணப்படுகின்றன. அங்கு வாழ்ந்த மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை நிறுத்தவும் இன்று திருகோணமலையில் உள்ள அரசாங்க அதிபர் மிகவும் அக்கறை காட்டி வருகிறார். அவர்கள் மீளக்குடியேறுவதற்குப் பெரும் தடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஏற்படுத்துவதில் அவர் முதல் நிலையில் நின்று செயற்படுகிறார். ஆனால், சில சிங்களக் கிராமங்களில் மீளக்குடியேற்றங்கள் நடை பெறும் போது, அங்கே எண்ணிக்கைகளைக் கூட்டி மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அவர் முன்னின்று செயற் படுகின்றார்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே,

ஏழாம் கட்டையில் இருக்கின்ற கிறிஸ்தவர்களின் பாரம்பரிய பழம் பெரும் ஆலயமான புனித சங்கையப்பர் ஆலயவளவு இன்று படைமுகாமாக மாற்றப்பட்டுள்ளது. இந்த ஆலயம் படையினரின் அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஹபரணயி லிருந்து திருகோணமலைநகர் வரையில் உள்ள இரு வீதியின் இரு புறங்களும் துப்பரவாக்கப்பட்டு, படையினரின் உதவியுடன் அங்கு பெரும்பான்மை மக்களை குடியேற்றும் திட்டம் துரிதமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு படையினர் உரிய பாதுகாப்பு அரண்களை அமைத்தும், ஊர்காவல் படையை உருவாக்கி, அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி அவர்கள் மூலமாகப் பாதுகாப் பளித்தும் உறுதுணை புரிகின்றனர்.

1998ஆம் ஆண்டு வரை திருகோணமலையில் சுமார் தொண்ணூ று திட்டமிட்ட குடியேற்றக் கிராமங்கள் நிறுவப்பட்டு அவற்றின் பெயர்களும் மாற்றப்பட்டிருக்கின்றன. பல பாரம்பரிய தமிழ்க் கிராமங்களின் பெயர்கள் இன்று மறைக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாகப் புதிய பெயர்கள் இடப்பட்டுள்ளன. நான் "ஹன்சாட்" பதிவுக்காக இவ்வாறான தொண்ணூறு பெயர் மாற்றங்களைக் கொண்ட பட்டியலொன்றை இங்கு சமர்ப்பிக்க விரும்புகின்றேன். விடயம் இத்துடன் முடிந்துவிடவில்லை, பேரினவாதிகள் தமிழர்களின் தாயக மண்ணைச் சூறையாடும் நடவடிக்கைகளை, அரசியல்வாதிகள் மற்றும் படையினரின் ஆசியுடன் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே,

எமது பகுதிகளின் விவசாய நிலைமை தொடர்பாக நான் இங்கு சில விடயங்களைக் கூற விரும்புகின்றேன். யாழ். குடாநாடு இன்று அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகக் கூறப்பட்டாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அங்கு செல்வதற்கு ஒழுங்கான போக்குவரத்து வசதிகள் எதுவுமில்லை. இதனால் குடாநாட்டு விவசாயிகளுக்கு தேவையான விவசாய உள்ளீடுகளான விதைகள், இரசாயன உரம், கிருமி நாசினிகள், களை நாசினிகள், போன்றவை தேவையான நேரத்தில் போதியளவில் கிடைப்பதில்லை. உரிய போகங்களில் இவை கிடைக்காமல், பின்னர் போதியளவில் கிடைத்தாலும் பிரயோசனமில்லை. அனேகமாக இவ்வாறுதான் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. யாழ். குடாநாட்டில் அறுவடை நடைபெறும்போதுதான் கொழும்பிலிருந்து அனுப்பப்படும் விவசாய உள்ளீடுகள் அங்கு போய்ச் சேருகின்றன.

இவ்வாறு பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் விவசாயத்தை மேற்கொள்ளும் யாழ். குடாநாட்டு விவசாயிகளின் விளைபொருட்களை, தென்னிலங்கையில் சந்தைப்படுத்தும் வசதிகள், அரசு குடாநாட்டைக் கைப்பற்றி நான்கு ஆண்டுகளாகியும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை. எனவே, அரசு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் போன்ற நிறுவனங்களின் மூலம் அவர்களின் விளை பொருள்களைக் கொள்வனவு செய்து, தெற்கில் சந்தைப்படுத்தும் வாய்ப்பினை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். உரிய சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டால் எமது யாழ்ப்பாண விவசாயிகள் முழு இலங்கைக்கும் தேவையான வெங்காயம், உருளைக்கிழங்கு, தானிய வகைகள் மற்றும் திராட்சைப் பழம், மாம்பழம், வாழைப்பழம், போன்ற குடாநாட்டுப் பழவகைகள், மரக்கறி வகைகள், கிழங்கு வகைகள், செத்தல் மிளகாய் போன்ற பல்வேறு வகையான விவசாயப்பொருட்களையும் உற்பத்தி செய்து தருவார்கள். இதன் மூலம் வெளிநாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி செய்வதற்காகச் செலவு செய்யப்படும் பெருமளவு அந்நியச் செல வாணியை நாம் சேமிக்க முடியும். எமக்குத் தேவையானவை போக மிகுதியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலவாணியை சம்பாதிக்க முடியும்.

தற்போது இங்கு சந்தையில் ஒரு கிலோ கிராம் வெங்காயம் 60 ரூபா தொடக்கம் 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. இன்று அவுஸ்திரேலியா, ஒல்லாந்து, இந்தியா, பாகிஸ்தான், போன்ற நாடு களிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படுகின்றது. விரைவில் இங்கிலாந்திலிருந்தும் வெங்காயம் இறக்குமதி செய்யப்படவிருப்பதாக நாங்கள் அறிகின்றோம். பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிலிருந்து பெருமளவு பணத்தைச் செலவு செய்து, நம் நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை விமான மூலமாகவும் கப்பல் மூலமாகவும் இறக்குமதி செய்வதை விடுத்து, எமது விவசாயி களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்து, அவர்களின் உற்பத்திகளை கொள்வனவு செய்து, அக்குடும்பங்கள் வாழ்வதற்கு வழிவகை செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று நான் அரசையும் கௌரவ அமைச்சர் அவர்களையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். யாழ்ப்பாணத்தில் இன்று ஒரு கிலோக்கிராம் வெங்காயம் பத்து முதல் பதினைந்து ரூபாவாகவும், திராட்சை மற்றும் வாழைப்பழம் கிலோ கிராமொன்று பதினைந்து ரூபா முதல் முப்பது ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது. இதேபோல், அங்கு சந்தை வசதிகளின்மையால் இன்னும் பல விவசாய விளைபொருட்களும் அவற்றின் அறுவடைக்காலங்களில் மிகவும் மலிவாக விற்கப்படுகின்றன. அல்லது விற்கப்பட முடியாமல் அழுகி நாசமடைகின்றன. இதனால் விவசாயிகள் நட்டமடைந்து கடனாளிகளாவதுடன் சிலர் தற்கொலை செய்து கொள்ளும் நிலைமைக்குக் கூடத் தள்ளப்படுகின்றார்கள். அல்லது விவசாயத்தைக் கைவிடும் நிலைக்கு அவர்கள் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கிலே அரச கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் யூரியா உரப் பாவனைக்குத் தடை விதிக்கப் பட்டிருக்கின்றது. பயிர்களுக்கு மிக முக்கியமான நைதரசனைக் கொடுக்கக்கூடிய செயற்கை வளமாக்கிகளுள் யூரியா உரத்திற்கு இணையாக வேறெந்த வளமாக்கியுமே இல்லை. அமோனியம் சல்பேற் எனும் செயற்கை வளமாக்கியில் நைதரசன் ஓரளவுதான் இருக்கின்றது. அந்தப் பகுதிக் காணிகளுக்கு அதனைத் தொடர்ந்து பாவிப்பதனால், நிலம் நஞ்சாகி, அதில் பயிர் செய்ய முடியாத நிலைமை இன்று ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தினர் தமக்கு வேண்டிய வழமையான ஆயுதங் களை மட்டுமல்லாமல், பெரிய 'ஆட்டிலெறி ஷெல்' களைக்கூட ஏன் விமானங்களைக்கூட கப்பல், கப்பலாக இறக்குமதி செய்துகொண்டி ருக்கின்ற பொழுது, அவர்களால் தமக்குத் தேவையான ரீ.என்.ரீ பிளாஸ்டிக் வெடி மருந்துகள் போன்றவற்றையும் வெளிநாடுகளி லிருந்து கப்பல் மூலமாக இறக்குமதி செய்ய முடியாதா? நான் அறிந்த வரையில் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பினரிடம் இன்னும் பல வருடங்களுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான வெடிமருந்துகள் கையிருப்பில் உள்ளன. இந்நிலையில், புலிகள் இயக்கத்தினர் குண்டுகளைத் தயாரிப்பதற்கு ஐ.ஆர்.ஏ கெரிலாக்களைப் போல் யூரியாவை நம்பிக் கொண்டிருப்பதாக படையினர், சிறுபிள்ளைத்தனமாக நம்பி யூரியா உரத்திற்கு தடை விதிப்பது, துன்பத்தில் துயருறும் வடக்கு - கிழக்கு விவசாயிகளை மேலும் துன்பத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கின்றது.

டீசல், மண்ணெண்ணெய், உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் ஆகியன வும் போதுமான அளவு வடக்கு - கிழக்கு விவசாயிகளுக்கு நியாய விலைகளில் கிடைக்க வழிவகைகள் செய்யப்பட வேண்டும், கௌரவ அமைச்சர் அவர்கள் நான் குறிப்பிட்ட சில விடயங்களில் கூடிய அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, கௌரவ அமைச்சர் அவர்களுக்கும் கௌரவ பிரதி அமைச்சர் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்து விடை பெறுகின்றேன். நன்றி வணக்கம்.

அரசின் திட்டமிட்ட குடியேற்றங்கள் - திருகோணமலை

01. சிறிமாபுர
02. மோறாமை
03. சாலியபுர
04. அபயபுர
05. பொத்தவெல
06. அக்போபுர
07. மிகிந்தபுர
08. மோறமை
09. 1ஆம் 2 கொலணி
10. நாலாம்கட்டை
11. பொத்தலவெல
12. 3ஆம் கட்டை
13. ஆண்டான் குளம்
14. றெட்டுவெல
15. 5ஆம் கட்டை
16. வேல்க்கம் விகாரை
17. ஆலைக்காட்டி
18. 13ஆம் கட்டை
19. பத்தாம் கட்டை
20. கருந்தகம
21. 97ஆம் கட்டை
22. மொறவேவா
23. பெக்கிலி கடவெல
24. 98ஆம் கட்டை
25. மயிலவேவ
26. தெள்ளியாவ
27. பராக்கிரமபுர
28. நாமல்வத்த
29. சமந்தபுர
30. 92ஆம் 93ஆம் கட்டை
31. வானலை
32. கோயில் கடவெவ
33. கித்துளுத்து
34. நாச்சிக்குடா
35. சீனி ஆலையடி
36. அளுத்ஓய
37. நாலந்த
38. ஜெயந்திபுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. லக்கிவிஜயபுர
40. கமதல்சுபுர
41. கயபுர
42. சிங்கபுர
43. குறிஞ்சா குளம்
44. தெகிவத்த
45. கோப்பேகடுவ மாவத்த
46. கொறவப்பொத்தானை
47. நிலாப்பொல
48. அடம்பன்
49. ஆறாம் கட்டை
50. அரிப்பு
51. கல்லறாவ
52. இருபதாம் கட்டை
53. கல்லாறு
54. கிம்புல்பிட்டிய
55. சுமதிபுர
56. அலிஒலுவ
57. மாகாதிவுலவேவ
58. புலாத்திபுர
59. சரசுரா
60. வேப்பம்குளம்
61. கோயில்வத்த
62. சிறிபுர
63. மங்கிபிறிச்
64. பாலையூற்று
65. மட்கோ
66. லங்கறி கடவைப்பு
67. கப்பல்துறை
68. சேருவில
69. கோமரன் கடவல
70. சுமித்திராகம
71. கந்தளாய்
72. பதவிய
73. மகாவலிகம
74. பன்குளம்
75. தட்டிச்சாக்குளம்
76. அல்லை
77. கிபுள்கடவெல
78. பன்மதவாச்சி
79. மைந்தபுர
80. மண்டலபுர
81. முத்துக்கம
82. கல்கட்டுவ
83. தானியகம
84. கோட்பே
85. கோம்புக்கட்டுவ
86. சோமாபுர
87. உள்பத்து
88. கல்கனிவெல
89. கல்மேறுயல
90. கவாட்டிக்குடா

04 டிசம்பர் 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு

(93ம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணிப் புதைகுழி விவகாரம் பற்றிச் சர்வதேச மன்னிப் புச்சபை, மனித உரிமை அமைப்புக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அரசு அலட்சியம் செய்கிறது.

- என்ற தலைப்பில் 01 டிசம்பர் 1998 அன்று பாராளுமன்றில் கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்கள் உரையாற்றியதை அடுத்து, இந்த விடயம் தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எழுதிய கடிதம் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் நிழற்பிரதி அடுத்த பக்கத்தில் இணைக் கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் அப்பொழுது சர்வதேச மன்னிப்புச்சபைக்கும், வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் கையளிக்கப்பட்டது குறிப் பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුවේ මේසය මත තබන ලද ලිපිය :
பாராளுமன்றத்தில் மேசைமீது வைக்கப்பட்ட கடிதம் :
Letter tabled :

15th July 1998

Her Excellency the President,
Presidential Secretariat,
Colombo.

Your Excellency,

It was stated in open courts that four hundred bodies of Tamils have been buried in a mass grave at Chemmany in the Jaffna peninsula by the accused in the Krishanthi murder trial. Even after such a statement was made in open courts, it is shocking that the government is ignoring this and has created a feeling of a loss of confidence.

Instead of finding a permanent solution to the ethnic problem, the government has moved far away and its intention to persue the war stands upmost. Human Rights, the worthiness of human life, the guarantee for human lives have all been placed in bay for victory in war.

More than six hundred persons had disappeared in the Jaffna peninsula alone. The Amnesty International had said that all of them have been killed. The government has not only failed to repudiate this statement with authentic evidence has not undertaken any meaningful steps in this direction. The undertaking given by your Excellency to a delegation of our party to establish a special commission of inquiry to inquire into the disappearance has not been fulfilled up-to-date even though six months have elapsed.

It is at this stage the shocking information that the bodies of those killed have been buried at Chemmany and that they are prepared to identify the places of burial was revealed by the accused in the Krishanthi murder trial before the Magistrate in open courts. Mr. S. Sivathasan, MP speaking on the debate of the extension of the emergency said that the accused in the Krishanthi murder trial had said in open courts that accused could identify the places of burial of four hundred Tamils in Chemmany, Jaffna. He urged the government to exhume the bodies and conduct inquiries.

The government is duty bound to examine all information related to hump suffering of such gigantic magnitude. We are surprised as to how th government could ignore such acts as false allegations.

The killing of twenty five civilians by Arial attack in Suthantharapuram, Kilinochchi and the death of three civilians by the Arial attack on 29.06.1998 at Konavil, Kilinochchi, incidents which were brought to the notice of the goverament is disappointing.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It has become the practice of the government to treat the suffering of the Tamil people as usual and normal events and delay taking remedial action. The government is acting thus while saying that the present war is to liberate the Tamil speaking people.

We the undersigned Members of Parliament of EPDP urge the government to take Immediate action as regard to those buried at Chemmany.

Sgd: Ramesh Nadarajah
Member of Parliament

Sgd: M. Chandrakumar
Member of Parliament

°කථාව, අවසානයේ පළ කර ඇත.
உரையிறுதியில் தரப்பட்டுள்ளது.
Reproduced at end of speach.

1854

: S Sivathasan
mber of Parliament

Sgd: S. Thangavel
Member of Parliament

: U. Baskaran
mber of Parliament

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பத்திரிகையாளர்கள் காரணமின்றிக் கைது செய்யப்படுவது, தடுத்து வைக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

கௌரவ தவிசாளர் அவர்களே,

அஞ்சல் தொலைத்தொடர்புகள், தொடர்புசாதன அமைச்சின் வரவு செலவுத்திட்டக் குழுநிலை விவாதத்தில் ஈ.பி.டி.பி கட்சியின் சார்பில் சில விடயங்களை இந்த அவையில் முன்வைக்க கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஜனநாயக கட்டமைப்பைத் தாங்கும் தூண்களில் ஒன்றுதான் பத்திரிகைத்துறை. நம் நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிப் பேசப்படுகின்ற அளவுக்கு, அதனைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டப்படுவதில்லை. பத்திரிகைத் துறையானது உலகில் பல மாற்றங்களை ஏற்படுத்தயுள்ளது. வாட்கேட் ஊழல் முதல் பில் கிளிங்டனின் லீலைகள் வரை, அவற்றைப் பத்திரிகைகள் தாம் முன்னின்று அம்பலப்படுத்தியிருக்கின்றன. அது போல், நம் நாட்டில் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வருவதற்கும் பத்திரிகைகள் தாம் பங்கு வகித்திருக்கின்றன. ஆனால், பொதுசன ஐக்கிய முன்னணியில் ஆட்சியிலும் பத்திரிகைகளுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

சென்ற ஆட்சிக்காலத்தில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் 'நிச்சட் த சொய்ஸாவின்' கொலையாளர்களை, அன்றைய எதிர்க் கட்சியாகவிருந்த இன்றைய ஆளும் கட்சி உரமாகக் கண்டித்தது. அவ்வாறு கண்டித்தமை வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. ஆனால், இன்று என்ன நடக்கின்றது? தமிழ்ப் பத்திரிகையாளர்கள் காரணமின்றிக் கைது செய்யப்படுகின்றார்கள். தடுத்து வைக்கப்படுகின்றார்கள். கைது செய்யப்பட்டவர்கள் ஒரு நாள் - இரண்டு நாட்களல்ல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதக்கணக்காகத் தடுத்து வைக்கப்பட்டார்கள். அவர்களைக் கைது செய்யும்போது, "ஆதாரமிருக்கின்றது, அதுதான் கைது செய்கின்றோம்" என்று கூறினார்கள். ஆனால், மாதக்கணக்காக 'உள்ளே' வைத்திருந்துவிட்டு, ஆதாரமில்லாத நிலையில் அவர்கள் விடுவிக்கப் பட்டிருக்கின்றார்கள்.

"வீரகேசரி" பத்திரிகையின் இரு பத்திரிகையாளர்களைக் கைது செய்து தடுத்து வைத்திருந்தனர். அதில் ஒருவர் திரு மாணிக்கவாசகம் அவர்கள் ஆவர். அவரை ஏன் கைதுசெய்தனர்? நாம் அது பற்றிக் கேட்டபோது "ஆதாரம் இருக்கின்றது அதுதான் கைது செய்தோம்" என்று கூறப்பட்டது. அவரைக் கைதுசெய்தவர்கள் அவரிடம் கேட்ட கேள்வி "நீங்கள் மாணிக்கவாசகமா அல்லது மாணிக்கவாசகரா?" என்பதுதான், தாம் யாரைக் கைதுசெய்தோம் என்று கூடத் தெரியாத நிலையில், பொறுப்பற்ற விதத்தில் அவரைக் கைது செய்தார்கள். பல வாரங்களாக எந்தவித விசாரணையும் இன்றி 'உள்ளே' வைத்துவிட்டு மிகவும் நிதானமாகவே அவரை விடுதலை செய்தனர்.

இதேபோல 'வீரகேசரி' பத்திரிகையைச் சேர்ந்த இன்னுமொரு பத்திரிகையாளரான ஸ்ரீகஜனும் கைது செய்யப்பட்டார். மூன்று மாதங்கள் அவர் தடுத்து வைக்கப்பட்டார். அவருடைய கைது சம்பந்தமாக நாம் விசாரித்த போது "ஆதாரம் இருக்கின்றது" என்றனர்: பின்னர் தாமாகவே அவரை விடுதலை செய்தனர். சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு உண்டு என்று கூறப்படுவது, இத்தகைய பொறுப்பற்ற செயல்களை நியாயப் படுத்துவதற்காகவே என்று நாம் கருதுகின்றோம். நாடறிந்த பத்திரிகையாளர்களை எந்தவித ஆதாரமும் இல்லாமல் கைதுசெய்ய வேண்டிய அவசியம் என்ன? கைதுசெய்வதற்கான ஆதாரம் உண்டா, என்று ஆராய்வதற்கிடையில் இவர்கள் நாட்டைவிட்டு ஓடிவிடவா போகிறார்கள்?

பொறுப்புமிக்க பத்திரிகைக் காரியாலயங்களில், பொறுப்பான பதவிகள் உள்ளவர்களை. தெருவில் போகின்றவர்களைக் கைதுசெய்வது போல் பிடித்து உள்ளே போடுகின்றனர். தமிழ்ப் பத்திரிகையாளரும் இந்துசமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளருமான திரு. தெய்வநாயகம்பிள்ளை தற்பொழுது தடுப்புக் காவலில் இருக்கின்றார். ஜனாதிபதி அவர்களால் தொல்லை தவிர்ப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதன் தலைவராக இருப்பவர் கௌரவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி அவர்கள். அவரது அமைச்சின் கீழ் கடமையாற்றுபவர்தான் திரு. தெய்வநாயகம்பிள்ளை. வெறுமனே சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவரை, இந்தத் தொல்லைத் தவிர்ப்புக் குழுவினால் மீட்க முடிந்ததா? இல்லை. அந்தக் குழுவினாலும் அவரை மீட்க முடியவில்லை.

உடல்ரீதியாக ஒருவரைக் கொல்வதுதான் கொலையல்ல. உள ரீதியாக ஒருவரைக் கொடுமைப்படுத்துவதும், அவருடைய பெயருக்கு அப கீர்த்தியை ஏற்படுத்துவதும்கூட, கொலைதான். உடல் ரீதியான கொலையைவிட இது மோசமான கொலையாகும். இன்று, தமிழ்ப் பத்திரிகையாளர்கள் உளவியல் ரீதியாக கொலைசெய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கைதுசெய்வதற்கான காரணமின்றி, ஆதார மின்றி தாம் யாரைக் கைதுசெய்கின்றோம். என்ற தெளிவுமின்றிக் கைதுகளைச் செய்தவர்களுக்கெதிராக அரசு என்ன நடவடிக்கையை, எடுத்திருக்கின்றது என்பதைப் பற்றி நாங்கள் இந்த அரசிடமே வினவ விரும்புகின்றோம். தவறுகள் தொடர்ந்து நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டுமானால் அந்தத் தவறுகளுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால், தவறுகளை நியாயப்படுத்தும் செயல்கள் தாம் இன்று தொடர்கின்றன. தமிழ்ப் பத்திரிகையாளர்களைக் கைது செய்ததைக் கூட அரசாங்கம் நியாயப் படுத்தியது. தமிழ் மக்கள் அனைவரையும் சந்தேகப் பிராணிகளாக நடத்துகின்ற முறையின் ஓர் அங்கம் தான், தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டதும் அச்சுறுத்தப்பட்டதும் என்று நாம் கருதுகின்றோம்.

புலிகள் இயக்கத்துடன் தமது தொழில் ரீதியாகத் தொடர்புகொள்ளும் உரிமை பத்திரிகையாளர்களுக்கு இருக்கின்றது. ஆனால், தமிழ்ப் பத்திரிகையாளர்கள் என்றதும், அவர்கள் சந்தேகக் கண்கொண்டே பார்க்கப்படுகின்றார்கள். கொழும்பில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான தமிழ்ச் செல்வனின் பேட்டி வெளியானது. இரண்டு சிங்களப் பத்திரிகையாளர்கள் வன்னிப் பகுதிக்குச் சென்று, அவரைப் பேட்டி கண்டு வந்திருந்தனர். ஆனால், தமிழ்ப் பத்திரிகையாளர்கள் வன்னிக் காட்டுக்குச் சென்று வந்திருந்தால், அவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பது எங்களுக்குத் தெரியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பத்திரிகையாளர்கள், இனரீதியான கண்ணோட்டத்திற்குள் ளாக்கப்படுவதும் பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு ஆளாக்கப்படுவதும் இனிமேலும் தொடர்வதற்கு அனுமதிக்கப்படக்கூடாது. அவர்களைக் கைதுசெய்கின்றவர்கள் பத்திரிகை அலுவலகங்களுக்குள்ளே புகுந்து அவர்களைக் கைது செய்யப்படுவதற்கான காரணம் சம்பந்தப்பட்ட பத்திரிகையின் ஆசிரியருக்குக்கூட கூறப்படுவதில்லை. எவர் ஒருவரைக் கைதுசெய்யும் போதும், அவர்கள் கைதுசெய்யப்படுவதற்கான காரணத்தைத் தெரிவிப்பதுடன், அத்தாட்சி வழங்கி அவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் கொடுக்கப் பட்டுள்ளதாக, மேதகு ஜனாதிபதி அவர்கள் தெரிவித்திருந்தாரென நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம். அந்தப் பத்திரிகைகளில் எழுதும் பத்திரிகையாளர்களைக் கைதுசெய்வது ஏன்? கைதானோர் எங்கு கொண்டுசெல்லப்படுகின்றனர் என்ற தகவல்களைத் தெரிவிக் காமலே சிவில் உடையில் உள்ள பொலிஸார் அவர்களைக் கடத்திச் செல்கின்றார்கள்.

மதுசூதனன் என்ற தமிழ்ப் பத்திரிகையாளர், நண்பர்களுடன் வீதியில் சென்றுகொண்டிருந்த பொழுது, சிவில் உடையில் வந்தோரால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். நாம் பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது, அங்குள்ள யாருக்குமே தெரிய வில்லை. குறிப்பிட்ட பத்திரிகையாளரின் உறவினர்களுக்குக் கூட, அவரைப் பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை. அவரைத்தேடி எல்லோரையும் அலையவிட்ட பின்புதான், தாம் கைதுசெய்ததை பொலிஸார் நிதானமாக தெரியப்படுத்தியிருக்கின்றனர். இந்த அத்து மீறல் கைதுகளுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கின்றது? ஏன், பத்திரிகையாளர்களைக் கடத்திச் செல்ல வேண்டும். இவர்களைக் கைது செய்பவர்கள் தம்மை யாரென்று அறிமுகப்படுத்தி, உரிய முறையில் கைதுசெய்வதற்கு தவறுவது ஏன்? இது விடயத்தில் ஜனாதிபதி அவர்கள் இட்ட உத்தரவுக்கு என்னவாயிற்று? உத்தர வாதங்கள், வாக்குறுதிகள் யாவும் இங்கு ஏட்டுச் சுரக்காய்களாகவே இருக்கின்றன. இவற்றால் புண்ணியமில்லை போல் தெரிகின்றது. உத்தரவுகளையிட்டால் மட்டுமே போதாது. அந்த உத்தரவுகள், விதிகள் மீறப்படும் பொழுது, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதுதான் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ தவிசாளர் அவர்களே,

இன்னுமொரு விடயத்தை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும், தெற்கில் ஒரு சிங்களப் பத்திரிகையாளர் சாதாரணமாகத் தாக்கப் பட்டால்கூட, உடனே பத்திரிகையாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புகள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்து கின்றன. தமது உரிமைகள் பறிக்கப்பட்டதாக ஆக்ரோசமாகக் குரல் கொடுக்கின்றன. அண்மையில் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டபோது, "அதற்கு ஆதாரம் இருக்கின்றது." அதனால்தான் நாம் கைது செய்தோம். என்று பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதும், இவர்களின் குரல்கள் மௌனித்துப் போய் விட்டன. பாரபட்சமான இனவாத அடிப்படையிலான உரிமைக் குரல்கள் எமக்குக் கவலையளிக்கின்றன. தமிழ்ப் பத்திரிகையாளர்கள் தமிழர்களின் நலன்கள், சமகாலப் பிரச்சினைகள், உரிமைகள் போன்றவற்றை வெளிப்படுத்தி எழுதும்போது. சில இனவாதப் பத்திரிகைகள் தமிழ்ப் பத்திரிகையாளர்களை இனவாதிகளாகவும் புலிகளாகவும் சித்தரிப்பதற்கு முற்படுகின்றன.

இதேநேரத்தில், இன்று கொழுந்து விட்டெரியும் இனப்பிரச்சி னையை, இன்னும் தூண்டிவிடவும் போரை நியாயப்படுத்தவும் தமிழ் மக்களின் போராட்டங்களின் நியாயங்களைக் கொச்சைப்படுத்தியும் இனவாத அடிப்படையிலான சில பத்திரிகைகள் இனவாதத்தை விதைத்து வருவது கவலையளிப்பதாக உள்ளது. பத்திரிகைச் சுதந்திரம் என்ற பெயரில் இனவாதத்தை தூண்டும் பத்திரிகைகளை இனங்கண்டு, அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இப்படியான பத்திரிகை நிறுவனங்கள் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டும். பொறுப்பற்றவிதத்தில் எழுதப்படும் விடயங்களால் எதிர்காலச் சந்ததியிடமும் இன்றைய கொழுந்துவிட்டெரியும் இனப் பிரச்சினையை கையளித்துவிட்டுச் செல்லும் சூழ்நிலையே உருவாகும் என்பதை இந்தப் பத்திரிகைகள் உணர வேண்டும். இப்படியானவர் களை வரலாறு மன்னிக்கப் போவதில்லை.

கௌரவ தவிசாளர் அவர்களே,

'தணிக்கை' இன்று காலவரம்பின்றி தொடர்ந்துகொண்டிருக்கின்றது. இந்தத் தணிக்கைக்காகக் கூறப்படும் காரணங்கள் யாவற்றையும் அர்த்தமற்றதாகவே நாங்கள் கருதுகின்றோம். இலங்கை ஒலிபரப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுத்தாபனத்துக்கு ஊடாக பி.பி.சி வானொலி ஒலிபரப்பு மிகவும் தெளிவாக வெளியிடும் செய்திகளை உள்ளூர் பத்திரிகைகள் மட்டும் வெளியிட முடியாமல் இருக்கின்றன. ஏன் இந்த முரண்பாடு? அரச வானொலி அலைவரிசையின் ஊடாக அரசின் தணிக்கைகள் முறியடிக்கப்பட்டுவிட்டன. பி.பி.சி வானொலி ஒலிபரப்பை நாடெங்கும் கேட்கக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறாயின், ஏன், இந்த செய்திகளை உள்ளூர் பத்திரிகைகளில் வெளியிட முடியாமல் இருக்கின்றது? தற்போது வெளிநாட்டு செய்திகளுக்கும் தணிக்கை தகர்த்தப்பட்டுள்ளதாக சொல்லப்படுகின்றது. அரசு தளர்த்தாவிட்டாலும்கூட, சகல செய்திகளும் வெளியுலகிற்கு தெரிந்துவிடுகின்றன. கிளிநொச்சியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல் பற்றிய செய்திகள் உடனுக்குடன் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களினால் வெளியிடப்பட்டன. இராணுவ இரகசியங்கள் தெரிந்து விடுமென்று 'தணிக்கை' க்கு காரணம் கூறப்படுகின்றன. புலிகளின் "ஸ்ஹொட் ஸ்பிறிங்" என்ற ஆங்கிலப் பத்திரிகையில் இலங்கை அரசு கொள்வனவு செய்யவிருக்கும் ஆயுதங்களை பட்டியலே வெளியாகியிருக்கின்றது. ஆகவே, இராணுவ இரகசி யங்களை இங்குள்ள பத்திரிகைகள் மூலமாகத்தான் புலிகள் அறிய வேண்டுமென்பதில்லை. புலிகளின் வெளியீடுகளின் மூலம்தான் இங்குள்ள பத்திரிகைகள் அவைபற்றி அறிந்து இங்கு வெளியிடுகின்றன.

கௌரவ தவிசாளர் அவர்களே,

படையினரின் மனநிலை பாதிக்கப்படக்கூடாது என்றும் பத்திரிகை தணிக்கைக்கு ஒரு காரணம் கூறப்படுகின்றது. வன்னியில் உள்ள படையினர் பி.பி.சி சிங்களச் சேவையினைக் கேட்கின்றனர். அதை விடவும் புலிகளே இன்று சிங்கள வானொலிச் சேவையை தொடங்கி விட்டனர். எனவே, செய்திகள் மக்களுக்கு எட்டுவதை அரசு எந்த முனையாலும் தடை செய்ய முடியாதென்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அரசினால் செய்ய முடிந்தது என்னவென்றால், உள்ளூர் பத்திரிகையாளர்களின் கைகளைக் கட்டிப்போட்டு விட்டி ருப்பதுதான், தீக்கோழி தனது எதிரிகளிடமிருந்து தப்புவதற்காக, பாலைவன மணலில் தனது தலையை மட்டும் மறைத்துவிட்டு, தான் மணலில் முழுமையாக மறைந்துவிட்டதாக முட்டாள்தனமாக நினைப்பது போன்றே அரசின் பத்திரிகைத் தணிக்கை இருக்கிறது. எனவே அரசு இந்த அர்த்தமற்ற பத்திரிகைத் தணிக்கையை நீக்குவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சபையிலே கோரிக்கை விடுக்க விரும்புகின்றேன்.

அடுத்ததாக 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தினால் வெளியிடப்படும் 'தினகரன்' தமிழ்த் தினசரிப் பத்திரிகை தொடர்பான விடயத்தை நான் குறிப்பிட விரும்புகின்றேன். 'தினகரன்' பத்திரிகை அலுவலகம் 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தின் ஏனைய பத்திரிகை அலுவலகங்களுடன் ஒப்பிடப்படும் போது, மிகவும் மோசமான நிலையில் இருப்பதை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

அங்கு பத்திரிகையில் கடமையாற்றுகின்ற ஊழியர்களுக்கு இருக்கக் கூடிய மேசை, கதிரைகள் மட்டுமல்லாது பல்வேறு அடிப்படைத் தேவைகளும்கூட இல்லாமலிருக்கின்றது. இது ஒரு பாரபட்சமான போக்கென்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இது போலவே ஊதியம் வழங்கும் விடயத்திலும் முரண்பாடான, பார பட்சமான போக்கு அங்கு காணப்படுகின்றது. ஒரே நிறுவனத்தில் கடமையாற்றுகின்ற பத்திரிகையாளருக்கிடையில் முரண்பாடான சம்பள விகிதம் பேணப்படுகின்றது. இவற்றை நிவர்த்திசெய்ய கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்ததாக, தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு வீடுகள் வழங்கும் நட வடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்று கௌரவ அமைச்சர் அவர்களிடம் நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். கொழும்பில் பணியாற்றும் பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகையாளர் கள் வடக்கு - கிழக்கிலிருந்து வந்தவர்களாகவே இருக்கின்றார்கள். அவர்களது பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் வகையில், நகரில் அல்லது நகருக்கு அருகாமையில் உள்ள இடங்களிலேயே வீட்டு வசதிகளை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். அதுபோல், பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தையும் விரைவுபடுத்த வேண்டுமென்று கௌரவ அமைச்சர் அவர்களிடம் நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன்.

அடுத்து, தபால்சேவை பற்றிய சில விடயங்களை இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன். வெளிநாடுகளிலிருந்து வரும் அல்லது வெளிநாடு களுக்கு அனுப்பப்படும் தமிழ் மக்களின் கடிதங்கள் பலவும் காணாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதாகவும் அல்லது அவை உடைக்கப்பட்டு வருவதாகவும் எமக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது குறித்து கௌரவ அமைச்சர் அவர்கள் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றேன். வடக்கிலுள்ள பல தபால்க்கந்தோர்களுக்கான தபால் குறியீடுகள் - Postal Codes - இன்னும் வழங்கப்படவில்லை. 1999ஆம் ஆண்டிலாவது அவற்றிற் குரிய தபால் குறியீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன்று தபாலகங்கள் ஊடாக அனுப்பப்படும் சாதாரண தபால் கட்டளைகள் மூலமாக அதிகளவு பணத்தை அனுப்ப முடியாமல் இருக்கின்றது. இந்த நிலையை மாற்றி தபால் கட்டளைகளின் மூலம் இப்போது உள்ளதைவிட மேலும் கூடுதலானளவு பணத்தொகைகளை அனுப்பக்கூடிய வசதி ஏற்படுத்தப்படல் வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

வடக்கு - கிழக்கில் சொந்தக் கட்டிடங்கள் அற்ற நிலையில் பல தபாலகங்கள் இன்று இயங்கி வருகின்றன. அவற்றிற்கென சொந்தக் கட்டிடங்களை அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். வடக்கு - கிழக்கில் பல இடங்களில் மக்கள் முத்திரைகளை வாங்கவும் கடிதங்களை அஞ்சலிடவும் பல மைல் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலைமை இருக்கின்றது. அவ்வாறான இடங்களில் உபதபால் நிலையங்கள், முகவர் தபால்நிலையங்கள், அஞ்சல் பெட்டிகள் போன்றவற்றை அமைக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் குறிப்பாக வன்னி மற்றும் யாழ்.குடாநாட்டுக்கான தபால் விநியோகம் சீராகவும் துரிதமாகவும் நடைபெறுவதிலுள்ள தடைகளை அகற்றி, அங்குள்ள தபால்சேவையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அது இப்பொழுது பாரிய முன்னேற்றம் அடைந்துள்ளதென்றா கூறமுடியும். கௌரவ அமைச்சர் அவர்கள் இந்த விடயத்தில் மகத்தான சாதனை படைத்துள்ளார். வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில் அங்கு ரெலிகொம் நிறுவனம் வளர்ச்சி நிலையைக் கண்டுள்ளது. ஆனால், ரெலிகொம் நிறுவனத்தின் நிர்வாகம்தான் எமக்குப் பிரச்சினையாக உள்ளது. அதாவது, ஊழல் நிறைந்த ஒரு நிர்வாகமே அங்கு காணப் படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் புதிய தொலைபேசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கல்களின்போது நிறைய ஊழல்கள் நடைபெற்றிருப்பதை ஏற்கனவே நாங்கள் கௌரவ அமைச்சரவரின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கின்றோம்.

கௌரவ தவிசாளர் அவர்களே,

தொலைபேசி கட்டண விகிதங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இன்று வெளிநாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கை மிகவும் கூடுதலான கட்டணங்கள் அறவிடப்படுவதைக் காண முடிகின்றது. அதைவிட வாடகை, ஜீ.எஸ்.ரீ. பாதுகாப்பு அறவீடு என்று வேறு பலவிதமான கட்டணங்களும் பாவனையாளர்களிடம் அறவிடப்படுகின்றன. ஆகவே, சர்வதேச தொலைபேசிக் கட்டணங்கள் உட்பட உள்ளூர் அழைப்புக்களுக்கான கட்டணங்களைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கௌரவ அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்ததாக, 'ரூபவாஹினி' மற்றும் 'ஐ.ரி.என்' தொடர்பான விட யங்களை இச்சபையில் முன்வைக்க விரும்புகின்றேன். 'ரூபவாகினி'யில் விரைவாக இரண்டாவது அலைவரிசை ஒன்று ஆரம்பிக்க இருப்பதாக நாங்கள் அறிகின்றோம். இதில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு உரிய இடம் அளிக்கப்பட வேண்டும். தமிழ் நிகழ்சிகளுக்கு உரிய இடம் அளிக் கப்பட வேண்டுமென்று உத்தரவாதம் அளித்தால் மட்டும் போதாது. தமிழ் நிகழ்ச்சிகளுக்கு எந்தளவு நேரம் ஒதுக்கி கொடுக்கப்படும் என்பது பற்றிய உத்தரவாதத்தையே நாம் கௌரவ அமைச்சரிட மிருந்து எதிர்பார்கின்றோம். 'ரூபவாஹினி', 'ஐ.ரி.என்' ஆகிய தொலைக் காட்சி நிறுவனங்களின் தமிழ் நிகழ்ச்சிகளை தயாரித்து அளிப்பதற் கும், இயக்குவதற்கும் போதுமான தமிழ் பேசும் ஊழியர்கள் இல்லை. எனவே, அந்த நிறுவனங்களின் தமிழ் பேசும் ஆளணியினரை நியமிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற எமது கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன்.

இந்த இரண்டு ஒளிபரப்பு நிறுவனங்களிலும் ஒளிபரப்பப்படும் சிங்கள நிகழ்ச்சிகளுடன் ஒப்பிடும்பொழுது, தமிழ் நிகழ்ச்சிகளுக்கு குறைவான நேரமே ஒதுக்கப்படுகின்றது என்ற பரவலான குற்றச்சாட்டு தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. இந்நிலைமைகளைப் போக்க கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் தொலைக்காட்சிகளில் தமிழ்மொழி மூலமான ஒளிபரப்புக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்படும் அதிக அளவு நேரம் ரூபவாஹினி, ஐ.ரி.என் போன்ற தொலைக்காட்சி நிறுவனங்களில் வழங்கப்படுவதில்லை. இதற்கான காரணத்தை அந்த நிறுவனங்களிடம் கேட்டால், தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்ய -Sponsor- பண்ணுவதற்கு எவரும் முன்வருகிறார்களில்லை. என்று காரணம் கூறப்படுகின்றது. ஆனால், தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களால் எப்படி தமிழ்மொழி நிகழ்ச்சிகளுக்கு அதிகளவு நேரத்தை ஒதுக்கி, நிறுவனங்களை இலாபகரமாக நடாத்திக்கொண்டு செல்லமுடிகிறது? என்ற கேள்விக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும். "மனமுண்டானால் இடமுண்டு" என்ற முதுமொழியை நான் இவ்வேளையில் உங்களின் ஞாபகத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தொடர்பான சில விடயங் களையும் நான் இங்கு முன்வைக்க விரும்புகின்றேன். தனியார் வானொலிகள் 24 மணிநேரமும் இயங்குகின்றன. இவை இலாபத்தில் இயங்கும் பொழுது, 'எஸ்.எல்.பி.சி' மட்டும் நஷ்டத்தில் இயங்கு கின்றது என்று ஏன் கூறப்படுகின்றது! அங்கு சரியான நிர்வாகமும் முகாமைத்துவமும் இல்லாமையே. இதற்கு அரசியல் தலையீடும் காரணமாக இருக்கலாம். நாடு முழுவதும் சிங்கள ஒலிபரப்பு தெளிவா கக் கேட்பதைப்போல், தமிழ் ஒலிபரப்பும் தெளிவாகக் கேட்க வகை செய்யப்படல் வேண்டும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையின் தேசிய வர்த்தகச் சேவைகளின் நிகழ்ச்சிகளை வடக்கு மாகாணத்தில் தெளிவாகக் கேட்கமுடிவதில்லை. மலையகத்திலும் இதே நிலைமைதான்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் ஊழியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்ற விடயமும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியது. இந்தத் தமிழ்ச் சேவையில் அறுபதுக்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்கள் முன்பு இருந்தனர். தற்பொழுது இந்த ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றது. இப்பொழுது இருபது ஊழியர்களே அங்கு இருக்கின்றனர். இந்த ஊழியர் பற்றாக்குறையில் மத்தியிலும் இந்த வானொலியின் தமிழ்ச் சேவை நிகழ்ச்சிகள் ஒலிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்றைய தமிழ்ச் சேவைப்பணிப்பாளர் திரு. மதியழகன் அவர்களை இச்சந்தர்ப்பத்திலே நான் பாராட்ட விரும்புகின்றேன். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்பப்பிரிவிலும் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் ஊழியர்களை உள்வாங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

'எஸ்.எல்.பி.சி' யின் செய்திகளை இன்று தமிழ் மக்கள் நம்புவதில்லை. தமிழ் மக்கள் மத்தியில் இலங்கை வானொலியின் செய்தி அறிக்கைகள் தொடர்பாக பல சுவையான கதைகள் இருக்கின்றன. இந்த வானொலியில் தமிழ்ச் செய்தி ஒலிபரப்பாகும்போது, தமிழர்கள் தமது வானொலிப் பெட்டிகளை மூடிவிட்டுச் செல்லும் சூழ்நிலையில்தான் இருக்கின்றார்கள். 'எஸ்.எல்.பி.சி' யின் தமிழ்ச் செய்திகள் அந்த அளவுக்கு நம்பகத்தன்மை உள்ளனவாக இல்லை. அரசாங்கத்தின் ஊது குழலாகவே அது செயற்படுகின்றது. எனவே, இந்த நிலைமையைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இன்று தமிழ்பேசும் மக்கள் மாத்திரமல்ல, சிங்கள மக்களும் வெளிநாடுகளில் இருந்து ஒலிபரப்பப்படுகின்ற சிங்கள, தமிழ் வானொலிச் செய்திகளை கூடுதலான ஆர்வத்துடன் கேட்கின்றனர். இதற்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டும். இன்று 'பி.பி.சி', 'ஐ.பி.சி' வெரிட்டாஸ் போன்ற வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் ஒலிபரப்பும் தமிழ்ச் செய்திகளையே இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் கேட்கும் நிலைமைகள் இருக்கின்றது. இன்றைய கணினி யுகத்தில் உண்மைகளை மூடி மறைத்துவிட முடியாது. 'எஸ்.எல்.பி.சி', 'ரூபவாஹினி', 'ஐ.ரி.என்', 'லேக்ஹவுஸ்', 'லங்கா புவத்' போன்ற அரச செய்தித் தொடர்புச் சாதனங்கள் ஒவ்வொன்றும் ஒரே செய்தியை ஒன்றுக்கொன்று முரணான முறையில் தருகின்றன. எனவே, இந்தச் செய்திகளை எப்படி நம்புவது என்பது தெரியாமல் மக்கள் குழம்பிப் போகின்றார்கள். ஆகவே, இந்த நிலைமைகளைப் போக்க கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கௌரவ அமைச்சர் அவர்களும் பிரதி அமைச்சர்களுக்கும் கௌரவ அமைச்சர் அவர்களின் அமைச்சுச் செயலாளர் அவர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு விடை பெறுகின்றேன் நன்றி. வணக்கம்.

15 டிசம்பர் 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இச் சபையில் நான் அழுத்திக் கூறுவது என்னவென்றால் உண்மையாகவே நீங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்கத் தயாராக இருக்கின்றீர்கள், அம்மக்களின் அபிலாசைகளை மதிக்கின்றீர்கள் என்றால், உடனடியாக தமிழ் பேசும் பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துவதுடன், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களையும் நியாயமான முறையில் அகற்றுதல் வேண்டும் என்பதே ஆகும். இல்லையேல் இந்நாட்டின் தேசிய இன முரண்பாடு மேன்மேலும் கூர்மையடைந்து, சமாதானத்துக்கான தூழ்நிலை ஒரு போதும் ஏற்படாது என்பதனை இச் சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். தமிழ் பேசும் மக்கள் தங்கள் இருப்புத் தொடர்பாக பன்நெடுங்காலமாக அச்சுறுத்தப்படுவது. உண்மையான சமாதானத்துக்கு பெரும் தடையாக இருந்து வருகின்றது என்பதை நாம் உணர்தல் வேண்டும். உங்களுடைய தாயக மண்ணை கபளீகரம் செய்ய நாம் ஒரு போதும் முனைந்ததில்லை. எமது மண்ணில் எமது மக்கள் வாழ்வதற்கான உரிமையை அவர்களுக்கு வழங்குங்கள் என்றே நாம் கேட்கின்றோம்.

---

29 நவம்பர் 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org